பருவம் 1 இதழ் 2 ஜூன் 2026

# மானிடவியல்

## அரையாண்டு இணைய ஆய்விதழ்

## தலையங்கம்

இருபதாம் நூற்றாண்டின் தலைசிறந்த தத்துவ மொழியியல் அறிஞர்களில் ஒருவரான லுட்விக் விட்கென்ஸ்டெய்ன் (Ludwig Wittgenstein) “என்னுடைய மொழியின் வரம்பு என்பது என் உலகு குறித்த பார்வையின் வரம்பு” என்கிறார். மொழியின் எல்லைகள், வரம்புகள் விரிவடைந்தால் மட்டுமே அம்மொழி பேசும் மக்களின் சிந்தனையும், பார்வையும் விரிவடையும். இக்கண்ணோட்டத்தில் காண்கின் தமிழில் மானிடவியல் அறிவியல் புலத்தின் எல்லைகள், சொல்வளங்கள்! மிகக் குறுகியதே. எனவேதான் மானிடவியலை தமிழில் பேச வேண்டிய, எழுத வேண்டிய கட்டாயச் சூழலில் நாம் இருக்கிறோம். சமூகம், பண்பாடு இவைகள் மானிடவியலின் முக்கிய ஆய்வுப் பொருள்களானாலும், இக்கருத்துக்கள் குறித்த சொல்லாடல்கள் சமூகச் சூழலில் பொதுவானதாய், மக்கள் தினசரி வாழ்க்கையில் தவிர்க்க முடியாமல் எதிர் கொள்ள வேண்டிய அவசியமும் இருக்கிறது. மானிடவியல் என்பது அனைவருக்குமானது என்கிறோம். இத்தகைய நிலையில்தான் மானிடவியலின் ஆய்வெழுத்துக்களை தமிழில் எழுத வேண்டும் என்கிற நோக்கினைக் கொண்ட பயணத்தில் அடுத்த மைல் கல் இது, இரண்டாவது இனையஇதழாக வெளிவருகிறது.

இன்று உலகம், தொழில்நுட்பமும் அது தொடர்பான அறிவியலுமே மனித சமூகத்தின் மேம்பாட்டிற்கான அனைத்தும் எனும் சிந்தனையைச் சுமந்து கொண்டு அதிவேகமாக ஓடிக்கொண்டிருக்கிறது. இதில் பண்பாடு, மதிப்பீடுகள், மனிதநேயம், அதிகாரம், பாகுபாடு, பன்மையம் போன்ற பரிமாணங்கள் குறித்த சமூகப் புரிதல்கள் புறந்தள்ளப்படுகின்றன அல்லது முழுவதுமாகப் புறக்கணிக்கப்படுகின்றன. இதுபோன்ற ஒரு சூழலில்தான், மேற்குறிப்பிட்ட கருத்தாக்கங்களை உள்ளடக்கிய மனிதச் சமூகம் பற்றிய மானிடவியல் எழுத்துக்கள் மிக அவசியமானத் தேவையாகிறது.

சங்க இலக்கிய நூல்கள் காட்டும் பண்டைய தமிழ்த் திணைக்குடிகளின் பலவகை ஒழுகலாறுகளை முற்றிலும் எதிர்மறையாக நோக்கிய திருவள்ளுவர், திருக்குறளில் அன்றைய

தமிழ்ச் சமூகத்திற்கு மாற்று விழுமிய ஒழுங்கமைப்பை வலியுறுத்தினார். விழுமியங்கள் ஒரு சமூகத்தின் நடத்தைகளை நெறிப்படுத்தும் பண்பாட்டுக்கூறுகள் என்கிற வகையில் மிக முக்கியமானவை. அவரது அனுமானங்கள் குறித்து விவாதிக்கும் கட்டுரை ஒன்று இதழில் இடம்பெற்றிருக்கிறது.

முழுமையான தமிழ் நாட்டு மீனவர்கள் வரலாறு இன்னும் எழுதப்படவில்லை என்பதை கோடிட்டுக்காட்டி, வழக்கமான வரலாற்றுச் சான்றுகளுடன், இனவரைவியல் தரவுகளும் சேர்த்து தமிழ் நாட்டு மீனவர்களின் வரலாற்றை மீளுருவாக்கம் செய்யவும், வாழ்வியலை விளக்கவும் துறையிடை ஆய்வு அணுகுமுறையுடன் எழுதப்பட்ட கட்டுரை ஒன்றும் இடம்பெற்றிருக்கிறது.

பின்நவீனத்துவம் குறித்த வெளியீடுகளும், கலந்துரையாடல்களும் தமிழ்ச்சூழலில் நடந்திருப்பினும், மானிடவியல் என்கிற அறிவுப்புலத்தில் அதன் தாக்கம் குறித்த கருத்தாக்கங்கள், எழுத்துக்கள் இல்லை எனலாம், பின்நவீனத்துவக் கோட்பாடு குறித்த விவாதங்களும், வளர்ச்சிப் போக்குகளும் மானிடவியல் அறிவுப்புலத்தில் தொடரும் நிலையில், தேவைக் கருதி இங்கே மானிடவியலும் பின்நவீனத்துவமும் கட்டுரை இடம்பெற்றுள்ளது.

பண்பாட்டுத் தனித்துவத்தையும், பன்மையத்தையும் இன்றும் வாழ்க்கையின் நடைமுறையாகக் கொண்டிருக்கும் தமிழ் நாட்டுப் பழங்குடிகள் குறித்து இரண்டு ஆய்வுக்கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன. ஒரு கட்டுரை காணி, மலையாளிகள் மற்றும் பிற பழங்குடிச் சமூகங்களில் உள்ள வழிபாட்டு முறைகளும், நம்பிக்கை அமைப்பொழுங்குகளும் குறித்து ஆராய்கிறது. மற்றது முதுவர் பழங்குடிகள் வாழ்வியலில் அவர்களின் மரபான ‘இளந்தாரிகள்மடம்’ எனும் இளையோர்கூடங்கள் இன்றும் வகிக்கும் முக்கியப் பங்கு குறித்துப் பேசுகிறது.

உலகின் மொத்த மக்கள் தொகையில் சரிபாதிக்கு மேல் நகரங்களில் வசிக்கின்றனர். கடந்த சில தசாப்தங்களாக அந்த எண்ணிக்கை அதிவேகமாகக் கூடிக்கொண்டிருக்கிறது. நகரங்களில் தினசரி மக்கள் பயன்படுத்தும் உட்கட்டமைப்பு வசதிகளில் முக்கியமான ஒன்று

கழிவுநீர் மேலாண்மை. கழிவுநீர் குறித்து மக்களிடையே அருவருப்பு, அசூயை உணர்வு உண்டு. கழிவுநீர் மேலாண்மை பற்றிய மக்களின் அறிதலும், அறிவும் சொற்பமே, எனவே இதை கவனப்படுத்தும் விதமாக, சென்னை பெருநகரின் கழிவுநீர் மேலாண்மை பற்றிய கட்டுரையும் அவசியம் கருதி சேர்க்கப்பட்டிருக்கிறது.

சமூக அறிவியல் கல்விப்புலங்களில் ஒரு தரமான ஆய்வுக்கட்டுரையை இன்றையச் சூழலில் தமிழில் எழுத ஆர்வமுள்ள இளம் ஆய்வாளர்களுக்கு மொழியறிவு, தெளிவான மொழி நடையில் எழுதுவதற்குப் பயிற்சி, அனுபவம் ஆகியவை அவசியம். அந்த வகையில் மானிடவியல் ஆய்விதழ், இனிவரும் ஒவ்வொரு இதழிலும் இளம் ஆய்வாளர்கள் எழுதுவதற்கான வாய்ப்பினை அளிக்கும். இதன் மூலம் இது போன்ற தளங்கள் வரும்காலங்களில் தொடர, இந்த தொடர் அறுந்துபோகாமல் இருக்க இளைய தலைமுறை தமிழ் ஆய்வாளர்களைத் தயார் செய்யலாம்.

இறுதியாக, இதழுக்குக் கட்டுரைகள் அளித்த ஆய்வாளர்களுக்கும், மானிடவியல் ஆய்விதழினால், தனக்கும், தமிழ் சமூகத்திற்கும் பலனுண்டு எனக்கருதி படிக்க விழையும், வாசகர்கள் மற்றும் ஆய்வாளர்களுக்கும் ஆசிரியர் குழு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறது.

# பண்டைய தமிழ்த் திணைக்குடிச் சமுதாய ஒழுகலாறுகளும் திருவள்ளுவர் புகட்டிய விழுமிய ஒழுங்கமைப்பும்

முனைவர் ஆ. தனஞ்செயன்*

***கட்டுரைச்சுருக்கம்:*** *சங்க இலக்கிய நூல்கள் காட்டும் பண்டைய தமிழ்த் திணைக்குடிகளின் பலவகை ஒழுகலாறுகளை -அதாவது இறைச்சி உணவு, உயிர்ப்பலி, போர், ஆறலைத்தல், ஆநிரை கவர்தல், பரத்தையர் ஒழுக்கம், பிறர் மனைநயத்தல் போன்ற வற்றை முற்றிலும் எதிர்மறையாக நோக்கிய திருவள்ளுவர் அவற்றைக் கண்டிக்கும் வகையில் திருக்குறளைப் படைத்தார். அதனூடாக, அன்றைய தமிழ்ச் சமூகத்திற்கு மாற்று விழுமிய ஒழுங்கமைப்பை வலியுறுத்தினார் இந்த அனுமானம் சரியானதுதானா என்னும் கேள்வியை எழுப்பி இக்கட்டுரை விவாதிக்கிறது.*

## முன்னுரை

*பொதுவாகச் சமூக விழுமியங்கள் பற்றிய ஆய்வு என்பது, மக்களின் நடைமுறை வாழ்க்கை முறையிலிருந்து வெளிப்படும் வாய்மொழி, மற்றும் வாய்மொழி சாராத நடத்தை முறைகளில் தோன்றும் பலவகையான தரவுகளை அடியொற்றி மேற்கொள்ளப்படுவதாகும். ஆனால், கடந்த காலத்திய இலக்கியப் பனுவல்கள் முன்வைக்கும் சமூக வாழ்க்கை முறையின் வாயிலாக வெளிப்படுத்தப்படும் நடத்தை முறைகளில் தோன்றும் தரவுகள் ஊடாக உய்த்தறியப்பட்ட, சமூக விழுமியங்களைப் பற்றி இக்கட்டுரை ஆராய்கிறது. குறிப்பாகத் திருக்குறள் பேசும் அறம் பற்றிய சிந்தனைகளைச் சமூக விழுமியம் தழுவிய கருத்துருவங்கள் வாயிலாக அணுகுகிறது. அத்துடன், சங்க இலக்கிய நூல்கள் காட்டும் திணைக்குடிகளின் சமூக வாழ்க்கை முறையில் வெளிப்படும் பலவகை நடத்தை முறைகளில் தோன்றும் விழுமிய ஒழுங்கமைப்பு என்பது எவ்வாறு தன்னியல்பான எதிர்மறைச் சூழலாக அமைந்து, அதற்கு மாற்றாக வேறொரு*

* *மேனாள் இணைப்பேராசிரியர் & துறைத்தலைவர், நாட்டார் வழக்காற்றியல் துறை, தூய சவேரியார் கல்லூரி(தன்னாட்சி), பாளையங்கோட்டை, திருநெல்வேலி- 627002, தொலைபேசி: 9486041862*

விழுமிய ஒழுங்கமைப்பைத் தமது இலக்கியப் படைப்பின் ஊடாக முன்னிறுத்துமாறு திருவள்ளுவரைத் தூண்டியுது என்பதையும் இக்கட்டுரை ஆராய்கிறது.

## கருதுகோள்

பண்டைய தமிழ்த் திணைக்குடிகளின் சமூகப் பண்பாட்டில் ஒருங்கிணைந்துக் காணப்பட்ட சிலவகைக் கூறுகள், ஒரு கட்டத்தில் எதிர்மறைக் கண்ணோட்டத்தில் பார்க்கப்பட்டன. குறிப்பாக, இறைச்சி உணவு உட்கொள்ளுதல், மதுவருந்துதல் முதலிய உணவுமுறை சார்ந்த வழக்கங்கள், உயிர்ப்பலியோடு இணைந்த தெய்வ வழிபாடு, குருதி ஆறு பெருக்கெடுத்தோடும் போர் முறைகள், ஆநிரைக் கவர்தல், ஆறலைத்தல், பரத்தையர் ஒழுக்கம், என்பன உள்ளிட்ட சிலவகை நடத்தை முறைகளை முற்றிலும் எதிர்மறை ஒழுகலாறுகளாக அணுகிய திருவள்ளுவர், தம்முடைய திருக்குறள் நூலின் வாயிலாகத், திணைசார் பண்பாட்டிற்கு முற்றிலும் மாறுபட்ட புத்துருவக் கோலம் ஒன்றைப் புகட்டும் நோக்கில், ஒரு மாற்றுச் சமூக விழுமிய ஒழுங்கமைப்பை முன்வைத்தார். தமிழகத் திணைசார் சமூகப் பண்பாட்டுப் பின்னணியிலிருந்தே திருவள்ளுவர் தோன்றியவராயினும், ஏனைய பெரும்பான்மையான புலவர்களுடைய படைப்பு நெறியிலிருந்துப் பெரிதும் வேறுபட்ட, ஒருவகை மாற்றுக் குரல் அவரிடம் இருந்து எழுந்தது. அது, ஓர் அயன்மைப் பண்பாட்டு அறிவுசார் தோரணியைப் பிரதிபலித்தது. முற்றிலும் வேறுபட்ட கருத்துகள், சிந்தனைகளோடு தமிழகத்தில் நிகழ்ந்த வைதிக, பௌத்த, சமண மதங்கள் ஊடுருவிய அயன்மைப் பண்பாட்டுப் பரவலின் காரணமாகத் தமிழர் சமூகம், மொழி, இலக்கியம் ,கலை முதலிய பல்வேறு களங்களில் ஏற்பட்ட தாக்கம் குறிப்பிடத்தக்கது. அதில் முதன்மைத் தன்மை துலங்குமாறு, தனித்த அடையாளத்தோடு நிலைபெற்றுத் திகழும் படைப்பாகத், திருவள்ளுவரின் திருக்குறள் திகழ்கிறது. பண்டைய திணைக்குடிச் சமுதாயம் என்பது, நாளடைவில் பல படிநிலைகளைக் கடந்து, சாதிய உருநிலை மாற்றம் பெற்றுத் தோன்றும் இன்றைய சூழலில், திருவள்ளுவர் வலியுறுத்திய விழுமிய ஒழுங்கமைப்பு என்பது, ஏட்டிலக்கியத்தை விட்டு வெளியில் வந்து யதார்த்த சமூகத்தோடு இரண்டறக் கலந்துவிட்டதா என்ற கேள்விக்கான விடையை

அறுதியிட்டுக் கூறவியலாது. எனினும், தமிழக எல்லைக்கப்பால், மொழி, இனம், பண்பாடு கடந்து, பரந்த உலகின் அறிவுமரபினர் மத்தியில் திருக்குறட் சிந்தனைகள் என்பன உயிரோட்டத்துடன் திகழ்கின்றன என்பதை அறிஞர்கள் சுட்டிக் காட்டுகின்றனர்.

திருக்குறள் வெளிப்படுத்தும் கருத்துகளை முன்னிட்டு, அதனை நீதிநூல், அறநூல் போன்ற அடையாளங்களோடு அணுகுகிறோம். அந்நூல், பொருள் மயக்கமோ நெகிழ்ச்சியோ ஏற்படுத்தாத, திட்பம் நுட்பம் செறிந்த சூத்திரம் போல், சொல்தேர்வு செய்யப்பட்டு, இயற்றப்பட்ட ,குறுந்தொடர் செய்யுள் வடிவமான குறள் வெண்பாக்கள் நிறைந்த நூலாகும். அவற்றின் வாயிலாக மிகவும் நுட்பமாகவும் நயமாகவும் அறக்கருத்துக்களைப் புலப்படுத்தும் வெளிப்பாட்டுத் திறனில், ஏனைய நெடுந்தொடர், புனைவிலக்கியப் படைப்புகள், நீதி நூல்கள் ஆகியவற்றுக்கிடையே தனித்துவமானதாகத் திருக்குறள் நிலைபெறுவதற்கு ஏதுவாயிற்று.

**அனுமானங்களும் கேள்விகளும்**

திருக்குறள் முன்வைக்கும் சிந்தனைகள் அல்லது கருத்துகள் என்பன, எவ்வகையான இயல்பினைப் பிரதிபலிக்கின்றன? அவற்றைச் சமூக அறிவியலாரின் விழுமியங்கள் பற்றிய கருத்துருவங்களின் துணையோடு புரிந்து கொள்ள முயல்வது பொருந்துமா? பண்டைய திணைக்குடிப் பண்பாட்டின் சிலவகை மரபுகள் பற்றிய எதிர்மறையான பார்வையைத் திருக்குறள் முன்வைக்கிறதா? அது, தமிழரின் இயற்கைநெறி சார்ந்த வாழ்க்கை முறையைக் கண்டனம் செய்வதற்காக எழுந்த நூலா? அன்றைய சமூக ஒழுகலாறுகளுக்கு மாற்றாக வைக்கப்பட்டவை எனக் கருதப்படும் நடத்தை முறைகளுக்கான நெறிமுறைகள் எத்தகைய கருத்தியல் பின்புலத்தை அடியொற்றித் தோன்றியவை? அல்லது திருவள்ளுவர் தம் படைப்பில் முன்வைக்கும் இலட்சிய மாதிரிகள் என்பன ,வேறு கருத்தியல் ஆதாரங்களின் தாக்கத்தால் தோன்றிய விளைவுகளாகும் எனக் கருதுவது பொருந்துமா? இவ்வாறு, சில கேள்விகளை எழுப்பி, அவற்றுக்கு விடைகாணும் வகையில் இக்கட்டுரையின் நோக்கம் அமைகிறது.

**I.விழுமியங்கள்:** பொதுவாகத் திருக்குறளில் பேசப்படும் கருத்துக்களை நீதிநெறி, அறம், இலட்சியம், சிந்தனை என்பன போன்ற சொல்லாட்சிகள் தழுவிய கருத்துருவங்களின் ஊடாக விவாதிப்பதைக் காண்கிறோம். இங்கு, வள்ளுவர் வலியுறுத்தும் கருத்துக்களில் பெரும்பான்மை யானவற்றைச் சமூக அறிவியல் நூலோர் கையாளும் விழுமியங்கள் (Values) என்னும் கலைச்சொல்லாக்கம் அளிக்கும் கருத்துருவங்கள் ஊடாக அணுகிப் புரிந்து கொள்வதில் உள்ள பொருத்தப்பாட்டை. ஆராய முற்படுகிறோம். விழுமியம் அல்லது மதிப்பீடு என்பது, ஒரு குறிப்பிட்ட சமூகம், தனது கட்டுக்கோப்பை உறுதிப்படுத்திக் கொண்டு, தங்குதடையற்ற இயக்கத்தைப் பாதுகாத்துக் கொள்ள, 'ஏற்கக் தக்கது— விலக்கத் தக்கது' என்று சமூக நடத்தை முறைகளை எதிரிணையாகப் பகுத்துக் கொண்டு, தனது உறுப்பினர்களுடைய ஓர்மை உணர்வோடு படைத்தளித்துக் கொள்ளும் ஒழுங்காற்று விதிகளைக் குறிப்பதாகும். அவ்வகையில், விழுமியங்கள் என்பன, சமூகக் கூட்டுப் படைப்புகளாகும். அத்தகைய சமூகக் கூட்டுப் படைப்புகளான விழுமியங்கள் என்பன பற்றிய கருத்துருவத்தை, ஒரு தனிமனிதப் படைப்பாளரான வள்ளுவரின் குறட்பாக்கள் வாயிலாக வெளிப்படுத்தப்படும் அவர்தம் சிந்தனைகளுக்குப் பொருத்துவது இயைபுடையதாக அமையுமா என்னும் வினா எழுவது இயல்பே. ஆனால், திருவள்ளுவர் தம் படைப்பின் ஊடாக முன்வைக்கும் சிந்தனைகள் என்பன, சமூக நிறுவனம் சார்ந்து, மக்கள் தங்களுக்குத் தாங்களே படைத்துக் கொள்ளும் விதிவரம்புகளான விழுமியங்களின் இயல்புக் கூறுகளைப் பிரதிபலிக்கும் தன்மையை அடியொற்றியே, ஒப்பிட்டு நோக்கப்படுகின்றன. அத்துடன், வள்ளுவர் பேசும் அறக்கருத்துக்களோ, சிந்தனைகளோ அவருடைய அறிவார்ந்த கண்ணோட்டத்தின் விளைவுகளாக அமைவன என்பதில் அய்யமில்லை. ஆயினும், வேறு சமூக, சமய நிறுவனங்கள், குழுக்கள் தத்தம் ஒழுங்கமைதியைப் பாதுகாத்துப் பேணும் வகையில் படைத்து வழங்கிய ஒழுக்கங்கள், விதிமுறைகள் போன்றவை வள்ளுவரிடம் நேரிடையாகவோ மறைமுகமாகவோ தாக்கம் செலுத்தியதற்கு வாய்ப்பு உண்டு. எனவே, இக்கோணத்தில் அமைந்த அனுமானம் தவறாகாது. ஆகவே, சமூக விழுமியங்கள் பற்றிய கருத்துருவங்களைக் குறட்பாக்கள் வெளிப்படுத்தும் சிந்தனைகளில் பொருத்திப்

பார்ப்பது பொருந்தக் கூடியதாகும். இந்நோக்கத்தை அடியொற்றியே விழுமியங்கள் பற்றிய வரையறைகளும், கருத்துருவங்களும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

**2.இயற்கைநெறி வாழ்க்கைமுறை பற்றிய எதிர்ப்பு:** 'திருக்குறள், பண்டைய திணைக்குடிகளின் சமூக- பண்பாட்டு வாழ்க்கை முறையில் ஒருங்கிணைந்துக் காணப்பட்ட மரபுகளை எதிர்மறையாக அணுகி, அவற்றைக் கண்டிக்கும் வகையில் படைக்கப்பட்ட நூலெனத்' திருக்குறளை அணுகுவர். (ஆ.வேலுப்பிள்ளை,2010: 55; குணா,1980: 36) சங்க காலத்தில் படைக்கப்பட்ட பாட்டு, தொகை இலக்கிய நூல்கள் போன்றவை பேசும் மக்களின் வாழ்க்கை முறை என்பது, இனக்குழூத்தன்மை உடையது. அதனை இயற்கைநெறி தழுவியது என்றும் கூறுவர். போர், காதல், ஆறலைத்தல், இறைச்சி, மீன் உணவு உண்ணுதல், மதுவருந்துதல் என்பனவற்றை, அவ்வாழ்க்கை முறையில் ஒருங்கிணைந்தவையாக இலக்கியங்கள் சிறப்பித்துப் பேசுகின்றன. அதே வேளையில், கொலை, காமம், களவு, புலால், கள் முதலியவற்றைத் திருக்குறள் விலக்க வலியுறுத்தியது. மீன், இறைச்சி, கள் என்பன பெரிதும் பேணப்பட்ட உணவு வழக்கமாக இருந்த பண்டைய தமிழகத்தில் கள்ளுண்ணாமை, புலால் மறுத்தல் ஆகியவற்றின் இன்றியமையாமையைத் திருக்குறள், வலியுறுத்திப் பேசிய நிலையில், வரைவின் மகளிர், பெண் வழிச் சேரல், பிறனில் விழையமை என்று காமத்தைக் கண்டித்தது.

இவ்வாறு, பண்டைய திணைக்குடிச் சமுதாய ஒழுகலாறுகள் பலவற்றை எதிர்மறையாக நோக்கிய திருவள்ளுவர், அவ்வாறு நோக்கிய அணுகுமுறைக்கு வித்திட்ட வேறொரு சமூக, சமய ஒழுங்கமைப்பின் சிந்தனைகளால் நேரடியான தாக்கத்திற்குப் பெரிதும் ஆட்பட்டவராக இருந்திருக்க வேண்டும். அத்தகைய தாக்கம் காரணமாகவே, தமக்கு உடன்பாடற்ற நடத்தை முறைகளைக் கொண்டிருந்த திணைக்குடிச் சமூகத்திற்குத், தமக்குப் பெரிதும் உடன்பாடானதாக அமைந்த. ஓர் அந்நிய சமூகம் அல்லது சமய நிறுவனத்தில் பின்பற்றப்பட்ட, 'உகந்தவை' 'பின்பற்றத் தக்கவை' எனக்கருதப்பட்ட விழுமியங்களைக் கொண்ட வகைமாதிரியைப் பொருத்திப் பார்க்க முனைந்திருக்க வேண்டும் என்று அனுமானிக்கலம். அவர்தம் திருக்குறட் சிந்தனைகளில்

கணிசமானவை, அந்நோக்கத்தையே முன்னிறுத்துகின்றன.

**3.சமயம் என்னும் விழுமியக் களஞ்சியம்:** இங்கு, சமூக விழுமியங்களும் அவற்றைப் பேணுவதும், மக்களின் நடத்தை முறைகளை அடியொற்றியவை ஆகும் என்பதில் அய்யமில்லை. அதே வேளையில், அவர்களுடைய சமயத்திற்கும் அதில் இருக்கும் பங்கினை மறுக்க இயலாது. இவ்விடத்தில், சமயத்தின் இடம் பற்றிய கிளிஃபோர்ட் கீர்ட்சின் (Clifford Geertz,*1968*) கருத்தினை நினைவுகூர்வது பொருத்தமானது. உலகக் கண்ணோட்டம், பண்பான்மை ஆகிய இரண்டையும் வேறுபடுத்தி, விளக்கும் நிலையில், பண்பான்மை(ethos) என்பது, ஒரு பண்பாட்டின் மதிப்பீட்டுக் கூறுகளாகும் என்கிறார். உலகக் கண்ணோட்டமானது, அறிதல் மற்றும் இருத்தல் பற்றிய அணுகுமுறையாகும் என்கிறார்." குறிப்பிட்ட மக்களுடைய பண்பான்மை என்பது, அவர்களுடைய வாழ்க்கையின் குரல், பண்புநிலை, தரநிலை; அவ்வாழ்க்கையின் அறநெறி, அழகியல் பாணி மற்றும் மனோநிலை ஆகும். அதே வேளையில் அவர்களுடைய உலகக் கண்ணோட்டம் என்பது, பொருட்களின் இருப்புநிலை பற்றிய சித்திரம்; இயற்கை, தன்னிலை, சமுதாயம் ஆகியவைப் பற்றிய அவர்களுடைய கருத்துருவமாகும்." என்கிறார். கீர்ட்சின் மற்றொரு கருத்தும் இங்கு நினைவுகூரத்தக்கது. அதாவது, குறிப்பிட்ட மக்களுடைய விழுமியங்கள், வாழ்க்கை என்னும் இருப்புநிலையின் ஒரு பொதுவான ஒழுங்கமைதி ஆகிய இரண்டினுக்கும் இடைப்பட்ட பொருட்செறிவான தொடர்பின் வெளிப்பாடு என்பது சமயங்கள் அனைத்திலும் ஓர் அடிப்படைக் கூறாகத் திகழ்கிறது. இவ்விழுமியங்களோ ஒழுங்கமைதியோ எவ்வாறு பொருள் கொள்ளப்படுகின்றன என்பது முக்கியமல்ல.' என்கிறார். மேலும் கூறுகையில், சமயம் என்பது, தனது ஒரு பகுதி அளவில், பொதுவான அர்த்தங்களின் தொகுப்பைப் (களஞ்சியம்) பாதுகாத்து வைத்திருக்கும் ஒரு முயற்சியாகும். அதனை ஆதாரமாகக் கொண்டே ஒவ்வொரு தனிமனிதனும் தன்னுடைய அனுபவத்தை விளங்கிக் கொண்டு, தன்னுடைய நடத்தையை ஒழுங்கமைத்துக் கொள்கிறான்.(Clifford Geertz,*1968*)

கீர்ட்சின் கூற்றில் குறிப்பிட்ட ஒரு கருத்து நமக்கு முதன்மையானதாகத் தோன்றுகிறது. அதாவது, விழுமியங்கள்,

சமூக ஒழுங்கமைவு, சமயம் ஆகிய மூன்றினுக்கும் இடையிலுள்ள தொடர்பு குறித்து நோக்கும் போது, சமூக இயங்குகையில் செயல்படுத்தும் காரணியாக விழுமியமே பங்காற்றுகிறது என்று நாம் ஏற்படுத்திக் கொண்டிருக்கும் நமது புரிதலில் உள்ள குறைபாட்டினைச் சமன்படுத்துவதாக சமயம் வெளிப்படுவதைக் காண்கிறோம். இங்கு, திருவள்ளுவர் பேசும் விழுமியச் சிந்தனைகளின் பின்புலத்தில், சமயங்களின் இடம் எத்தகையது என்பதை அறிந்து கொள்வதற்கு மேற்கண்ட கருத்து நம்மை நெறிப்படுத்தும் எனக் கருதலாம்.

திருவள்ளுவர் எடுத்துரைக்கும் அறம் பற்றிய கருத்துக்களாயினும் விழுமியங்களாயினும், அவை யாவும் சமயச் சார்பற்றவை என்று கூறுவது, பொதுவான வாதமாக உள்ளது. அதிலுள்ள நியாயத்தை வெளிப்படுத்துவது தேவையானது. பண்டைய தமிழ்த் திணைக்குடிச் சமுதாயத்தின் பழக்க வழக்கங்கள் உள்ளிட்ட பண்பாட்டு நடத்தை முறைகளை, எதிர்மறையானவையாக நோக்கிக் கண்டிப்பதும், அவற்றுக்கு மாற்றாக, வேறு சமூக விழுமிய ஒழுங்கமைப்பைப் புகுத்த விழைவதும் ஒரு குறிப்பிட்ட சமூக- சமய ஒழுங்கமைப்பில் அகமாந்தராக வாழ்ந்துப் பெற்ற அனுபவங்களைக் கொண்ட ஒருவருக்கு மட்டுமே சாத்தியமானது. அந்த இடத்தில் திருவள்ளுவரை வைத்து நோக்கும் போது, ஒரு சமூக சமய அமைப்பில் ஒருங்கிணைந்தவராக வாழ்ந்து, அதனில் பின்பற்றப்பட்ட நடத்தை முறைகள், ஒழுகலாறுகள் அல்லது விழுமியங்கள் ஆகியவற்றில் பங்கேற்றுப் பழகி, அவற்றைத் தமது சமயம் என்னும் பொருட்களஞ் சியத்தோடு பொருத்திப் பார்த்து நிறைவுணர்வு அடைந்த நிலையிலேயே அவ்விழுமிய ஒழுங்கமைப்பைப் பண்டைய திணைக்குடிச் சமுதாயத்திற்கோ, உலகப் பொது சமுதாயத்திற்கோ பரிந்துரைக்க முற்பட்டிருக்க வேண்டும்.

### விழுமிய ஒழுங்கமைப்பு

ஒரு குறிப்பிட்ட சமுதாயம், தன்னுடைய ஆற்றொழுக்கான இயங்குகையை உறுதிப்படுத்திக் கொள்ள, தன்னுடைய மக்களின் ஒருமித்த கருத்திணக்கத்தோடு தனக்குத் தானே படைத்தளித்துக் கொண்ட விதிமுறைகள் தழுவிய நடத்தை முறைகளின் தொகுப்பையே விழுமிய ஒழுங்கமைப்பு என்பது குறிப்பிடுகிறது.

அதில், ஒன்றோடொன்று தொடர்புடைய. நிலையில் விழுமியம் (values), பண்பான்மை (.ethos) அல்லது உலகக் கண்ணோட்டம் (.worldview) அறநெறி (ethics) ஆகிய கூறுகள் அடங்குகின்றன.

விழுமியங்கள் (values) என்னும் சொல் பலவகைப் பொருண்மைகளைக் குறித்து நிற்பது. ஆர்வம்,மகிழ்ச்சி, மனதுக்குப் பிடித்தது, விருப்பத் தெரிவு, கடமை, அறநெறிக் கடப்பாடு, ஆசை, தேவை, வெறுப்புணர்வு, ஈர்ப்பு, என்பன போன்ற அர்த்தங்கள் பலவற்றை விழுமியம் என்பது குறிப்பிடுகிறது. அத்துடன், விழுமியங்கள் என்பன, பரந்துபட்டதும், வேறுபட்டதுமான உலகளாவிய தெரிவு செய்யப்பட்ட நடத்தை முறைகளில் காணப்படுகின்றன என்று ஸ்டீஃபன் பெப்பரை மேற்கோள் காட்டிக் கூறுவர். (Robin M. Williams, Jr 1968: 15 :283) விழுமியம் என்பதன் பொருளின் எல்லையை வரையறுக்க முடியாது என்று கூறுவோர், மிகவும் பரந்த அளவில் விழுமியம் புரிந்து கொள்ளப்படலாம் அல்லது குறுகலான பொருளிலும் புரிந்து கொள்ளப்படலாம் எனக் கூறுவர். ஆயினும், விழுமியங்களின் எல்லைகள் என்பன, ஒருபோதும் தன்னிச்சையாக வரம்புக் கட்டி நிறுத்த முடியாதவை என்றும், அவற்றின் இருப்பைக் குறிப்பிட்ட எடுத்துக்காட்டினை அடியொற்றியே நிர்ணயிக்கவிலும் என்றும் கூறுவர்.

விழுமியங்கள் பற்றிய ஒரு செறிவான வரையறையை க்ளைட் க்ளுக்கோன் (Clyde Cluckhon) முன்வைக்கிறார். சமூக அறிவியல் புலங்களைச் சார்ந்த நூல்களில் பரவலாக வரவேற்கப்படும் விளக்கங்களில் ஒன்றாக அவ்வரையறை இருந்துள்ளது. “விரும்பத்தக்கதும், தாக்கத்திற்கு ஆட்படுத்துவதுமாகிய தெரிவு செய்யப்பட்ட நடத்தை முறை பற்றிய கருத்துருவங்களையே விழுமியங்கள் என்பன குறிப்பிடுகின்றன”.- இந்தச் சுருக்கமான வரையறையில் ,விரும்பப்படும் ஒன்றுக்கும், விரும்பத்தக்க ஒன்றுக்கும் இடையே ஒரு வேறுபாடு உருவாக்கப்படுகிறது. அதாவது,’ விரும்பத்தக்கது’ என்பது, நாம் ‘எதனை விரும்ப வேண்டும்’ என்பதனோடு சமநிலைப்படுத்தப்படுகிறது. இங்கு, விழுமியங்கள் என்பன, (1) தனிமனிதனுக்குரிய ஒட்டுமொத்தமாக வரிசைமுறைப்படுத்தப்பட்ட நிலையான லட்சியங்கள்,(2) தனிமனிதனுக்கும் அவ்வாறே, ஓர் ஒழுங்கமைதியைப் பாதுகாக்கும்

சமூகப் பண்பாட்டு ஒழுங்கமைப்புக்கும் உரிய இன்றியமையாத் தேவைகள், (3) பிறருடைய நலன்களையும், சமூக வாழ்க்கையில் ஈடுபடும் ஒட்டுமொத்த குழுவின் நலன்களையும் பேணிப் பாதுகாப்பதன் தேவை ஆகியவற்றை முன்னிறுத்தி, மனநிறைவூட்டும் வகையில் ஒழுங்காற்றுப்படுத்தும் பணியை ஆற்றுகின்றன என்று விழுமியங்கள் ஆற்றும் செயல்பாடுகளைப் பற்றி விளக்குவர். (Robin M. Williams,JR 1980: 15: 253)

அறநெறி உணர்வோடு சமூகத்தால் ஏற்றுக் கொள்ளப்பட்ட விதிமுறைகளின் தொகுப்பாகச் சமூக விழுமியங்கள் அமைகின்றன. ஒரு குறிப்பிட்ட சமூகத்தின் இயங்குமுறை, அதன் நிறுவனங்கள், மரபுகள், மக்களின் பண்பாட்டு அடிப்படையிலான நம்பிக்கைகள் ஆகியவற்றால் இவ்விதிமுறைகள் யாவும் படைக்கப்படுகின்றன. ஒருவகையில் இவை சட்ட விதிகளாகும். இந்தச் சட்ட விதிகள் என்பன, சமுதாயத்தில் மக்கள் எவ்வாறு தங்கள் நடத்தை முறைகளை அமைத்துக் கொள்ள வேண்டும் என்பது பற்றிய வழிகாட்டியாகத் திகழ்வனவாகும்.

**விழுமியங்களின் சில பொதுப்பண்புகள்**

அனைத்து வகையான விழுமியங்களும் தம்மிடையே பொதுவான சில சிறப்பியல்புகளைக் கொண்டுள்ளன. (1) அனைத்து விழுமியங்களும் தம்மில் சில அறிதல்சார் அறிவுக் கூறுகளைப் பெற்றவை யாகும். அதாவது, அவை தெரிந்தெடுக்கும் பண்பினையோ, நெறிப்படுத்தும் இயல்பையோ உடையவை. ஆகவே, தாக்கத்திற்கு ஆட்படுத்தும் கூறுகளைப் பெற்றவை. (2) விழுமியங்கள் என்பன, நடத்தை முறைகள் பற்றிய தேர்வுக்கான விதிமுறைகளாகச் செயல்படுகின்றன. (3) மிகவும் வெளிப்படைத்தன்மை உடையனவாகவும், முற்றிலும் கருத்துருவப்படுத்தப் பட்டவையாகவும் அமையும் நிலையில், விழுமியங்கள் என்பன, தீர்வு காணல், தெரிவு செய்தல், விருப்பம் ஆகியவற்றுக்கான விதிமுறைகளாக அமைகின்றன. (4) மறைபொருளாகவும், பிரதிபலிப்பின்றியும் அமையும் நிலையில், விழுமியங்கள் என்பன, நடத்தைமுறை பற்றிய தீர்மானங்களுக்கு உரிய சட்ட அமைப்புத் தளங்களாக ஒருபோதும் செயல்பட

முடியாத நிலை ஏற்படும். (R.M.Williams,Jr.*1972 : 283).* சமூக விழுமியங்கள் என்பன, மக்களின் யதார்த்தமான வாழ்க்கை முறையில் வெளிப்படுவன. அவற்றை அடையாளம் காண்பதும், அவ்வாறு அடையாளம் கண்டவற்றை உரிய களப்பணி வாயிலாகச் சேகரித்து, ஆய்வு செய்வதும்தான் விழுமியங்கள் குறித்த முறையான புரிதலுக்கு நம்மை இட்டுச் செல்லும் என்பதை நாம் அறிவோம். ஆயினும், மிகவும் கடந்த காலச் சமுதாயத்தின் விழுமியங்கள் பற்றிய ஆய்வுக்கு, அச்சமுதாயத்தை ஆதாரமாகக் கொண்டு படைக்கப்பட்ட இலக்கிய நூல்கள் பேசும் சமூக வாழ்க்கை முறையில் வெளிப்படும் நடத்தைமுறைகளையே சார்ந்திருக்க வேண்டும்.

ஒவ்வொரு சமுதாயத்திலும் இலக்கியங்கள் என்பன, எழுதுவோரின் உள்நோக்கம், இலக்குகளைக் கடந்து,, பலவகையான செயல்பாடுகளை ஆற்றுகின்றன.. குறுந்தொடர் வடிவம், அடிவரையறை உள்ளவை, இல்லாதவை, தனிநிலைச் செய்யுள், நெடுந்தொடர் பாடல்கள் என்று அடிபற்றிய எல்லையைக் கடந்து,, படைத்தோர், காலம் , சமூகச் சூழல், முதலியவற்றின் அடியொற்றி, அந்தந்த இலக்கியப் படைப்புகளின் பொருள் விநியோகம் பெறுகின்றன. சமகாலத்திய இலக்கியங்களை வாசிப்போருக்கு அவற்றின் பொருளை அணுகுவதற்குக் கிட்டும் ஒருவகை இலகுத் தன்மை, பண்டைய இலக்கியங்களை வாசிப்போருக்கு அமைவதில்லை..பனுவல்கள் குறித்து உரைவிளக்கம் அளிக்கும் உரையாசிரியர்கள் காட்டும் வழித்தடத்தை அடியொற்றியே அவை சித்திரிக்கும் இலக்கிய உலகை நாம் அடையாளம் காண்கிறோம். இவ்வகையானஇலக்கியப்பயிற்சி முறை நமக்கு இன்றியமையாததாக இருந்துள்ளது. ஆயினும், பண்டைய இலக்கிய நூல்கள் பேசும் உலகம் பற்றிய புதிர்மைகள் விளக்கம் பெறாத நிலையில், வரலாறு உள்ளிட்ட சமூக அறிவியல்கள் முன்வைக்கும் சிந்தனைகள் ஊடாகப் புலப்படாத பக்கத்தை அடைந்து, அதனை அடையாளம் காண முற்படுகிறோம்.

மிகவும் கடந்த காலத்திய நூல்கள், அவை படைக்கப்பட்ட காலம், சூழலோடு மட்டும் நின்றுவிடுவதில்லை. வரலாறு, பண்பாடு பற்றிய ஆவணங்களாகத் திகழ்வதோடு, அவற்றின் ஆவண முக்கியத்துவத்தை நிகழ்காலத்தில் வலியுறுத்துகின்றன. கற்பனை, ரசனை, மகிழ்ச்சியூட்டல், முதலிய சிலவகை இலக்கியச் செயல்பாடுகளைக்

கடந்து, மறைமுகமான மற்றும் நேரிடையான அறிவுறுத்தல்களையும் அவை ஆற்றுகின்றன. கட்டற்ற மனித விருப்பங்கள், வீர, தீரச் சாகசங்கள், காதல் மற்றும் பாலியல் உணர்வு வேட்கைகள், மது, இறைச்சி உணவு, புகழ் பாடுதல், கொள்ளை அடித்தல், ஆநிறை கவர்தல், வழிப்பறி, என்பன உள்ளிட்ட ' எதிர்மறையான' சமூக, பண்பாட்டுக் கூறுகளை அக்காலத்திய சமுதாயத்தின் ஒருங்கிணைந்த நடத்தைமுறைகளோடு இணைத்துப் பேசும் தொகை நூல்களும், பாட்டிலக்கியங்களும், அவற்றை விதந்தோதும் ஒருவகை அகநிலைக் கண்ணோட்டத்தையே முன்னிறுத்துகின்றன.

திணைக்குடிச் சமூகங்களின் நடத்தை முறைகளை மதிப்பீடு செய்யும் நோக்கில், அவற்றில் கணிசமானவற்றை விமரிசனப் பார்வைக்கு உட்படுத்தி, அவற்றை மறுத்துப் புறம்தள்ள வேண்டும் என்னும் அணுகுமுறையில் பல நூல்கள் ஒருமித்து நின்றன. அறநூல்கள் அல்லது நீதி நூல்கள் என்று வகைப்படுத்தப்படும் அவ்வகை நூல்களில் தலையாயது திருக்குறளாகும். திணைக்குடிகள் நிறைந்த சமுதாயப் பின்னணியில் இருந்தவாறே, அதன் ஒரு முதன்மையான அடையாளத்தை விலக்கத் தக்கது என்று உட்குழுவிலிருந்தே ஓர் அகமாந்தரின் எதிர்ப்புக் குரலை வலிமையோடு எதிரொலிக்கச் செய்தது அந்நூல். அந்தக் குரலில் ஒருவகைப் பண்பாட்டு எதிர்ப்பு உறுதியாக வெளிப்பட்டது என்று கூறுவதினும், பாடுவோரின் குரலிசையில் விரவியிருக்கும் உணர்வுத் தொகுதியின் இழைவுக் கூறுகளைப் போல், பலவகை மாற்று விழுமியங்களின் ஊடுருவிய தொனிப்பண்பை அதனில் கேட்க முடிகிறது எனலாம்.

பண்டைய திணைக்குடிச் சமுதாத்தின் பண்பான்மையாக (ethos) பழைய பாடல்கள் ஊடாக வெளிப்பட்ட வீரம், காதல் உள்ளிட்ட பொருண்மைகள் தழுவிய, புலவர்களால் போற்றப்பட்ட பண்பாட்டுப் படிமத்திற்கு மாற்றானதாகவும், எதிரிணையானதாகவும் திருவள்ளுவரால் வேறொன்று முன்னிறுத்தப்பட்டது, அதனைப் பலவகை விழுமியங்கள் விரவிய அறப்பண்பாடு எனலாம். அதனைச் சற்றே காட்சிப் புலச்சித்திரிப்போடு பின்வருமாறு விளக்கலாம்: சிலப்பதிகாரத்தின் வேட்டுவ வரியில் (05-19) சாலினி என்னும் தேவராட்டியின் உடலை ஊடகமாகக் கொண்டு, எயினர்தம் வழிபடுந் தெய்வமாகிய கொற்றவை தெய்வமுற்றுத்

தோன்றி, எயினர்களிடையே ஆடிய காட்சியும் எடுத்துரைத்த கூற்றும் எயினர்களுடைய இயல்பான பண்பாட்டுச் சீர்மையைப் புரிந்து கொள்ள உதவும் தன்மையின. எயினர்கள் தாம் ஆறலைத்துக் கொணர்ந்த பொருட்கள் அனைத்தையும் தமக்குள் பகிர்ந்துக் கொள்ளும் ஊர்மன்றத்தில், சாலினி தெய்வுற்றுக் கூறும் போது, “ பேரூர்களிடத்தே, அவர்தம் செல்வமாகிய ஆனிரைகள் பல்கித் திரண்டுக் காணப்படுகின்றன.. வலிய விற்படையை உடைய மன்றங்கள் எல்லாம் பாழ்பட்டுக் கிடக்கின்றன. எயினர்கள் தாம் பிறந்த மறக்குடிக்குரிய ஆறெறி சூறையும், ஆகோளுமகிய வழிகளிலே தமக்கியைந்த வளங்குன்றி, அறக்குடிப் பிறந்த மக்கள் போன்று, செருக்கழித்து மறப்பண்பு இன்றி ஒடுங்கிப் போய்விட்டனர். இவ்வாறு, கேடுற்றமைக்குக் காரணமுண்டு. கலைமான் மிசை அமரும் கொற்றவை கொடுத்த வெற்றிக்கு விலையாகிய உயிர்ப்பலியை நீவிர் அவளுக்குக் கொடுக்கவில்லை என்றால், விற்போர் செய்யும் போது, உங்களுக்கு வெற்றியைக் கொடுக்க மாட்டாள். நீங்கள் நாள்முழுதும் கள்ளுண்டுக் களித்திருக்கும் வளமான வாழ்க்கையையை விரும்புவீர்களேயானால், களவு செய்து அதன் பயனை அனுபவிக்கும் பாலைநில மக்களே, நீவிர் அத்தெய்வத்திற்குச் செலுத்த வேண்டிய பலியைச் செலுத்துங்கள்”. (சிலப்பதிகாரம், வேட்டுவ வரி, 12–19).

## மறப்பண்பும் அறப்பண்பும்

தெய்வமுற்ற சாலினி என்ற தேவராட்டியின் கூற்றில் இடம்பெறும் செய்திகள், பாலைநில மக்களின் சமூக வாழ்க்கை முறையையும், அதன் பண்பாட்டையும் நாம் ஒருவாறு விளங்கிக் கொள்ள துணை புரிகின்றன. பாலை நில எயினர்களின் சமூக வாழ்க்கைமுறை என்பது, தன்னியல்பான இயங்குமுறை தழுவிய ஒழுங்கமைதியைப் பாதுகாக்கும் வகையிலான விழுமியங்களப் படைத்துக் கொண்டு வாழ்ந்த ஏனைய திணைக்குடிச் சமூகங்களிடையே தனித்த அடையாளம் உடையது. அதில்தான் அத்திணைக்குடிகளின் பண்பாடும் அதனில் இரண்டறக் கலந்திருக்கும் இயற்பண்பாகிய பண்பான்மையும் பொதிந்திருக்கின்றன. சாலினியின் கூற்றில் இடம்பெறும் மறக்குடி, அறக்குடி என்னும் சொற்கள், முறையே இருவேறு கருத்துருவங்கள் தாங்கியவை. முன்னையது, திணைசார் மரபுகளையும், விழுமியங்களையும் உள்ளடக்கியது. பிந்தையதோ,

முந்தையதற்கு நேரெதிரான அயலகப் பண்பாட்டு மரபுகளையும் விழுமியங்களையும் முன்னிறுத்துவது. தமிழ்த் திணைசார் பண்பாட்டு எல்கைகளுக்குள் புகுந்த வைதிகம், பௌத்தம், சமணம் ஆகியவற்றைத் தழுவிய அயலகப் பண்பாடுகளின் பரவல், ஏற்படுத்திய தாக்கம் என்பனவற்றின் ஊடாகவே, திருவள்ளுவர் வலியுறுத்தும் அறநெறிகள் அல்லது விழுமியங்களைப் புரிந்து கொள்ளவியலும் (காண்க: மயிலை சீனி வேங்கடசாமி,2020; ஆ. வேலுப்பிள்ளை,2010 ; குணா,1980)

## குறள்நெறிகள் எனும் விழுமியங்கள்

ஒரு குறிப்பிட்ட பண்பாட்டினைத் தழுவிய மக்களுடைய சமூக நடத்தை முறைகள் எங்கும் வியாபித்திருக்கும் நிலப்பகுதிக்குள் பிரவேசிக்கும் புதியவர் அல்லது அயலவர் ஒருவருக்கு ஏற்படுத்தும் பண்பாட்டு அதிர்ச்சியையே, தமிழ்த் திணைசார் சமூகங்களின் பலவகைப்பட்ட பண்பாட்டு நடத்தைமுறைகள் என்பன திருவள்ளுவரிடம் ஏற்படுத்தியிருக்க வேண்டும் என்று கருதத் தோன்றுகிறது. திணைக்குடிப் பண்பாட்டுப் பின்புலத்தைச் சேர்ந்தவராக இருந்திருப்பினும், அயலகப் பண்பாட்டுத் தாக்கம் பெற்ற ஓர் அறக்குடி மாந்தரின் கண்ணோட்டத்துடனேயே தமிழ்த் திணைசார் சமூக மாந்தர்களின் வேறுபட்ட நடத்தை முறைகளையும் பழக்க வழக்கங்களையும் அவர் உற்று நோக்கியிருக்க வேண்டும். அந்த உற்றுநோக்கல் அனுபவமே, உறுதியான விமரிசன நோக்கோடு, மாற்று விழுமியங்களைத் தம்முடைய படைப்பின் வாயிலாக வலியுறுத்த அவரை உந்தியிருக்க வேண்டும்.

வழிவழியாகப் பண்டைய தமிழர்களுக்குப் புகட்டப்பட்ட பழக்க வழக்கங்கள், நம்பிக்கைகள் ஊடாக மனதில் படிந்துப் போன 'ஏற்றுக் கொள்ளத் தக்கவை' என்னும் கருத்தில் இணக்கம் கண்டவர்களாக கடைப்பிடித்து ஒழுகிய நடத்தைகள், விழுமியங்களுக்கு எதிர்மறையானவற்றையே திருவள்ளுவர் வலியுறுத்துகிறார். வேட்டையாடும் சமூகத்தில், குறிபர்த்து எய்யும் ஒரே அம்பில் ஒன்றுக்கு மேற்பட்ட விலங்குகளை வீழ்த்தும் திறனைக் கொண்டாடும் கூட்டத்தில், உயிர்க் கொலை என்பது, உணவின் பொருட்டு ஏற்றுக் கொண்ட வழக்கமும் நியதியுமாகும். வேட்டைத்

தொழிலையோ இறைச்சி உணவைப் புசிக்கும் வழக்கத்தையோ நடைமுறையில் ஒருபோதும் கொண்டிராத ஒரு சமூகக் குழுவைச் சேர்ந்தவருக்கு, அவருடைய குழுவினரின் நம்பிக்கையின்படி, அவை இரண்டும் விலக்கப்பட்டவையாகும். உயிரினங்களிடம் அன்புப் பாராட்டுவதும்,விலங்குகளைக் கொன்று அவற்றின் தசையை உணவாக்கிக் கொள்ளும் வழக்கத்தை விலக்குவதும் ஆகிய இந்நடத்தை முறைகளின் ஊடாக அக்குழு தனது 'கொல்லாமை' பற்றிய விழுமியத்தை வெளிப்படுத்துகிறது. இத்தகைய ஒரு குழுவின் விழுமியங்களின் வாயிலாக, உயிரைக் கொன்று, தசையைப் புசிக்கும் வேறொரு குழுவின் நடத்தைமுறைகளை நோக்கும் ஒருவருக்கு, அவை விலக்கத்தக்கவையாகவும், கண்டிக்கத் தக்கவையாகவும் தோன்றுகின்றன. இருவேறு பண்பாட்டுச் சூழல்களில் இருந்து நோக்கும் போது, உணவு வழக்கத்தை அடியொற்றி, இறைச்சியானது முறையே விலக்கத் தக்கது எனவும், விரும்பத் தக்கது எனவும் அமையும் விதிகளை அடியொற்றிய எதிரிணைத் தன்மை உடைய விழுமியங்கள் என்பன, இருவேறு சமூகத்தினராலும் பேணப்பட்டன. இரண்டினுக்கும் இருவேறு பண்பாட்டு அடித்தளங்கள் உள்ளன.

அறக்குடிகளின் (சமணர்) ஐவகை மாவிரதங்களான அகிம்சை வாய்மை, கள்ளாமை, துறவு, அவாவறுத்தல் என்பனவற்றுள், அகிம்சை ("அகிம்சா பரமோ தர்ம") என்பது சமணரின் அடிப்படையான தர்மம் ஆகும். இன்னா செய்யாமை, அருளுடைமை, கொல்லாமை புலால் மறுத்தல் ஆகிய இந்நான்கும் ஒன்று சேர்ந்ததே அகிம்சையாகும். ஓரறிவுயிர் முதலாக ஐயறிவுயிர் ஈறாக, அவை சிறியனவாயினும் பெரியனவாயினும், அவற்றைக் கொல்ல மாட்டேன்; கொல்லச் சொல்லவும் மாட்டேன்; கொல்ல நினைக்கவுமாட்டேன்; மற்றவர் கொல்வதற்கும் மனம் மொழி மெய்களால் உடன்படவும் மாட்டேன் " என்று உறுதி எடுத்துக் கொண்டே சமணத் துறவிகள் அகிம்சா விரதத்தை மேற்கொள்வர். (மயிலை சீனி.வேங்கடசாமி,2020:17- 18) உயிர்க் கொலையோ விலங்குகளைக் கொன்று அவற்றின் தசையை உணவாக்கிக் கொள்வதோ முற்றிலும் விலக்கப்பட்ட சமணத் துறவு மரபின் கருத்தியல் பின்புலத்தாக்கம் என்பது, திருவள்ளுவர் முன்வைக்கும் விழுமியங்களில் உட்பிணைந்திருக்கிறது என்பது

வெளிப்படையானது. எடுத்துக்காட்டாக, பின்வரும் குறள் அமைகிறது:

*கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி*
*எல்லா உயிரும் தொழும். (புலால் மறுத்தல்: 260)*

விலங்குகளைக் கொல்லாமையும் இறைச்சி உணவு விலக்கலும் உணவுமுறை வழக்கம் தழுவிய விழுமியமாகும். இத்தகைய ஏனைய விழுமியங்களைப் பேணுவதில் ஓர்மையைப் பின்பற்றும் சமூக மாந்தர்களின் கூட்டிணக்கமே அவர்களுடைய சமூக ஒழுங்கமைதியை உறுதிப்படுத்தும். எனவே, ஊன் விலக்களோடு தொடர்புடைய ஏனைய விழுமியங்களைப் புலால் மறுத்தல் அதிகாரத்தில்(26: 251–260). வெளிப்படுத்துகிறார். (1) தன்னுடைய ஊனைப் பெருக்க, பிற ஊன் உண்பவனிடம் எங்ஙனம் அருள் தோன்றும்? (2) பொருளை ஆளுதல்,அதனை நோக்கமாட்டாதார்க்கு இல்லை; அவ்வாறே, அருளினை ஆளுதல், ஊன் தின்பவருக்கு இல்லை (3) தன்னுடைய உடலை வளர்க்க, பிறிதொன்றின் உடலை உண்ணுபவன், அருளைப் பெறமாட்டன் (4) படையைக் கையில் கொண்டவர் நெஞ்சம் போல், நன்மையை நினையாது ஒன்றின் உடலைச் சுவைப்பட உண்டார் மனம் (5) தின்னுவதற்காக உலகத்தார் கொல்லார் எனில், விலைக்காக ஊன்விற்பவரும் இருக்கமாட்டார்கள் (6) ஊன் உண்ணாமையே, உயிர் நிலைத்திருக்க ஏதுவாகும், புலால் உண்பவரைப் பாவம் விடாது. (7) பிறிதொன்றின் புண் என்பதை உணர்வார்களெனில், ஊன் உண்ணமாட்டார்கள் (8) குற்றத்தில் இருந்து நீங்கிய தெளிவுடையோர், உயிர்நீங்கிய உடலை உண்ணமட்டார்கள் (9) நெய் முதலான அவியைச் சொரிந்து, வேள்வி மூலம் ஆயிரம் வேண்டுவதினும், உயிரைக் கொன்று, உண்ணாமலிருப்பதே நல்லது (10) கொல்லாமையைப் பேணி, புலால் மறுப்பவனை, எல்லா உயிர்களும் கைகூப்பி வணங்கும்.

திருவள்ளுவர் விரும்பும் மனித சமூகத்தில் ஓர்உறுப்பினராக விளங்குபவனுடைய ஆளுமையைத் தீர்மானிக்கும் பண்புக்கூறுகளில் ஒன்றாக அருளை வரையறுக்கிறார். அவ்வியற்கூறு, ஒருவன் உயிர்க்கொலை மறுத்து, ஊன் விலக்கலைப் பேணும் நிலையில் அவனிடமிருந்து வெளிப்படுகிறது. மனிதன் புசிக்கும் உணவுப்

பொருட்களை அடியொற்றி, அவனுடைய மனவியல்பை மதிப்பிடும் அணுகுமுறை திருவள்ளுவரிடம் வெளிப்படுகிறது. சமூக ஏற்றத்தாழ்வைப் பேணும் இந்தியச் சமூகத்தில், அவரவர் கடைப்பிடிக்கும் உணவுப் பழக்க வழக்கங்கள் என்பன, அவரவர் வகிக்கும் சமூகத் தகுநிலையோடு சமநிலைப்படுத்தும் சமநிலையற்ற தர்க்கப் பார்வை நிலவுகிறது என்பதை நாம் அறிவோம். உண்மையில், மக்களின் உணவுப்பழக்க வழக்கம் என்பது, அம்மக்கள் வாழும் சுற்றுச்சூழலியலால்தான் தீர்மானிக்கப்படுகிறது.

ஒவ்வொரு பண்பாடும் சுற்றுச்சூழலின் உண்ணத்தக்க பகுதியை மூன்று முதன்மைநிலைப் பிரிவுகளாக வகைப்படுத்துகிறது என்று எல்.ஆர். லீச் (L.R.Leach, 1966:31) குறிப்பிடுகிறார்:

(1) உணவாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அன்றாட திட்ட உணவாகப் பகுதி அளவில், உட்கொள்ளப்படும் உணவுப் பொருட்கள்

(2) உட்கொள்ளலாம் என்று ஏற்றுக்கொள்ளப்பட்ட உணவுப் பொருட்களாயினும், அவை விலக்கப்பட்டவையாகும். அல்லது அரிய, சிறப்புத் (சடங்கியல்) தருணங்களில் மட்டுமே உண்ணுவதற்கு அனுமதிக்கப்படும். இத்தகைய உணவுப் பொருட்கள் என்பன பிரக்ஞைப்பூர்வமாக விலக்கப்பட்டவையாகும்.

(3) பண்பாடு, மொழி ஆகியவற்றின் அடிப்படையில், உணவாக ஏற்றுக் கொள்ளப்படாத உணவுப் பொருட்களும் உள்ளன. அவை நனவிலி நிலையில் விலக்கப்பட்டவையாகும்.

இந்த வகைமைகளும் அவற்றை உண்ணுவது பற்றி அவற்றோடு தொடர்புடைய திட்டநிரல்ளும் (plans), ஆளிடைத் தொடர்புகள் நோக்கிய பண்பாட்டு ரீதியிலான மனப்பாங்குகளோடு முறைமைப்படுத்தப்பட்ட வகையில் தொடர்பு கொண்டிருக்கிறது என்று லீச் கருதுகிறார் மேலும், "உட்கொள்ளக் கூடிய உணவுக்கும் பாலியல் உறவுக்கும் இடையே சடங்கியல் மற்றும் மொழிசார் தொடர்புகளை உருவாக்கிக் கொள்ளும் மனப்பாங்கு என்பது உலகளாவிய நிலையில் காணப்படுகிறது" என்கிறார். அத்துடன், கருதுகோள் ஒன்றையும் எழுப்புகிறார். "உணவாக உட்கொள்ளத் தக்க தகுதியை அடியொற்றி, விலங்குகள் வகைமைப்படுத்தப்படும் வகைப்பாட்டு முறைக்கும், பாலியல் உறவுகளை அடியொற்றிச்

செய்யப்படும்மனிதவகைப்பாட்டுமுறைக்கும்,இடையேஒருவகைத் தொடர்பு அமைந்திருக்கும்" என்கிறார். இந்தக் கருதுகோளை ஒட்டி அவர் வளர்த்துச் செல்லும் விவாதம் நமக்கு இங்கு தேவை இல்லை. எனினும்,' ஒவ்வொரு பண்பாடும் சுற்றுச்சூழலின் புறவயமான உண்ணத்தக்க பகுதிகளாக வகைப்படுத்தி வைத்திருக்கும் மூன்று வகைமைகள் முக்கியமானவையாகத் தோன்றுகின்றன.

நமது பண்டைய தமிழருடைய வாழ்நிலப் பகுதியாகிய சூழலியல் மண்டலத்தை, நிலம், பொழுது என்ற முதற்பொருள், உரிப்பொருள் கருப்பொருள் ஆகிவற்றில் ஒவ்வொன்றின் இயல்பை அடியொறிக், குறிஞ்சி, முல்லை, பாலை, மருதம், நெய்தல் என்று ஐவகைத் திணைகளாகப் பகுக்கப்பட்டிருந்தது. ஒவ்வொரு நிலத்திலும் முதன்மையானவையாக விளங்கிய, வழிபடுந்தெய்வம், உணவுப் பொருட்கள், விலங்கினங்கள், மரவகைகள், பறவை வகைகள், தோலிசைக் கருவியாகிய பறை, மக்கள் செய்யும் தொழில், பறவை இனங்கள், நரம்பிசைக் கருவியாகிய யாழ் மற்றும் இவை போன்ற ஏனைய இயற்கையானவையும், மனித அறிவுத்திறனால் உருவாக்கப்பட்டவையுமாக அமைந்த பொருட்கள் அனைத்தும் ஒருங்குதிரண்ட பருவுலகமாக ஒவ்வொரு நிலமும் அமைந்திருந்தது. (தொல்.பொருள். அகத்.3–5 & 20). அதன் உயிரியல் பன்மைத்துவச் சூழலுக்குத் தங்களை இயைபுப் படுத்திக் கொண்டதன் விளைவாக அமைந்த மக்களுடைய வாழ்க்கை முறை தழுவிய நடத்தைமுறைகளின் தொகுப்பையே குறிஞ்சி, முல்லை முதலிய ஐவகை நிலங்களும் தம்மில் முன்னிறுத்துகின்றன. தாம் வாழும் இயற்கைச் சூழலியலுக்கு ஏற்றவாறு தங்களை இயைபுப் படுத்திக் கொண்டு, மக்கள் படைத்தளித்த நடத்தை முறைகள் காரணமாகவே அவ்வொவ்வொரு நிலமும் தனித்தனிப் பண்பாட்டுச் சூழலியல் மண்டலமாகக் (cultural ecological zone) கருதப்படுகின்றன. சுற்றுச் சூழல்களால் தீர்மானிக்கப்பட்ட வேட்டை, மீன்பிடித்தல் முதலிய தொழில்கள் தழுவிய வாழ்க்கை முறையில் உயிர்க்கொலையும், ஊன் உணவும் தவிர்க்க இயலாதவை. இத்தகைய சமூகப் பின்புலத்திலேயே அவர்கள் படைத்துக் கொண்ட விழுமிய ஒழுங்கமைப்பு அவர்களை ஒழுங்காற்றுப்படுத்துகிறது. இயற்கை நெறிப்பட்ட அவ்விழுமிய ஒழுங்கமைப்புக்கு நேரெதிரான விழுமிய ஒழுங்கமைப்பையே

திருவள்ளுவர் நிறுத்துகிறார். கொல்லாமை, புலால் மறுத்தல், கள்ளுண்ணாமை முதலிய அதிகாரங்கள் எடுத்துக்காட்டுகளாகும்.

நெய்தல் நிலத்து மக்களான பரதவர்கள், தாங்கள் கடலில் பெருவலையால் பிடித்துக் கொணர்ந்த மீன்களை, உழவர்கள் களத்து மேட்டில் நெல்தானியங்களைக் குவித்து வைத்திருந்து வழங்குவது போல், இரந்தோரின் வறுங்கலம் நிறையமாறு கொடுக்கும் விழுமியம் பேணுவோர் ஆவர். (அகம்.30: 1-11).எந்த ஒரு கடல்வாழ் உயிரினமான சுறாவை உணவுக்காக வேட்டையாடுகிறார்களோ, அதனுடைய இனம் பல்கிப் பெருக்கமடைய வேண்டும் என்று நோக்கத்தில் சுறாக்கோட்டினைக் கடற்கரையில் நட்டுவைத்து, அதனில் அணங்கை ஏற்றுவித்து, வளமைச் சடங்கு இயற்றும் நம்பிக்கையைப் பரதவர்களிடம் காணலாம் (பட்டினப்பாலை, 78-87). உயிரைக் கொன்று உடலைப் புசிக்கும் மீனின் இனப்பெருக்கத்திற்காக இயற்றப்படும் மந்திரச் சடங்கின் வாயிலாக அப் பரதவர்கள் மீன்களின்பால் பேணும் ஒருவகைப் பரிவுணர்வை வெளிப்படுத்தினர். மக்கள் தாங்கள் எந்தச் சுற்றுச்சூழலியலைத் தகவமைத்துக் கொள்கிறார்களோ அதனில் ஒருங்கிணைந்திருக்கும் தாவர, விலங்கின வகைகளை அன்றாட, மற்றும் சிறப்புத் தருண (சடங்கியல்) உணவின் திட்டநிரலில் இணைத்துக் கொள்ளவோ விலக்கி வைக்கவோ செய்கின்றனர். உணவின் பொருட்டுக் கொல்லவோ விலக்கி வைக்கவோ செய்யும் இவ்விருமுக உணர்வில் பொதிந்திருக்கும் புனிதம் பற்றிய கருத்துருவத்தோடு இணைத்தே எந்த ஒரு மரபுசார்ந்த சமூகத்தின் நடத்தை முறைகளில் விரவியிருக்கும் விழுமியங்களை அணுக வேண்டும். இங்கு, விழுமியங்கள் குறித்து மானிடவிலரான க்ளிஃபோர்ட் கீர்ட்ஸ் கூறும் கருத்தினை நினைவுகூர வேண்டும்.

“சமூக விழுமியங்களைத் தாங்கிப் பிடிப்பதில் செயல்படும் ஒரு சமயத்தின் ஆற்றலானது, ஓர் உலகத்தைக் கட்டமைக்கும் அதனுடைய குறியீடுகளின் திறனில் அமைந்துள்ளது. அவ்வுலகில், அக்குறிப்பிட்ட விழுமியங்களும் அவற்றின் நிறைவேற்றுகையை எதிர்க்கும் சக்திகளும் அடிப்படையான மூலக்கூறுகளாகும் யதார்த்தம் பற்றிய படிமத்தைக் கட்டமைக்கும் மனிதனுடைய கற்பனை ஆற்றலின் திறனை அவ்வுலகம் பிரதிநிதித்துவம் செய்கிறது. யதார்த்தம் பற்றிய

அப்படிமத்தில், மேக்ஸ் வீபர் கூறுவது போல், " நிகழ்வுகள் என்பன எப்படி இருக்கின்றனவோஅப்படியேநிகழ்வனஅல்ல.ஆனால்,அவை ஓர் அர்த்தத்தைக் கொண்டவை, அந்த அர்த்தம் காரணமாகவே அவை நிகழ்கின்றன". விழுமியங்களுக்கான அத்தகைய இயல்நிலைக்கு அப்பாற் பட்ட அடித்தளத்தின் தேவை என்பது, தீவிரத்தன்மையில், மிகவும் பரந்துபட்ட நிலையில், பண்பாட்டிற்குப் பண்பாடு, தனிமனிதனுக்குத் தனிமனிதன் வேறுபட்டு அமையக் கூடியதாகும். ஆனால், ஒருவருடைய கடப்பாட்டிற்காக, ஒருவகையான மெய்மைத் தன்மையின் ஆதாரத்தை நாடக்கூடிய மனப்பாங்கானது, உலகளாவிய நிலையில் காணப்படுகிறது; மேலோட்டமான மரபொழுங்கு அணுகுமுறையானது, எந்த ஒரு பண்பாட்டிலும், ஒரு சிலரையேனும் திருப்திப்படுத்தி விடுகிறது. எனினும், வெவ்வேறு காலங்கள், வெவ்வேறு தனிமனிதர்கள், வெவ்வேறு பண்பாடுகளில் அதனுடைய பங்கானது வேறுபட்டதாக அமையக்கூடும். சமயமானது, பண்பான்மை, உலகக் கண்ணோட்டம் ஆகியவற்றில் ஊடுருவுவதன் வாயிலாக, பலவகை சமூக விழுமியங்களுக்கு வித்திடுகிறது. அவை அநேகமாக, மேலதிக நிலையில், கட்டாயப்படுத்துவனவாக இருக்க வேண்டியுள்ளது: அது ஒரு புறவயமான நிலையின் வெளித்தோற்றம் ஆகும். புனிதத் தன்மையிலான சடங்குகள், புராணங்களில் விழுமியங்கள் என்பன, அகவயமான மனித முன்னுரிமைகளாக அல்லாமல் சித்திரிக்கப்படுகின்றன. ஆனால், ஒரு குறிப்பிடத்தக்க கட்டமைப்போடு கூடிய ஓர் உலகில் உட்பொதிந்திருக்கும் வாழ்க்கைக்கான விதிக்கப்பட்ட நிபந்தனைகளாக (அவ்விழுமியங்கள்) முன்னிறுத்தப்படுகின்றன" (Clifford Geertz,1973: 131)

சமூக விழுமியங்களை முன்னிட்டு கிளிஃபோர்ட் கீர்ட்ஸ் கூறியுள்ள ஆழ்ந்த கருத்துகளில் சில நமது தேடலுக்கு மிகவும் பொருந்துவனவாக உள்ளன.(1) சமூக விழுமியங்களைத் தாங்கிப் பிடிப்பதில் உள்ள சமயத்தின் பங்கு, மற்றும் (2) ' மனித வாழ்க்கைக்குரிய விதிக்கப்பட்ட நிபந்தனைகளாக விழுமியங்கள் திகழ்கின்றன' என்னும் சிந்தனை ஆகிய கருத்துகளை அடியொற்றித் தமிழ்த் திணைசார் சமூகங்களின் நடத்தை முறைகளில் வெளிப்படும் விழுமியங்களையும், திருவள்ளுவர் கூறும் விழுமியங்களையும் நோக்க வேண்டும். இலக்கியச் சான்றுகளை ஆதாரமாகக் கொண்டு

நோக்கும் போது, தமிழ் மக்களின் வாழ்க்கை ' ஆன்மிக ஈடேற்றத்தை நோக்கமாகக் கொண்டிருந்தது என்று கருத முடியவில்லை' என்பர். (ஆ.வேலுப்பிள்ளை,1978: 12). ஆகவே, தமிழர் சமூக விழுமியங்கள் என்பன சமயச் சார்பற்றவையாக விளங்கின. அதே சமயத்தில், திணைசார் வாழ்க்கை முறையின் ஊடாகப் படைத்துக் கொண்ட சமயங்களின் தாக்கத்தை விழுமியங்களில் காணமுடியும். எடுத்துக்காட்டாக, பாலை நில மக்களின் வாழ்க்கை முறையில் மட்டுமல்லாமல், நாம் எதிர்மறையானவை எனக் கருதும் அவற்றின் சமூக விழுமியங்களிலும் கொற்றவையை முதன்மைப் படுத்தும் சமயத்தின் தாக்கம் உள்ளது என்பது வெளிப்படையானது.

திணைக்குடிகளின் வாழ்க்கை முறையின்மேல் ஒருவகை விமரிசனப் பார்வையைக் கொண்டிருந்த திருவள்ளுவர், அதன்பால் தாம் சுமத்த விரும்பிய விழுமிய ஒழுங்கமைப்பானது, சமயச் சிந்தனைகளின் தாக்கம் பெறாத ஒன்று என்று அனுமானிக்க இயலாது. சமயச் சார்பற்ற ஒருவகை அடையாளத்தை அவருடைய சிந்தனைகளில் அறிஞர்கள் சிலர் இனம் காண்பர். " காலம் கடந்த பொதுமை நூல்", "சமயச் சார்போ, இனச்சார்போ இல்லாமல் பொதுநோக்குடன் எழுதியது..." (மு.வரதராசன்,2007:77- 78). என்றும், "சமணர் கூறும் நல்ல கருத்துக்களை ஏற்கவும் திருவள்ளுவர் தயங்குவதில்லை. அதற்காக அவரை ஒரு சமயம் சார்த்துதல் தவறுஞ் சமயக்கணக்கர் மதிவழி கூறாதவர் வள்ளுவர் என்பதை மறுத்தல் கூடாது" (தமிழண்ணல்,1991: 197). என்றும் திருக்குறளின் சமயச் சார்பின்மையைப் பற்றிக் குறிப்பிடுவர்.

உலகம் தழுவிய ஒரு பொதுமறை திருக்குறள் என்னும் கருத்தை, அதனை ஃப்ரெஞ்சு மொழியில் மொழியாக்கம் செய்த ஈ.எஸ். ஏரியல் (E.S.Ariel) என்னும் அறிஞர் முன்வைத்துள்ளார். திருக்குறள், தமிழ்இலக்கியத்தின் தன்னிகரற்ற படைப்பாகும். மிகவும் உயரியதும் தூய்மையானதுமான மனிதச் சிந்தனை பற்றிய வெளிப்பாடுகளில் ஒன்றாகும். எல்லாவற்றையும் விட, குறளில் காணப்படும் வியப்புக்குரிய அம்சம் என்னவெனில், அந்நூலின் ஆசிரியர் ஒட்டுமொத்த மனித குலத்தின் சாதிகள், மக்கள் அல்லது நம்பிக்கைகள் ஆகிய எவற்றோடும் தன்னை இணைத்துத் தொடர்புப்படுத்திக் கொள்ளாமலேயே தன்னை வெளிப்படுத்திக்

கொண்டிருக்கிறார் என்னும் உண்மையேயாகும். இறைமை சான்ற அறநெறி, முழுமையான மெய்யறிவு ஆகிவற்றைக் கட்டமைக்கிறார். அத்துடன், அவற்றை அவற்றின் இயற்கையான சாராம்சத்தோடு, அவற்றின் நிலைபேறான கருத்தியல், நற்பண்பு, மெய்மை ஆகியவற்றை அவர் மிக உயர்ந்த திணைக்குடிக்குரிய சட்டங்களையும் சமூக வாழ்க்கை முறையையும் கொண்ட ஒரு குழுவினரிடையே நடைமுறையில் பயில்வது போல் எடுத்துரைக்கிறார். *(*E.S.Ariel *1848*, Journal of Asiatique*)*

திருக்குறள், இறைமை சான்ற அறநெறி, முழுமையான மெய்யறிவு ஆகியவற்றை இயற்கையான சாராம்சத்தோடு நிலைபேறான கருத்தியல், நற்பண்பு, மெய்மை ஆகியவற்றை, மிகவும் உயர்ந்த திணைக்குடிக்கு உரிய சட்டங்களையும் சமூக வாழ்க்கை முறையையும் கொண்ட ஒரு குழுவினரிடையே நடைமுறையில் பயில்வது போல் எடுத்துரைக்கிறார் என்ற ஏரியலின் திருவள்ளுவர் பற்றிய கூர்நோக்கு மிகவும் பொருத்தமானது. அதே வேளையில், அதனை ஒட்டி இரண்டு கருத்துக்களை இங்கு முன்வைக்க வேண்டும். (அ) அன்றைய தமிழ்த்திணைக்குடிகளின் இயல்பான சமூக பண்பாட்டு வாழ்க்கை முறை என்னும் சூழமைதியானது, ,ஒருவகையில் வள்ளுவரிடம் ஓர் இலட்சிய மாதிரியைத் திருக்குறளின் வாயிலாகப் படைத்தளிக்க உந்தியிருக்க வேண்டும். (ஆ) அந்த இலட்சிய மாதிரியைத் தமிழ்ச் சமூகத்தின் மாற்று விழுமிய ஒழுங்கமைப்பாகப் புகுத்துவதற்கு, ஒரு முன்மாதிரியாக, சமண சமய நெறிகளையே அடியொற்றிக் கட்டமைத்திருக்க வேண்டும். இந்தக் கோணத்தில், அறிஞர்கள் சிலரின் கருத்துகள் அமைகின்றன.

சமணம் முதலிய ஒருசில சமயங்களின் கொள்கைத்தாக்கம் எத்துணை அளவிற்குத் திருவள்ளுவருடைய கருத்துகளில் வெளிப்படையாக ஊடுருவிக் காணப்படுகிறது என்பதை வலியுறுத்தும் அறிஞர்களையும் காண்கிறோம். “திருக்குறளில் உள்ளடங்கி நிற்பது பெரிதும் சமண, புத்த சமயக் கருத்துக்களே” என்கிறார் குணா. (குணா, 1980: 40). “சமண சங்கத்தின் பெருமை, நீத்தார் பெருமை என்ற அதிகாரத்திற் கூறப்பட்டதென்றும், சமணரின் சிறப்புடைக் கொள்கையாகிய தருமம் அறன் வலியுறுத்தல் என்ற அதிகாரத்திற் கூறப்பட்டதென்றும்

*கூறுவர்.'' (ஆ.வேலுப்பிள்ளை,2010: 63).*

**விழுமியங்கள்: வெகுமதியும் தண்டனையும்**

*பொதுவாக, ஒரு குறிப்பிட்ட சமுதாயத்தில் பின்பற்றத் தக்கது, மீறக்கூடாதது என்னும் விதிகளை அடியொற்றி வழங்கும் விழுமியங்களை மீறுவோர், அச்சமுதாய நடைமுறைகளுக்கேற்ப, ஏதேனும் ஒருவகையில் தண்டிக்கப்படுவர். மேலும், விழுமியங்களைப் பேணுதலானது அனைவரின் சமூகக் கடமையாகும்; எனவே, அப்பேணுகைக்கு எனத் தனியே வெகுமதி ஏதும் கொடுக்கப்படுவதில்லை. ஆனால், அதே வேளையில், சில இன்றியமையாத் தருணங்களை ஒட்டி ஒழுகும் விழுமியங்கள், தனிமனிதர்களுக்கு வெகுமதியைப் பெற்றுத் தரும். எடுத்துக்காட்டாக, கைதவறிய மதிப்புடைய பொருளை மீட்டுக் கொண்டுவந்து, உரியவரிடம் கொடுப்பவருக்கு நன்றிக் கடனாக ஒரு பொருளைப் பரிசாக அளிப்பதைக் குறிப்பிடலாம். அவ்வாறே, ஆபத்தான கட்டத்தில் ஒருவரின் உயிரைக் காப்பாற்றிய மற்றொருவருக்குக் குறிப்பிடத்தக்க பொருளை வெகுமதியாகக் கொடுக்கலாம். இது ஒருவகை நன்றி பாட்டுதலாகும். புராணக் கதைகளில் அத்தகைய செயல்பாடுகளில் ஈடுபட்டவர்கள் கடவுளர்களால் அருள்பாலிக்கப்படுதல் ஒரு முக்கிய கதைக்கூறாக இடம்பெறுவதைப் பார்க்கிறோம் திருவள்ளுவரின் விழுமிய ஒழுங்கமைப்பில் விழுமியப் பேணுகை மற்றும் பேணாமை ஆகியவை முறையே வெகுமதி தண்டனை என்னும் நேர்மறை-எதிர்மறை விளைவுகளை உடனியைத்துக் கொண்டவையாகத் திகழ்கின்றன. இங்கு, திருவள்ளுவர் வேறொரு அணுகுமுறையையும் வெளிப்படுத்துகிறார். அதாவது,இயல்பான சமூகத்தில், அதன் கட்டுக்கோப்பான இயங்குகைக்கு ஏற்றவாறு மக்கள், விழுமியங்களைப் பின்பற்றி ஒழுகும் நிலையில், அது கடமையாக ஆகிறது; அதற்காக யாரும் பிரதிபலனை எதிர்பார்ப்பதில்லை. அது போல, ' கடமையை ஆற்றுவதற்குக் கைமாறு எதிர்பார்க்கப்படுவது கிடையாது. பெய்யும் மழையின் பொருட்டு, அதற்கு இவ்வுலகம் கைமாறு செய்கிறதா என்ன? ' என்ற பொருளில்'' கைம்மாறு வேண்டா கடப்பாடு மாரிமாட்டு என்னாற்றும் கொல்லோ உலகு''(22.ஒப்புரவு*

*அறிதல்,211)* என்று திருவள்ளுவர் வினவுகிறார்.

உயிரியற் பன்மைத்துவச் சூழலில் வாழும் மனிதன், அனைத்து உயிர்களையும் பாதுகாத்துப் பேணும் உயிர்ப்பாதுகாப்புக் கொள்கையை வலியுறுத்துகிறார்

*பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் நூலோர்*
*தொகுத்தவற்றுள் எல்லாம் தலை*

என்று, பகுத்து உண்டு அனைத்து வகையான உயிரினங்களையும் பாதுகாத்துப் பேணுதல் என்பது, நூலாசிரியர்கள் தொகுத்துக் கூறும் அறங்களில் எல்லாம் தலையானது (கொல்லாமை,33:322) என்கிறார். கொல்லாமையை முதன்மையான விழுமியங்களில் ஒன்றாகத் திருவள்ளுவர் வலியுறுத்துகிறார். அதற்குள் பல துணை விழுமியங்களை ஒருங்கிணைத்துக் கொல்லாமை அதிகாரத்தில் நிலை நிறுத்துகிறார். இல்லற வாழ்வில் ஈடுபடும் சமணர்களுக்கு வலியுறுத்தப்படும் ஐந்து விரதங்கள் 'அணுவிரதம்' எனப்படும். அவற்றுள் கொல்லாமை முதலாவதாகும். ஏனையவை, பொய்யாமை, கள்ளாமை, பிறன்மனை நயவாமை, பொருள் வரைதல் (வரையறைக்குட்பட்டுப் பொருளீட்டுதல்) ஆகியவையாகும். இவற்றோடு சேர்த்துக் கள் உண்ணாமை, ஊன் உண்ணாமை, தேன் உண்ணாமை, இரவு நேரத்தில் உணவு உண்ணாமை, ஆசாரியார் முதலிய பெரியோரை வணங்குதல் ஆகியவை உள்ளிட்ட பத்து விரதங்களும் சமணர்கள் இல்லற வாழ்வில் அன்றாடம் கடைப்பிடிக்க வேண்டிய ஒழுக்க நெறிகாகும். (மயிலை சீனி வேங்கடசாமி, 2020: 28–30). இவ்வொழுக்க நெறிகளையே திருவள்ளுவர் தமது நூலில் திட்பநுட்பத்துடன் கையாளுகிறார் வன்பது மிகவும் வெளிப்படையாகும். அடிப்படையில், இவையும் இவை போன்ற ஏனைய ஒழுக்க நெறிகளும் சமண சமயமத்தைச் சேர்ந்த மக்களின் சமூக வாழ்க்கையை ஆற்றொழுக்காகவும், கட்டுக்கோப்பாகவும் நடத்திச் செல்ல உதவும் நெறிவரம்புகளாக அமைந்த சமூக விழுமியங்காளாகும். இல்லற வாழ்வில் தம்மைப் பிணைத்துக் கொண்டவர்களுக்குச் சொல்லப்படும் ஒழுக்க நெறிகளைப் போலவே, சமண முனிவர்களுக்கும் ஒழுக்க நெறிகள் வலியுறுத்தப்பட்டுள்ளன (காண்க: 2020: 27) இவ்வாறு, சமணரின் சமய, சமூக வாழ்வைப்

பிணைத்திருக்கும் ஒழுக்க நெறிகளின் தொகுப்பை நாம், சமணரின் சமய- சமூக விழுமிய ஒழுங்கமைப்பாக அணுக வேண்டும். இந்தச் சமய- சமூக விழுமிய ஒழுங்கமைப்பு என்னும் சேமக் களஞ்சியத்தை (reportoire) அடியொற்றியே திருவள்ளுவர் தமது படைப்பில் ஒரு பகுதியளவில், தமிழ்த்திணைக்குடிகளின் சமூக நடத்தை முறைகளில் தாக்கம் செலுத்தவல்ல மாற்றுச் சமூக விழுமிய ஒழுங்கமைப்பின் வகைமாதிரியை எடுத்தாண்டிருக்க வேண்டும்.

இங்கு, ஒரு கருத்தினை நினைவுறுத்திக் கொள்ள வேண்டும். அதாவது, சமண சமய மரபிலும், திருக்குறளிலும் கையாளப்படும் ஒழுக்கநெறி பற்றிய கருத்துருவங்கள் முறையே ஒழுக்கம், விரதம், சீலம் மற்றும் அறம், அறவினை, ஒழுக்கம், அருள் என்பன போன்ற சொற்களால் குறிப்பிடப்படுகின்றன. அவற்றை விழுமியம் என்பதனோடு பொருத்திப் புரிந்து கொள்ளலாம்.

ஒரு குறிப்பிட்ட சமூகத்தில் விழுமியங்களைக் கடைப்பிடித்தல்,அல்லது அவற்றை மீறும் நிலையில் நேரும் பின் விளைவுகள் பற்றி-அதாவது, வெகுமதி- தண்டனை என்னும் கோணத்தில் சமூக அறிவியலர் விவாதித்துள்ளனர். இக்கோணத்தில், திருவள்ளுவர் வலியுறுத்தும் விழுமியங்களில் அவற்றை மீறுவோருக்குத் தண்டனை உண்டா என்னும் கேள்வி எழுகிறது. கண்டிக்கவோ, தண்டிக்கவோ செய்யக் கூடிய அதிகார அமைப்பு எதுவும் காணப்படவில்லை. ஆனால், மறைமுகமான அதிகார வடிவமாக ஏதேனும் ஒரு கருத்துருவம் அல்லது புதிர்மைத் தன்மை உடைய ஒரு நிகழ்வினம் அந்த இடத்தை எடுத்துக் கொள்கிறது எனலாம். எடுத்துக்காட்டாக,

*என்பி லதனை வெயில்போலக் காயுமே*
*அன்பி லதனை அறம்*

*(அன்புடைமை,8:77)* என்னும் குறளில்,'எலும்பற்ற புழு போன்ற உயிரினத்தை வெயில் காய்ந்து அழிக்குமாறு, அன்பிலாதாரை அறமானது தண்டிக்கும்' என்பது திருவள்ளுவர் கூற்று. மனிதன், அடிப்படையில், அன்பு என்ற விழுமியத்தால் ஒருங்கிணைக்கப்பட்டவனாக இருக்க வேண்டும். அப்படி இல்லாது

போனால், அவனை வருத்தித் தண்டிக்கும் அதிகாரம் அறத்தின்பால் சுமத்தப்படுகிறது. அவ்வாறெனில், அறமாவது, யாது என்னும் வினா எழுகிறது. அறத்தின்பால் ஓர் இயற்கை இறந்த ஆற்றலின் தன்மை புகட்டப்படுவது போல் தோன்றுகிறது. ஒவ்வொரு பொருளையோ சூழலையோஅடியொற்றிப் பேசும் போது, அறத்தைக் கையாளுகிறார். அறவினையை விளக்கும் நிலையில், கொல்லாமையே அறவினையாகும் என்கிறார். அவ்வாறே, அறவினையைப் போலவே, நல்லாறு பற்றியும் வரையறுக்கிறார்.'எந்த ஒன்றையும் கொல்லாமை என்பதை அடியொற்றிச் சூழும் நெறியே நல்லாறு' என்கிறார் (324) மனித நடத்தையில் தாக்கம் செலுத்தக் கூடிய மனதைச் செம்மைப்படுத்த வல்லதாக அறத்தையே வள்ளுவர் கருதுகிறார். அதனாலேயே மனதில் மாசற்றவனாக இருப்பதே அனைத்து அறங்களிலும் தலையானது (34) என்கிறார். மேலும், அழுக்காறு, ஆசை, கோபம், கடுஞ்சொல் பேசுவது ஆகிய நான்கினையும் ஒழித்து நடக்குமாறு செய்வது எதுவோ அதுவே அறமாகும் (34) என்று அறத்தை வரையறுக்கிறார்.

இவ்வாறு, அறம் என்பது, மனவுணர்வு, நடத்தை, நெறி. நடத்தை சார் விலக்கு (கொல்லாமை), போன்ற பலவற்றோடு பொருத்திப் பேசப்படுகிறது. சிறப்பையும் செல்வத்தையும் கொடுக்க வல்லதாகவும் (4:31), ஆக்கத் தன்மை உடையதாகவும், அவ்வாறே அதனை மறந்தால் கேடு விளைவிக்கும் இயல்புடையதாகவும் அறமானது விளக்கப்படுகிறது. திருவள்ளுவர் முன்வைக்கும் விழுமியங்கள் பலவற்றிற்குத் தலைமை வகிக்கும் முதன்மை நிலையினதாகவும், அவற்றை விளங்கிக் கொள்ள உதவும் வியாக்கியானச் சட்டகமாகவும் (framing) அறம் திகழ்கிறது. அனைத்திற்கும் மேலாகத் தனது புதிர்மைத் தன்மை உடையை போர்வையைப் போர்த்திக் கொண்டிருக்கும் தனது உருவத்தின் வாயிலாகப் புனிதம் என்னும் எல்லைக்குள் வேரோடியிருக்கும் அதன் இயல்பினையும் அடையாளம் காணவியலும். திருக்குறளில் ஆளப்பட்டிருக்கும் அறத்திற்கு உரையாசிரியருள் சிலர், அறக்கடவுள் எனப் பொருள் கூறுவர். என்பிலதனை வெயில் காய்வது போல், அன்பிலதனை அறம் காயும் என்றவிடத்தில் அறத்திற்கு ஒருவகை மனிதப்பண்பேற்றம்அல்லதுகடவுள்பண்பேற்றம் ஊட்டப்படுகிறது. அதனை ஒட்டியே சங்க இலக்கிய நூல்கள் சிலவற்றில் அறத்தைக்

குறிப்பிடும் நிலையில் 'அறக்கடவுள்' என்று உருவகத்துக் கூறக் காண்கிறோம். எடுத்திக்காட்டாகப் பதிற்றுப்பத்தில் "வாள் வலியுறுத்து செம்மை பூஉண்டு,அறன் வாழ்த்த நற்கு ஆண்ட" (90:11-12) என்னும் அடிகளுக்குப் பொருள் கூறுகையில், "அறக்கடவுள் வாழ்த்தும்படி" என்று விள்கம் தருவர். (பதிற்றுப்பத்து 2004: 325ரு327). சங்க கால மக்கள் தாம் செய்த தீவினைகளைப் போக்கத் தக்கதான கழுவாய்களையும், (பிராயச்சித்தம்) அவ்வாறே, அறங்களையும், அறம்பிழைத்த செயல்கள் நிகழ்ந்தவழிப் பிராயச்சித்தம் செய்தலையும் மேற்கொண்டொழுகிய சடங்கியல் வழக்கத்தில் ஈடுபட்டமையைப் புறநானூற்றுப் பாடல் (34: 1-7) ஊடாகச் சான்று காட்டி விளக்குவர். அதன் தொடர்பில், அறத்தையே கடவுளாக்க் கூறுதலும் உண்டு என்று உரையாசிரியர்களை ஆதாரம் காட்டுவர் (மு.சண்முகம் பிள்ளை,2003:270). சிலப்பதிகாரப் பாயிரத்தில் இடம்பெறும் "அரைசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்றாவதூஉம்"(55) என்ற அடிக்குப் பொருள் கூறுகையில்,'அறக்கடவுளே கூற்றமாகும்' என்பர். (ந.மு.வேங்கடசாமி நாட்டார்,2009:32) இவ்வகைச் செய்திகள் என்பன திருவள்ளுவர் கையாளும் சொல்லாட்சியான அறமானது தன்னில் உட்கொண்ட புதிர்மைப் பண்பிலான பொருளில் ஒருவகைப் புனிதத் தன்மையை ஒருங்கிணைத்துக் கொண்டிருப்பதை அறியலாம். இங்கு கிளிஃபோர்ட் கீர்ட்ஸ், சமயத்திற்கும் விழுமியங்களுக்கும் இடைப்பட்ட தொடர்பினை நினைவுகூர்ந்து அமைதி காணவியலும்.

சமயக் கருத்துருவம், நம்பிக்கைகள் ஆகியவற்றின் தாக்கம் திருவள்ளுவரிடம் காணப்படும் இயல்பினை வேறு சில எடுத்துக்காட்டுகளின் ஊடாகவும் புரிந்து கொள்ளவியலும். ஆதி பகவன் (1:1), வாலறிவன் (1:2),அறவாழி அந்தணன் (1:8),இறைவன்(1: 10), இந்திரன் (3:25) தெய்வம் (5:43; 6:55) வானுறையும் தெய்வம்(5:50), வானத்தவர்(9:86), கூற்று (33:326), ஊழ்(38: 360), என்பன அவற்றுள் சிலவாகும். இவற்றில், ஊழ் என்பது தமிழ் மெய்யியல் மரபுக்கு உரியதென்பர்.

## ஊழ்க் கோட்பாடு

ஊழ் என்னும் கோட்பாடும் மறுபிறப்புக் கோட்பாடும் சமண, பௌளத்த சமயங்களுக்கு உரிய கோட்பாடுகளாக எண்ணுவர். ஆனால், அவ்விரு கோட்பாடுகளும் சமண, பௌத்த சமயங்களின் தோற்றத்திற்கு முன்னரே பண்டையத் தமிழரிடையே தோன்றிய சிந்தனைகளால் வளர்த்தெடுக்கப்பட்ட செப்பமுறாத கோட்பாடுகள் என்று அறிஞர் கூறுவர். ஆனால், அவற்றுக்குச் செறிவான மெய்யியல் வடிவம் கொடுத்துப் பரவலாக்கம் செய்த சிறப்பெல்லாம் சமண சமயத்தையே சாரும். அத்துடன், பௌத்த சமயமும் கூட, ஊழ்க்கோட்பாட்டில் உடன்பாடு காண்கிறது என்பர். (குணா,1980: 46-47). இத்தகைய ஊழ்க்கோட்பாட்டின் தாக்கத்தையே திருக்குறளில் காண்கிறோம்.

*ஊழிற் பெருவலி யாவுள மற்றொன்று*
*சூழினும் தான்முந் துறும்.* *( ஊழ், 38: 380).*

" ஊழை விட, மிகவும் வலிமை உடையது யாதுள்ளது? அதனைத் தவிர்ப்பதற்கு முயன்றாலும், அது தானே முந்திக் கொண்டு வந்து விடும்" என்ற பொருளில் ஊழின் வலிமையைத் திருக்குறள் பேசுகிறது. சமண, பௌத்த சமயங்களின் ஊழ்வினைக் கோட்பாட்டில், ஊழ்வினையானது, தனித்த பெரும் ஆற்றலாக, கடவுளின் செயல்பாட்டிற்கும் ஆளுகைக்கும் அப்பாற்பட்ட ஒன்றாக நிறுத்தப்படுகிறது. அதனையே மேற்கண்ட குறளில் திருவள்ளுவர் வெளிப்படுத்துகிறார். சமணமும், பௌத்தமும் முன்வைக்கும் ஊழ்வினைக் கோட்பாடு என்பது, தனது சுயேட்சையான தனிப்பெரும் ஆற்றலாகத் திகழ்வது என்னும் இயல்பின் அடிப்படையில், பிராமணிய வைதிகமும், சைவ சித்தாந்தமும் முன்னிறுத்தும் ஊழ்வினைக் கோட்பாட்டிலிருந்து வேறபடக் கூடியது என்று அறிஞர் சுட்டிக் காட்டுவர். எடுத்துக் காட்டாகச் சொல்வோமெனில், ஊழ்வினையால் தோன்றும் மறுபிறப்பு முதலிய துன்பங்கள் யாவும் கடவுளால் தோற்றுவிக்கப்படுபவை என்று கூறும் சைவசித்தாந்தம் முதலியவற்றின் அணுகுமுறையைக் குறிப்பிடலாம். ஆனால், இவ்வகைக் கோட்பாட்டிற்கு எதிர்மறையானதாக அமைவதே சமண,

பௌத்த சமயங்களின் ஊழ்வினைக் கோட்பாடென்பர். அதாவது, ஒரு பிறவியில் ஒருவனுக்குப் பிறவித் துன்பத்தைக் கொடுப்பது, ஒரு பிறப்பில் செய்த தீவினைகளே அல்லால், அவ்வூழ்வினைகள் கடவுளால் படைக்கப்படுவனவோ, விதிக்கப்படுவனவோ அல்ல என்னும் பொருளிலேயே சமண, பௌத்த சமயக் கோட்பாடுகள் விளக்குகின்றன என்பர் (குணா, 1980: 47 ).

இவ்வாறு, ஊழ்வினையானது யாதொன்றாலும் கட்டுப்படுத்தப்பட வியலாத, கடவுளின் தனிப்பெரும் ஆற்றலுக்கும் அப்பாற்பட்ட, சுயேட்சைத் தன்மை உடைய தனிப்பெரும் ஆற்றலாகக் கருதப்படுகிறது.

அதனையே 'ஊழ்' அதிகாரத்தில் திருக்குறள் உறுதிப்படுத்துகிறது (380) என்பதையும் பார்த்தோம். "ஊழ்வினை உறுத்து வந்து ஊட்டும்" ( சிலம்பு, பதிகம் :57) என்று சிலப்பதிகாரம். தனது இலக்கிய உலக மாந்தர்களான கோவலன்- கண்ணகி ஆகிய இருவருக்கும் முற்பிறவியில் இழைத்த தீவினையின் பயனாகவே கோவலன் அரசனால் கள்வன் என்று குற்றம் சாட்டப்பட்டுக் கொலைத்தண்டனைக்கு ஆளாவதும் கணவனை இழந்துக் கண்ணகி மாளாத் துன்பத்தை அனுபவிக்க நேர்வதும் ஆகிய அடுக்கடுக்கான சம்பவங்களைக்கொண்ட இகல்உலகவாழ்க்கைஅமைகிறது என்பதை விளக்குகிறது. எது வந்துச் சூழினும், தடுப்பினும். ஒருவருடைய முற்பிறவிப் பலனை மறுபிவியில் அனுபவத்தே கடக்க வேண்டும் என்பது ஊழ்வினைக் கொள்கையின் மாற்றவியலாத விதியாகும். இது ஒருவகையில், சமண, பௌத்த சமயங்களின் வழிப்பட்ட வாழ்க்கை பற்றிய மதிப்பீடாகவும், பண்பான்மையாகவும் உலகக் கண்ணோட்டமாகவும் ஒருங்கே அமைவனவாகும்.

ஊழ்வினை வலிமை மிக்கது; அதன் போக்கையோ அது ஏற்படுத்தும் விளைவையோ வேறெதனாலும் மனித முயற்சியாலும் மாற்ற முடியாத ஒன்றென்னும் கருத்தில் உறுதி காணும் திருவள்ளுவர், ஊழ்வினையால் விளையக் கூடிய பிறவி என்னும் துன்பத்திலிருந்துத் தம்மை விடுவித்துக் கொள்வதற்கு மக்கள் கடவுளை நாடவேண்டும்

என்கிறார். அவர்தம் இவ்வணுகுமுறையானது, பின்வரும் குறள்களில் வெளிப்படக் காணலாம்:

*அறவாழி அந்தணன் தாள்சேர்தார்க் கல்லால்*
*பிறவாழி நீந்தல் அரிது. ( கடவுள் வாழ்த்து, 08)*

*பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்*
*இறைவன் அடி சேரா தார். ( கடவுள் வாழ்த்து , 10)*

*பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றை*
*பற்றுக பற்று விடற்கு. ( துறவு, 350)*

'இறைவனுடைய தாளைப் பணிந்து, அவனுடைய அருளைப் பெறுதல்', 'பற்றே இல்லாதவனின் மேல் பற்று வைத்துப் பற்றிலிருந்து விடுபடுதல்' என்பன போன்ற கருத்துகள், ஊழ்வினைக் கோட்பாட்டின் தனித்தன்மையிலிருந்து விலகிய நிலையைக் காட்டுவன என்பர்.

ஊழ்வினைக் கோட்பாடானது, 'தினை விதைப்பவன் தினை அறுப்பான், வினை விதைப்பவன் வினையே அறுப்பான்' என்னும் அடிப்படையைக் கொண்டது. இதனை ஏனைய பிற சமயங்களும் வெளிப்படுத்தின. ஆனால், அவை யாவும்( வைதிகம், சைவம் முதலியன) கழுவாய், கைம்மாறு, பாவமன்னிப்பு போன்றவற்றின் வாயிலாகத் தீவினைகளின் விளைவுகளில் இருந்துத் தப்புவதற்கு உபாயங்கள் கூறுகின்றன. ஆனால், சமணம் மட்டுமே ஒரு பிறவியில் ஒருவன் செய்த நல்வினைகளும் தீவினைகளும் மறுபிறவியிலும் உடனியைந்து வருவதால், அதிலிருந்துத் தப்ப இயலாது எனக் கூறுகிறது. இந்த நிலைப்பாட்டிலிருந்துப் பிற்காலத்தில் சமணம் மாறியதற்குக் காரணம், அது, கடவுட் கோட்பாட்டை ஏற்றுக் கொண்டதே ஆகும் என்பர்( 1980:161).

சமணத்தின் சுயேட்சைத் தன்மை உடைய ஊழ்க் கோட்பாடும், கடவுள் கோட்பாடும் திருக்குறள் முன்வைக்கும் பல்வேறு விழுமியங்களைப் புரிந்துக் கொள்ள உதவும். சமணத்தோடு திருவள்ளுவர் கொண்ட சார்புநிலையை நுட்பமாக வெளிப்படுத்தும்

கருத்துக்களும், ஊழ்வினைக் கோட்பாடும் மனித வாழ்க்கையில் சமயம் பெறும் முக்கியத்தவத்தை அறிந்து கொள்ள துணைபுரிகின்றன. இங்கு , கிளிஃபோர்ட் கீர்ட்ஸ், மனித நடத்தையில் சமயம் ஆற்றும் பங்கினைப் பற்றி எடுத்துரைக்கும் கருத்தை நினைவுறுத்திக் கட்டுரையை நிறைவு செய்யலாம்:

" குறிப்பிட்ட மக்கள் தங்கள் நடைமுறையில் கொண்டிருக்கும் மதிப்பீடுகள், வாழ்தலின் பொது ஒழுங்கு ஆகிய இரண்டினுக்கும் இடைப்பட்ட ஒரு பொருட்செறிவான தொடர்புப் பற்றிய செயல்முறை விளக்கம் என்பதற்குள்ளாக, அது ( அத்தொடர்பு ) ஓர் இன்றியமையாத கூறாக அனைத்துச் சமயங்களிலும் தன்னை இனம் காண்கிறது. என்றாலும் அம்மதிப்பீடுகள் அல்லது அவ்வொழுங்கானது பொருள் கொள்ளப்பட வேண்டும். எந்த ஒரு சமயமாக இருந்தாலும் சரி, அது, தான் ஒரு பகுதி அளவில். பொதுவான அர்த்தங்களின் தொகுப்பைப் பாதுகாத்து வைத்திருக்கும் ஒரு முயற்சியாகும். அந்த அர்த்தங்களின் அடிப்படையிலேயே ஒவ்வொரு தனிமனிதனும் தனது அனுபவத்தை விளங்கிக் கொண்டு, தனது நடத்தை முறையை ஒழுங்கமைத்துக் கொள்கிறான் (Clifford Geertz, *1973: 126- 127)*.

## ஆதார நூல்கள்


*குணா, 1980: தமிழர் மெய்யியல், சென்னை: பொதுமை வெளியீடு*

*சண்முகம் பிள்ளை, மு:2003: சங்கத் தமிழரின் வழிபாடும் சடங்குகளும், சென்னை: உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்*

*தமிழண்ணல், 1991: புதிய நோக்கில் தமிழ் இலக்கிய வரலாறு, மதுரை: மீனாட்சி புத்தக நிலையம்*

*வரதராசன், மு.2007: தமிழ் இலக்கிய வரலாறு, புது தில்லி: சாகித்திய அகாதெமி*

*வேங்கடசாமி, மயிலை. சீனி.2020: சமணமும் தமிழும், சென்னை: கழக வெளியீடு*

*வேங்கடசாமி நாட்டார், நாவலர் ந.மு..உரையாசிரியர்: 2009: ஐம்பெருங்காப்பியங்கள் 1.சிலப்பதிகாரம், சென்னை: இளங்கணி பதிப்பகம் வேங்கடராமையா, வித்துவான் கா. மு.1988:திருக்குறள் மூலமும் பரிப்பெருமாள் உரையும், அண்ணாமலை நகர்: அண்ணாமலைப் பல்கலைக்கழகம்*

*வேலுப்பிள்ளை, ஆ.2010: தமிழ் இலக்கியத்தில் காலமும் கருத்தும், கொழும்பு- சென்னை: குமரன் புத்தக இல்லம்*

*2004: பதிற்றுப்பத்து மூலமும் உரையும். சென்ன: நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்(பி) லிட்*

Clifford Geertz, 1973: The Interpretation of Cultures, Princeton: Basic Books, A.Division of HarperCollins Publishers

Ethel M.Albert, 1972: "Value Systems ",Ibid 287–291

Robin M. Williams,Jr 1972: " The Concept of Values ",International Encyclopaedia of the Social sciences vol.15 283-287, New York: The Macmillan Company

# தமிழ் நாட்டு மீனவர் வரலாறு: கன்னியாகுமரி மீனவர்களும் செல்லப்பிள்ளையும்

வீ.செல்வகுமார்*

*கட்டுரைச்சுருக்கம்:* *தமிழ் நாட்டு மீனவர் வரலாறு இன்னும் முழுமையாக எழுதப்படவில்லை. மீனவர்கள் குறித்த சான்றுகள் தமிழ் இலக்கியங்களிலும், கல்வெட்டுகளிலும் காணப்படுகின்றன. இக்கட்டுரை தமிழ் நாட்டு மீனவர் வரலாறு தொடர்பான கல்வெட்டு சான்றுகளைத் தொகுத்து அளிக்கிறது. இனவரைவியல் கள ஆய்வுகளின் அடிப்படையில் இது மீனவர்களின் வாழ்வியலை விளக்க முற்படுகிறது. கன்னியாகுமரி மீனவர்கள் திமிங்கிலத்தை தங்களது செல்லப்பிள்ளை என அழைக்கின்றனர். மேலும் இக்கட்டுரை பிணைப்புக் கோட்பாட்டைப் (*Entanglement theory*) பயன்படுத்தி மீனவர்கள், படகு, கடல், திமிங்கிலம் ஆகியவற்றிற்கிடையே உள்ள பிணைப்பை விளக்குகிறது.*

## I.முன்னுரை

*பொதுவாக, இந்தியாவின் கடற்கரைச் சமூகங்களின் வரலாறு பெரிதும் ஆராயப்படாமலேயே உள்ளது. குறிப்பாக, தமிழ் நாட்டு மீனவர்களின் வரலாறும் முழுமையாக ஆராயப்படவில்லை, எழுதப்படவில்லை. இதற்கு அடிப்படையான காரணம், பொதுவான வரலாறு, அரசர்களையும், அரச வம்சங்களையும், அயலகத் தொடர்புகளையும் மையப்படுத்தப்பட்டு எழுதப்பட்டதுதான். மக்கள், சமூக வரலாறு மிகவும் குறைவாகவே எழுதப்பட்டுள்ளது. இருபதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில்தான் மக்கள் வரலாறு எழுதுவதற்கான அடித்தளம் இடப்பட்டது. மக்கள், சமூகங்களின் வரலாறு அண்மைக்காலமாக பல ஆய்வாளர்களால் எழுதப்பட்டுவருகிறது (எ.கா.தொ.பரமசிவன், ஆ. சிவசுப்பிரமணியன்,* Sivasubramanian *2009;* Selvakumar *2019, 2022). இருப்பினும், இப்பொருண்மையில் இன்னும் அதிக முயற்சிகள் செய்யவேண்டியுள்ளது. குறிப்பாக வரலாறு, மானுடவியல்,*

* *கடல்சார் வரலாறு மற்றும் கடல்சார் தொல்லியல் துறை, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர் 613010,* selvakumarodi@gmail.com

தொல்லியல், நாட்டுப்புறவியல் போன்ற புலங்களின் துறையிடை அணுகுமுறைகள் இணையவேண்டிய கட்டாயமும் இங்கு ஏற்பட்டுள்ளது. வரலாற்றாய்வாளர்களின் அரசியல் வரலாறுச் சார்புடைய அணுகுமுறை மட்டுமின்றி, போதிய எழுதப்பட்ட வரலாற்றுச் சான்றுகள் இல்லாமையும் பல சமூகங்களின், காடுகளில் வாழும் பழங்குடி மக்களின் வாழ்க்கை வரலாற்றை எழுத இயலாமைக்கான ஒரு முக்கியமான குறை எனலாம். இவ்வாறு வரலாற்றுச் சான்றுகள் இல்லாத சமூகங்களின் வரலாற்றை எழுத வாய்மொழி வழக்காறுகள், நாட்டுப்புறவியல் அணுகுமுறைகள், இனவரைவியல் சான்றுகள், தொல்லியல் ஆகியவை உதவுகின்றன. இனவரைவியல் சான்றுகளையும், வாய்மொழி வழக்காறுகளையும் அப்படியே கடந்தகால வரலாற்றை விளக்கும் சான்றுகள் எனக் கருதமுடியாது. பண்பாடுகள் ஒரே நிலையில் இருப்பதில்லை. ஏனெனில் மக்களின் வாழ்க்கை முறைகள் காலத்திற்கு காலம் மாறிவருகின்றன. இருப்பினும் மக்கள் வாழ்வியலில் சில வரலாற்று, பண்பாட்டுத் தொடர்ச்சிகள் உள்ளன. அவற்றைக்கொண்டு இச்சமூகங்களின் பழங்கால வரலாற்றை ஓரளவு புரிந்துகொள்ளலாம். வேறு சான்றுகள் இல்லாத நிலையில் இனவரைவியல், வாய்மொழி வழக்காற்றுச் சான்றுகள் இச்சமூகங்களின் வரலாற்றுக் கூறுகளைப் புரிந்துகொள்ள மிகவும் முக்கியமானவையாக விளங்குகின்றன.

இங்கு மீனவ சமூகங்களின் மரபுசார் படகு கட்டுமான முறைகளை எடுத்துக்காட்டாகக் கூறலாம். 2003-04க்கும் 2026 க்கும் இடையில் மட்டுமே தென்னிந்திய மீன்பிடிப் படகுகளில் பல மாற்றங்கள் வந்துவிட்டன எனலாம். மரபுசார் படகுகளான கட்டுமரம், மசூலா போன்றவை 2004 சுனாமிக்குப் பின்னர் தமிழ் நாட்டின் கிழக்குக் கடற்கரையில் பெரிதும் அழிந்துவிட்டன. சோழமண்டலக் கடற்கரையில் பரவலாகக் காணப்பட்ட இப்படகுகள் இன்று முற்றிலும் காணப்படவில்லை அல்லது வெகு அருகியே காணப்படுகின்றன. இதற்கு நவீனமயமாக்கமும் ஒரு முக்கியமான காரணியாகும். சமகாலப் பண்பாடுகளை, நாம் பல ஆண்டுகளாக ஆராயும் போது காலங்காலமாகவும், அண்மைக்காலத்திலும் ஏற்படும் மாற்றங்களையும், அவற்றிற்கான காரணிகளையும் அறிந்துகொள்ள முடிகிறது. சங்க இலக்கியமும், இடைக்கால இலக்கியமும் கடந்த காலச் சமூகங்களின் இனவரைவியல் பார்வைகளை நமக்கு

அளிக்கின்றன. காலனியாதிக்ககாலக் குறிப்புகளிலிருந்து தமிழ் நாட்டுச் சமூகங்களின் தெளிவான இனவரைவியல் வரலாற்றையும், மாற்றங்களையும் நம்மால் ஓரளவு புரிந்துகொள்ளமுடியும். எனவே, வரலாற்றையும், வரலாற்று மாற்றங்களையும் புரிந்துகொள்ள இனவரைவியலும், இனவரைவியல் வரலாறும் சிறப்புமிக்க கருவிகள் எனலாம். இனவரைவியல் பண்பாட்டின் பலவகையான முகங்களையும், நம்பிக்கைகளையும் பண்பாடுகளுக்கும் இயற்கைக்கும் இடையே உள்ள உறவுகளை வெளிப்படுத்துகிறது. இயற்கையும் மனிதர்களும் எவ்வாறு பிணைந்துள்ளன என்பதையும் இனவரைவியல் நமக்கு உணர்த்துகின்றது. இனவரைவியல் சான்றுகள் முற்றிலுமாக வரலாற்றுச் சான்றுகளுக்கு மாற்றாக இல்லையென்றாலும், அவற்றில் காலங்காலமாக தொடர்ந்து வந்த மரபுசார் அறிவும், பண்பாட்டுக்கூறுகளும் உள்ளன. அந்த வகையில் இனவரைவியல் வரலாற்று மீளுருவாக்கத்திற்கு ஓரளவு உதவும். அது போல சமகால சமகால இலக்கியமும் இனவரைவியல் கூறுகளை உட்படுத்தி அமைகின்றன.

இக்கட்டுரை தமிழ் நாட்டு மீனவர்கள் வரலாறு குறித்த சில குறிப்புகளையும், கன்னியாகுமரி மீனவர்களின் இனவரைவியல் பதிவுகளை அளிக்கிறது. குறிப்பாக, செல்லப்பிள்ளை எனப்படும் திமிங்கிலம் குறித்து தகவலை இயற்கை-மனிதப் பிணைப்பு (entanglement; Hodder 2012, 2014) என்ற அணுகுமுறையில் ஆய்கிறது.

## 2. முந்தைய ஆய்வு

தென்னிந்திய மீனவர்களைக் குறித்த பதிவுகளில் குறிப்பிடத்தக்கவை காலனியாதிக்க காலக்குறிப்புகளாகும். காலனியாதிக்க காலத்திற்கு முந்தைய காலத்தில் மீன்வர்கள் குறித்த பல இலக்கியக் குறிப்புகள் உள்ள. பொ.ஆ.1535–37 இல் தென் தமிழ் நாட்டின் பரதவர்கள் போத்துக்கீசியர்களின் துணையுடன் கிறுத்துவ சமயத்தைத் தழுவினர். இவர்கள் இஸ்லாமியர்களுடனான முரணில் கிருத்துவசமயத்தைத் தழுவியதாகக் கூறப்படுகிறது (Hornell 1922; Hambye et al. 1964; Maloney 1968, 1969; Patrick Roche 1984; டெக்லா 2009; Rajesh 2014). சிமோன் காசி செட்டி அவர்களின் ஆய்வுக்கட்டுரை பரவர்

வரலாற்றைக்கூறும் கட்டுரையாகும் (Casie Chitty 1837). பரத வம்ச விளக்கம் (1887) வித்வான் சோ.சு. இராமநாதபிள்ளை அவர்களால் எழுதப்பட்ட மீனவர் குறித்த நூலாகும். மீனவர் தோற்றத்தைக் கூறும் ‘பரவர் புராணம்’ என்னும் நூலை த.அருளப்ப முதலியார் 1909 இல் இயற்றினார். தர்ஸ்டன், ரங்காசாரி (Thurston and Rangachari 1909) அவர்களுடைய தென்னிந்திய குலங்களும் குடிகளும் என்ற நூல் தமிழ் நாட்டு மீனவர் குறித்து பேசுகிறது. ஜேம்ஸ் ஹார்னலின் அறிக்கை மன்னார், பாக் குடாக்களில் முத்துக்குளிக்கும் பரதவர்களைக் குறித்த விவரங்களைப் பதிவு செய்தது (Hornell 1922). தமிழ் நாட்டு மீனவர் குறித்த ஆய்வுகளில் குறிப்பிடத்தக்கது கிளாரன்ஸ் மலோனி அவர்களின் பரதவர்களைக் குறித்த ஆய்வாகும் (Maloney 1968, 1969). மீனவர்கள் குறித்த சில தகவல்கள் நீலகண்டசாஸ்திரியாரின் சோழர்கள் என்ற நூலில் காணப்படுகின்றன.

தமிழ் நாட்டு மீனவர் இனவரைவியல் குறித்து பல ஆய்வுகள் நடத்தப்பட்டுள்ளன. தமிழ் நாட்டு மீனவர் குறித்த பல ஆய்வுக்கட்டுரைகளும் நூல்களும் உள்ளன (Bayly 1990; Patrick Roche 1984, சாந்தினிபீ 2022; Petrishya 2025; ஜெரோமி பெட்ரீஷியா 2026). என். ஸ்டீபன் எழுதிய கன்னியாகுமரி மாவட்ட மீனவர்களின் வாழ்வியல் (1994) அப்பகுதி மீனவர்களின் வாழ்க்கை முறைகளைப் பதிவு செய்கிறது. ஆ தனஞ்செயனின் குலக்குறியியலும் மீனவர் வழக்காறுகளும் (2012) மீனவர் இனவரைவியல் குறித்த ஒரு முக்கியமான ஆவணமாகும். பக்தவச்சல பாரதி பட்டணவர்களின் இனவரைவியலை விரிவாகப் பதிவு செய்துள்ளார் (Bhakthavatsala Bharathi 1999). மீனவர்களின் படகுகள் குறித்து, கன்னியாகுமரி மீனவர்கள் குறித்து பல ஆய்வுகள் செய்யப்பட்டுள்ளன. கன்னியாகுமரி முக்குவர் பண்பாட்டியல் வரலாறு குறித்து வறீதையா காண்ஸ்தாந்தின் விரிவாக எழுதியுள்ளார் (2019). குறும்பனை பெர்லின் மீனவர்களின் கன்னியாகுமரி மீனவர்களின் சொல் அகராதியை வெளியிட்டதுடன், மீனவர் வாழ்வியல் குறித்து தனது நூல்களில் பதிவு செய்துள்ளார். பல புதினங்கள், நவீன இலக்கியங்கள் தமிழ் நாட்டு மீனவர் வாழ்வியலைப் பதிவு செய்துள்ளன. மேலும் அண்மையில் வெளிவந்துள்ள சமூக ஊடகக் காணொலிகள் மிக முக்கியமான இனவரைவியல் பதிவுகளை அளிக்கின்றன. இவை அனைத்தையும் இக்கட்டுரையில் பதிவு செய்வது இயலாததாகும்.

## 3. தமிழ் நாட்டு வரலாற்றில் மீனவர்கள்

*மீன்பிடித்தொழில் தமிழ் நாட்டில் வரலாற்றுக்கு முற்பட்டகாலத்திலிருந்தே நடைபெற்றுவருகிறது. தூத்துக்குடிக்கு அருகில் உள்ள தேரி மணற்குன்றுகளிலும், கடற்கரைப் பகுதிகளிலும் நுண்கற்கருவிகள் கிடைக்கின்றன. இவை நுண்கற்கால மக்கள் கடற்கரைப் பகுதிகளில் மீன் பிடித்து வாழ்ந்துவந்தமையை உணர்த்துகின்றன. புதியகற்காலத் தொல்லியல் இடமான கோயம்புத்தூருக்கு அருகில் உள்ள மோளப்பாளையத்தில் கடற்சங்குகளும், சங்காலான மணிகளும் கிடைத்துள்ளன. இவை புதிய கற்காலத்தில் (பொ.ஆ.மு. 1600–1200) இல் தமிழ் நாட்டுக் கடற்கரையில் மீனவர்கள் சங்கு சேகரித்து உள்நாட்டுடன் பண்டமாற்று செய்ததற்கான சான்று எனக் கருதலாம் (*Selvakumar et al., *2019, 2022, 2026). கடற்கரை மீனவர்கள் சங்கு சேகரித்ததற்கான சான்றுகள் புதிய கற்காலத்திலிருந்து தெளிவாகக் கிடைக்கின்றன. இரும்புக்காலச் சான்றுகள் தமிழ் நாட்டின் கடற்கரைப் பகுதிகளில் பரவலாகக் கிடைக்கின்றன. மேலும் கடற்சங்கு அணிகலன்கள் இரும்புக்கால ஈமச்சின்னங்களில் கிடைக்கின்றன. குறிப்பாக ஒடுகத்தூர், சாணூர் ஆகிய இடங்களில் ஈமச்சின்னங்களில் கடற்சங்கு அணிகலன்கள் கிடைத்துள்ளன. வரலாற்றுக் காலத்தில் மீனவர்கள் குறித்த சான்றுகள் சங்க இலக்கியத்தில் வெகுவாகக் காணப்படுகின்றன. நெய்தல் திணை வாழ்வியல் சங்க இலக்கியங்களில் விரிவாகப் பேசப்படுகிறது (*Selvakumar *2023). மீனவர்கள் வாழ்க்கைமுறைகள் குறித்த இனவரைவியல் பதிவுகள் இலக்கியத்திலும், பொருள்சான்றுகள் தொல்லியலிலும் (மீன் எலும்புகள், படகு எ.கா.பட்டணம், கேரளா) கிடைக்கின்றன.*

*மீனவர்களில் பரதவர், பட்டினவர் என்ற குழுக்களும் முக்குவர் என்ற இனக்குழுவும் தமிழ் நாட்டில் இன்று உள்ளனர். முக்குவர் கேரளத்தில் அதிகமாகவும், தமிழ் நாட்டில் கன்னியாகுமரிப் பகுதியிலும் காணப்படுகின்றனர். காணி பழங்குடிகளையும் மீனவர்களையும் இனத் தொடர்புடையவர்களாகவும் காட்டக்கூடிய வாய்மொழி மரபுகள் உள்ளன (தகவல்: விஜின்).*

வரலாற்றுக்காலத்தில் மீனவர் வாழ்வியல் குறித்த சில கல்வெட்டுக்கள் தமிழ் நாட்டில் காணப்படுகின்றன. அவற்றை இங்கு காணலாம். இக் கல்வெட்டுகளில் மீனவர்களைக் குறித்த விரிவான தகவல்கள் இல்லை. சில இடங்களில் மீனவர் குடியிருப்பு, பட்டணவர், தனி நபர் பெயர்கள் மட்டுமே காணப்படுகின்றன.

**அழகர்மலை தமிழிக் கல்வெட்டு (பொ.ஆ. முதலாம் நூற்றாண்டு)**

கடல்சார் உப்புத்தொழில் குறித்த மறைமுகமான கல்வெட்டு "மத்திரைகே உபு வணிகன் வியக்கன் கணதிகன்" என அழகர்மலையில் காணப்படும் தமிழிக் கல்வெட்டு எனலாம். இதில் கூறப்படும் உப்பு வணிகன் மீனவரா அல்லது உமணரா அல்லது வேறு வணிகரா என்பது தெரியவில்லை. அல்லது இவர் கடற்கரை சார்ந்த சமூகத்தவராக இருந்திருக்கலாம். சங்க இலக்கியத்தில் உமணர்கள் குறித்து பல குறிப்புகள் உள்ளன. இவர்கள் தமிழ் நாட்டின் பல பகுதிகளுக்கும் உப்பு ஏற்றிச்சென்றவர்கள் ஆவர்.

**இலக்கியக் குறிப்புகள்**

சங்க இலக்கியத்திலும் இடைக்கால இலக்கியத்திலும் மீனவர், பரதவர் குறித்த குறிப்புகள் உள்ளன. மீன்விலைப் பரதவர் என்ற குறிப்பு சிலப்பதிகாரத்தில் உள்ளது, (5, 25). நெய்தல் நில வாழ்வியல் சங்க இலக்கியத்தில் பரவலாகக் காணப்படுகிறது.

**வேள்விக்குடி செப்பேடு (பொ.ஆ. 770)**

தமிழ் நாட்டின் வரலாற்றுச் சான்றுகளில் மிகவும் குறிப்பிடத்தக்கது வேள்விக்குடி செப்பேடாகும். பொ.ஆ. 770 இல் ஜடில பராந்தகன் தன்னுடைய செப்பேட்டில்.

*"நெல்வேலிச் செருவென்றும்*
*விரவி வந்தடையாத*
*பரவரை பாழ்படுத்தும்*

*அறுகாலினம் புடை திளைக்குங்*
*குறுநாட்டவர் குலங்கெடுத்தும்”*

இங்கு பரவர் மீனவர்களைக் குறிக்கும் சொல்லாகும். ‘குறுநாட்டவர் குலங்கெடுத்தும்’ என்ற வரிகள் பரவர்கள் இடைக்காலப் பாண்டியர்களால் அடக்கப்பட்டதைக் கூறுவதாகக் கருதப்படுகிறது. இடைக்கால அரசுருவாக்கத்தில் பல உள்ளூர் தலைவர்கள் அடக்கப்பட்டிருக்கவேண்டும். இவர்களில் மீனவர்கள் தலைவர்களும் இருந்தனர்.

### பல்லவர் கல்வெட்டுகளில் வரி

பல்லவர் கல்வெட்டுகளில் மீனவர் குறித்த தகவல்கள் அருகியே காணப்படுகின்றன. பட்டினசேரி என்ற வரி பல்லவர் கல்வெட்டுகளில் குறிப்பிடப்படுவதாக சி. மீனாட்சி பதிவு செய்கிறார். பட்டினசேரி மீனவர்கள் மீது விதிக்கப்பட்ட வரியாகும் (Minakshi 1977: 96)

### அதிபத்த நாயனார் புராணம்

சைவ சமயத்தின் அதிபத்த நாயனார் புராணம் நாகப்பட்டினத்துடன் தொடர்புடையது. அதிபத்தர் சைவ சமயத்தின் 63 நாயன்மார்களில் ஒருவர். அதிபத்தர் மீனவர் குலத்தைச் சேர்ந்தவர். அவர் சிவபக்தராக இருந்ததையும் அவர் தொடர்பான கதையையும் பெரியபுராணம் பதிவு செய்கிறது. இங்கு மீனவர் வாழ்விடம் விவரிக்கப்படுகிறது. தற்போது நாகப்பட்டினம் காயாரோகணேஸ்வரர் கோயில் இந்த நாயனாருடன் தொடர்புடையாதாக் கருதப்படுகிறது. நாகை மீனவர்கள் அதிபத்த நாயனார் விழாவின் பகுதியாக இக்கோயில் உற்சவமூர்த்தியை கடலுக்கு எடுத்துச்செல்லும் வழக்கம் இன்றும் நடைபெறுகிறது. இடைக்காலப் பக்தி இலக்கியமான பெரியபுராணம், பல சமூகங்களின் தலைவர்களும் புரட்சியாளர்களும் (எ.கா, கண்ணப்ப நாயனார், திருநீலகண்டர், நந்தனார்) இடைக்காலத்தில் சைவ சமயத்தில் இணைக்கப்பட்டனர் என்பதை உணர்த்துகின்றது. எனவே பெரியபுராணத்தை சமய ஒருங்கிணைப்பிற்கான முயற்சி (social inclusivity) எனக் கருதலாம். நாயன்மார்களின் கதை சிற்பக் வடிவங்களாக தாராசுரம் ஐராவதேஸ்வரர் கோயிலில்

*செதுக்கப்பட்டிருப்பதைக்காணலாம். இது 12 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்ததாகும்.*

### திருவிடந்தைக் கல்வெட்டு (1002 பொ.ஆ.)

*சென்னையிலிருந்து மாமல்லபுரம் செல்லும் சாலையில் உள்ள திருவிடந்தை நித்யகல்யாணப்பெருமாள் கோயிலில் காணப்படும் முதலாம் இராசராசனின் 17ஆம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு (1002) அங்குள்ள மீனவர்கள் (பட்டினவன்குடி) குறித்த தகவலை நமக்கு அளிக்கிறது. தமிழ் நாட்டு மீனவர்கள் குறித்த மிகவும் முக்கியமான கல்வெட்டு இதுவாகும். ஆவணி சதய நாளன்று இராசராசன் (பிறந்த) திருநாளைக் கொண்டாடுவதற்கு 12 மீனவர்கள் துணி நெய்து அல்லது கடலில் மீன்பிடித்த வருவாயிலிருந்து ஒவ்வொருவரும் ¾ கழஞ்சுப் பொன்னை கோயிலுக்கு கொடையாக அளித்துள்ளனர் (*ARE *274, 1910).*

### சிதம்பரம் கல்வெட்டு (1036 பொ.ஆ.)

*சிதம்பரத்தில் உள்ள முதலாம் இராசேந்திரனின் 24 ஆம் ஆண்டுக் கல்வெட்டு (1036 பொ.ஆ.) குணமேனகைபுரம் என்ற நகரம் குறித்த தகவலை அளிக்கிறது, இந்த வணிக நகரம் இரசேந்திர சிங்கவள நாட்டுத் தனியூர் பெரும்பற்றப்புலியூர் கீழ் பிடாகை கிடாரங்கொண்டசோழப் பேரிளமை நாட்டுப் பராக்கிரம் சோழ நல்லூர்பால் குணமேனகைபுரம் உருவாக்கப்பட்டதாகக் கூறுகிறது. இங்கு சங்கரப்பாடியர், வியாபாரிகள், வெள்ளாளர், சாலியர், பட்டணவர் ஆகிய குடிகள் ஏறியதாகக் குறிக்கிறது. இதில் பட்டணவர் மீனவரைக் குறிப்பதாகும். இங்கு மீனவர்கள் நகரங்களின் பகுதியாக இருந்ததை அறியலாம். இவர்கள் கடல்சார் வணிகத்திலும், கப்பல், படகு செலுத்தும் கடலோடிகளாகவும் இருந்திருக்கவேண்டும். இப்பகுதி வங்களா விரிகுடாக் கடலுக்கு அருகில் இருப்பதையும் நாம் நோக்க வேண்டும் (*SII IV *223). இதே கல்வெட்டு தச்சர், கொல்லர், தட்டார், கோலியர் ஆகியோரைக் கீழ்க் கலனைகள் என்று கூறுகின்றது.*

### திருவொற்றியூர் கல்வெட்டு (1040 பொ.ஆ.)

திருவொற்றியூர் கல்வெட்டு திருவொற்றியூர் கோயிலுக்கு அளிக்கப்பட்ட கொடைகள் குறித்து பதிவு செய்யும் போது பட்டணவர்கள் குறிக்கப்பெறுகின்றனர் (ARE 151, 1912). இதில் வரும் பட்டணவர் நகரத்தில் வசிப்பவர்கள் என்று கிருஷ்ணமூர்த்தி பதிவுசெய்கிறார் (Krishna Murthy 1985, 100). அதற்கு அதிகமான தகவலை அவர் பதிவு செய்யவில்லை. முதலாம் இராஜாதிராஜன் காலக் கல்வெட்டு (1040 பொ.ஆ) இராஜராஜ பாகில் பட்டணவர், மணிகங்கைப் பட்டணவர் ஆகியோர் 5 காசுகள் பெற்றுக்கொண்டு அதற்கு வட்டியாக ஆண்டுதோறும் 2 1/8 + 2 1/8 காசுகள் வழிபாட்டுத் தேவைக்காகச் செலுத்துபர் என்று கூறுகிறது. திருவொற்றியூர் கடலுக்கு அருகில் இருப்பதால் இவர்கள் பட்டணவர்கள் எனப்படும் மீனவர்கள் என்று உறுதியாகக் கூறலாம்.

### திருக்குருகாவூர் கல்வெட்டு (1086 பொ.ஆ.)

நாகப்பட்டினம் மாவட்டத்தில் சீர்காழிக்கு அருகில் உள்ள திருவாலி நாட்டில் திருக்குருகாவூரில் உள்ள சோழர் காலக் கல்வெட்டு மண்னைக்கொண்டசோழ பட்டினம் என்ற பட்டினத்திலிருந்த சாத்தன் மண்டை என்பவர் இவ்வூர் கோயிலில் சந்திரசேகரர் படிமத்தை நிறுவியதைப் பற்றி கூறுகிறது (ARE 424, 1918). இது முதலாம் குலோத்துங்கனின் 15 ஆம் ஆட்சியாண்டில் வெளியிடப்பட்டது (1086 பொ.ஆ.). மண்னைக்கொண்டசோழ பட்டினம் சோழ நாட்டில் உள்ள திருமுல்லை வாயிலுக்கு அருகில் உள்ள பட்டினவர்கள் வாழ்ந்த ஊராக இருக்கலாம். இவ்வூருக்கு மருதி என்ற பெயரும் உள்ளது குறிப்பிடத்தக்கது.

### திருக்கண்ணபுரம் கல்வெட்டு (1128 பொ.ஆ.)

நாகப்பட்டினம் அருகில் உள்ள திருக்கண்ணபுரத்தில் உள்ள விக்கிரம சோழரின் 10 ஆம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு பட்டணவர் எனும் நெசவாளிகள் இறைவனுக்கு ஆடை நெய்து அளித்ததாக பதிவு

செய்கிறது. (Hall 1980:110; ARE 508, 1922). எனவே மீனவர்களாகிய பட்டணவர்கள் இறைவனுக்கு துணி நெய்து அளித்தனர் என்பதையும் இது பதிவு செய்கிறது. இவர்கள் ஆயோகவர் எனக் குறிப்பிடப்படுகின்றனர்.. ஆயோகவர் சூத்திர ஆணுக்கும் வைசியப் பெண்ணுக்கும் பிறந்தவராக இந்தியப் புனைகதைகள் கூறுகின்றன (Bühler 1886: 403; Baruah 2017).

## திருக்குவளைக் கல்வெட்டு (1220 பொ.ஆ.)

திருவாரூருக்கு அருகில் உள்ள திருக்குவளை சிவன் கோயிலில் உள்ள சோழர் காலக் கல்வெட்டு (மூன்றாம் இராசராசன் பொ.ஆ. 1220, ARE 1950-51, 246) மீனவர் குலத்தைச் சேர்ந்த ஆலன் என்பவர் இரந்து 1000 காசுகள் பெற்று அதிபத்த நாயனாருக்கு சிலை வைத்ததைக் கூறுகிறது (Selvakumar 2019, 2022). இக்கல்வெட்டு மீனவர்களைச் சிவன்படவர் என்று பதிவு செய்கிறது. மீனவர்கள் செம்படவர்கள் என்று இன்று அழைக்கப்படுகின்றனர். இதிலிருந்து செம்படவர் என்ற பெயர் சிவன் படவர் அதாவது சிவனுடைய படகுகாரர்கள் என்பதிலிருந்து வந்திருக்கலாம் என ஊகிக்கலாம். பக்தி இயக்க காலத்தில் பல சமூகங்களின் தலைவர்கள் சைவ சமயத்தில் இணைக்கப்பட்டனர்.

## குமரி முட்டம் கல்வெட்டு(1494 பொ.ஆ.)

குமரி முட்டம் கல்வெட்டு மீனவரிடமிருந்து மீன்பிடித்தொழிலுக்காகப் பெறப்பட்ட வரியைக் குறித்துப் பேசுகிறது (கன்னியாகுமரிக் கல்வெட்டு தொகுதி 6, 2008, 66-67). இக்கல்வெட்டு 1494 ஆம் ஆண்டைச் சேர்ந்தது. இது தற்போது பத்ம நாபபுரம் அருங்காட்சியகத்தில் உள்ளது. இதில் மடிவலை வாளைவலை, சாளைவலை, சணவலை ஆகிய மீன்பிடி வலைகள் பயன்பாட்டிற்கு ஒரு பணம் கடமையாக அளிக்கவேண்டும் என்று கூறுகிறது. இந்தத்தொகை இங்குள்ள முஸ்லீம் பள்ளிக்கு அளிக்கப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. மேலும் இங்கு ஏற்றி இறக்கும் பொருள்களுக்கு உரு, சம்பான் ஆகியவற்றிற்கு பணம் ஒன்று என்று கூறுகிறது. மேற்படி வலைகளுக்கு ஒன்று என்று கூறுவதாக கடமை பணமாக வசுலிக்கப்பட்டதா, பங்காக வசூலிக்கப்பட்டதா என்று

தெரியவில்லை. இங்கு இவ்வரிகள் இசுலாமிய வழிபாட்டிடத்திற்கு அளிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்க செய்தியாகும்.

### கடலம்மாவும் கன்னியம்மனும்

கடற்கரைப் பகுதியில் வாழும் மக்கள் கன்னியம்மனை வழிபடுகின்றனர். பொதுவாக இது சப்த கன்னிகள் என்று சமஸ்கிருதக் கடவுளாகப் பார்க்கப்படுகிறது. ஆனால், இது மீனவர்களின் கடல் தெய்வமாகும். ஏனெனில் கண்ணி என்பது கடலைக்குறிக்கும் செல்லாகும் (தி.நா.சுப்பிரமணியன்). இவ்வாறாக கன்னியாகுமரி என்பதும் கடல் தெய்வத்தின் (அம்மா) பெயரே அன்றி, கன்னி எனப்படும் சமஸ்கிருதச் சொல்லின் பொருள் அல்ல.வேளாங்கண்ணி என்ற பெயரிலும் கடல் என்ற பொருள் உள்ளது. மீனவர்கள் கடலை அம்மா என வழிபடுகிறார்கள். எனவே, பிற்காலத்தில்தான் கடலம்மா கன்னி எனப்படும் சமஸ்கிருத தெய்வத்துடனும், பகவதி வழிபாட்டுடனும் இணைக்கப்படுகிறது. எனவே, கடற் கண்ணி வழிபாட்டை, கன்னி, ஏழுகன்னிகளுடன் இணைப்பது பிற்கால மரபாகும்.

## 4. கன்னியாகுமரி மீனவர்களின் வாழ்வியல்

கன்னியாகுமரி மீனவர்களின் வாழ்வியல் குறித்த தகவல்கள் பல கடற்கரைக் கிராமங்களில் பதிவு செய்யப்பட்டன. இங்கு இரண்டு தகவல் கூறுகள் விளக்கத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன.

### கல்வியும் இளைஞர்கள் தொழில் கற்றலும்

குறிப்பாக இளைஞர்கள் 12-13 வயதில் மீன்பிடிக்கச்செல்கிறார்கள். அவர்கள் பெரிதும் 3-4 ஆம் வகுப்புக்குமேல் படிப்பதில்லை என்பதை குறும்பனைகிராமத்தின்ஜெகன்என்பவர்பதிவுசெய்கிறார். மரபுவழித் தொழில்களிலும் சரி வேட்டையாடுதலிலும் சிறுவயதிலிருந்தே பல இனக்குழுக்களில் ஈடுபடுகின்றனர். இம்முறைகளில் மாற்றம் வந்தது குறிப்பாக ஆங்கிலேயக் கல்வி வந்து முழு நேரப் பள்ளிகளில் கல்வி பயிலுதல் வந்த பின்னரே. படி வேலை உண்டு என்று கண்மூடித்தனமாக பல இளைஞர்கள் வழி நடத்தப்படுகின்றனர்.

நாங்கள் கண்ட ஒரு மீனவர் பெரியவர் ஒருவர் தனது மகன் அரசு வேலை பெறுவார் என்ற நம்பிக்கையில் படிக்க வைத்து வேலை இல்லாத, கிடைக்காத நிலையை உணர்ந்து, பின்னர் அவர் மீன்பிடிக்கச் சென்றதாகக் கூறினார். அவர் அரசு வேலைக்கு பெருந்தொகையாகப் பணம் அளிக்கவேண்டிய வருத்தமான சூழலையும் பதிவு செய்தார். அவர் மகன் படித்த முதுநிலைக் கல்வியால் பயன் இல்லை என்றும் கூறுகிறார். மேலும் மேற்காசியாவில் பணிபுரிந்து ஒருவர், தற்போது கன்னியாகுமரியில் திரும்பி வந்து மீன்படித்தல் செய்வது நல்ல முயற்சி எனப் பதிவு செய்தார். தற்போது பல்கலைக்கழகங்களில் நடுவண் அரசு கொண்டுவரும் தன்தொழில் தொடங்கும் முயற்சிகள் அரசின் மீதுள்ள பொருளாதார அழுத்தத்தையும், யதார்த்த சூழலையும் வெளிப்படுத்துகிறது. வேலைவாய்ப்பு இல்லாமல் பட்டங்களுடன் அலைந்து திரியும் இளைஞர்களை நோக்கும் போது சில இளைஞர்களை தொழில்கள் செய்யவும் வேளாண்மையில் ஈடுபடவும் ஊக்குவிப்பது அவசியமாகிறது. முனைவர் பட்ட ஆய்வுகள் உற்பத்தி தற்போது MLM multilevel marketing என்ற முறையில் செயல்பட்டு வருகின்றன. 50 ஆசிரியர்கள் 500 முனைவர் பட்ட மாணவர்களை உற்பத்தி செய்கின்றனர். 500 ஆசிரியர்கள் 5000 ஆசிரியர்களையும், பின்னர் இந்த முனைவர் பட்ட உற்பத்தி 50000, 500000 என்ற விரிவடையும் போது எவ்வாறு வேலைவாய்ப்புகளை உருவாக்க முடியும். எனவே மரபு வழி வேலைவாய்ப்புகளை நாம் கண்டறிந்து இளைஞர்களை ஊக்குவிக்கவேண்டும்.

### இயற்கையுடனான பிணைப்பு: திமிங்கிலம் செல்லப்பிள்ளை

கன்னியாகுமரி குறும்பனை மீனவர்கள் பதிவு செய்த தகவல்களில் என்னை மிகவும் ஈர்த்தது அவர்கள் மீன்பிடிக்கும் போது அவர்களுக்குத் திமிங்கிலத்துடன் ஏற்பட்ட தொடர்அனுபவமாகும். எவ்வாறு ஒரு சமூகம் இயற்கையுடனான பிணைப்பில் வாழ்கின்றது என்பதை திமிங்கிலம் எனும் அவர்களது செல்லப்பிள்ளை விளக்குகிறது. மேலை நாட்டுக் கோட்பாடு இயற்கையை மனிதனிடமிருந்து பிரித்துக்காண்கிறது. இங்கு திணைசார் வாழ்க்கையில் இயற்கையும் மனிதரும் பின்னிப்பிணைந்த நிலையைக் காண்கிறோம்.

கன்னியாகுமரி மீனவர்கள் திமிங்கிலத்தைச் செல்லப்பிள்ளை

என்று அழைக்கின்றனர். இந்த மீன் அவர்களைத் தாக்காது என்றும், அவர்களது செல்லப்பிள்ளை எனவும் அழைக்கின்றனர். அது மீன்பிடிக்கும் சமயத்தில் தங்களது படகுக் கீழே வரும் என்று கூறுகின்றனர். அதுவரும் போது தண்ணீர் பீரிட்டு அடிக்கும் என்றும். சற்று அச்சமாக இருக்கும் எனவும் பதிவு செய்கின்றனர். இறைவனைப் (இயேசு) பிராத்தித்து கையை உயர்த்தி "அங்கே போ" என்று கூறினால் அது போகும் என்றும் கூறுகின்றனர். ஒருவர் சிறுவனாக இருந்தபோது அதைப் பார்த்து பயந்ததாகவும் அன்று வீட்டிற்கு வந்தபின்னர் அவருக்கு ஜுரம் வந்ததாகவும் கூறினார். மேலும் அவை படகின்மீது தனது தலையை வைப்பதாகவும் அப்போது அதன் மீது அவர்கள் "குருசு" வரைவதாகவும் கூறினார்கள். இது என்னை மிகவும் ஆச்சரியப்படவைத்தது. இங்கு திமிங்கிலம் எனும் கடல்வாழ் உயிரினம் மீனவரின் படகை தனது இனத்தைச் சேர்ந்த அல்லது தனது குட்டி போன்ற ஒரு விலங்காக நினைத்து அணுகத் தொடங்கியிருக்கலாம். காலப்போக்கில் இப்புரிதல் வளர்ந்து படகில்வரும் மீனவர்களை ஒரு விலங்கினத் தொகுப்பாக (படகு-மீனவர்) கண்டிருக்கவேண்டும். இதை இயற்கை, மனிதர், புழங்குபொருள் பிணைப்பிற்கான சரியான சான்றாகக் கருதலாம் (Hodder 2012, 2014)

இன்றைய காலத்தில் திமிங்கிலம் பார்த்தலும் அவற்றுடன் உறவாடுதலும் உலகில் சில இடங்களில் நடைபெறுகின்றது படம் எண் 1. இங்கு சுற்றுலாப்பயணிகள் திமிங்கிலத்தின் மீது கையை வைத்து உரையாடுகிறார்கள் (https://www.youtube.com/watch?v=9jarafSZbtw&t=33s).




8 Whale Encounters That'll Brighten Your Day

Ask

*படம் 1, இயற்கைச் சுற்றுலாவின் பகுதியாக மக்கள் திமிங்கிலத்தை தொட்டுத் தடவுதல்  நன்றி: டேவ் மோசர்*

## இயற்கை, மனிதர், புழங்குபொருள் பிணைப்பு

பண்பாடு மனிதர்கள் சுற்றுச்சூழல்களுக்கிடையேயான உறவுகள் மட்டுமல்ல. மனிதர்கள் உருவாக்கும் பொருள்களும் இயற்கை-மனிதர் உறவுகளில் முக்கிய பங்கு வகிக்கின்றன. மனிதர்கள் உருவாக்கும் பொருள்களும், மாற்றம் செய்யும் நகரிய நிலப்பரப்புகளும் மனிதர்களுடைய பண்பாட்டுச் செயல்பாடுகளையும், அறிவுணர்வையும் பாதிக்கின்றன. இங்குள்ள பிணைப்பு கட்டுமரம்/வள்ளம் (படகு), மீனவர், திமிங்கிலம் என இம்மூன்றுக்குமானதாகும். இங்கு இரண்டு உயிரினங்கள் தகவல் பரிமாறிதங்களதுகடற்சார்இருத்தலைக்கட்டமைத்துக்கொள்கின்றன.

## 5. முடிவுரை

தமிழ் நாட்டு மீனவர் வரலாற்றை மீளுருவாக்கம் செய்ய துறையிடை ஆய்வுகள் மிகவும் அவசியமாகும். இங்குதொல்லியல், இனவரைவியல், வரலாற்று அணுகுமுறைகள் ஒன்றிணையவேண்டும். தமிழ் நாட்டு மீனவர்கள் மீன்பிடித்தல், உப்பு விளைவித்தல், துணி நெய்தல், கடல் வணிகம், கடலோடும்

தொழில்களில் ஈடுபட்டிருந்ததும், பிற சமூகங்களுடன் அதிகம் கலக்காமல், தங்களது இனத்தின் தனித்துவத்தை சமூகப் பிணைப்பின் வழி ஒருங்கிணைத்துக் காத்தமையும் சான்றுகள் வழி தெளிவாகின்றது. மீனவர்களின் பொருள் பண்பாட்டிலும், பொருள்தன்மையிலும் (Materiality) படகுகள் முக்கியமான புழங்குபொருள்களாகும். அவை கடற்பரப்பில் அவர்களின் உடல்ரீதியான தொடர்ச்சியாகும். கரையில் வாழ்ந்தாலும் அவர்களது வாழ்வியல் புலம் கடலாக உள்ளது. தங்களது கடலம்மாவுடன் தொடர்பு கொள்ள படகுகள் அவர்களது உடல்சாரா தகவமைப்பு அல்லது பொருள் சார்ந்த உடல் நீட்சி எனலாம். கடற்பரப்பில் மீனவர்களும் படகுகளும் உயிரற்ற மரம், உயிருள்ள மரம் (கட்டைகளின்) தொகுப்பு எனலாம். மீனவர்களின் கடற்சார் இருந்தலில் படகு தவிர்க்க இயலாத பொருளாகும். மீனவர்களின் கடற்சார் தொடர்பில் கடல் அம்மாவாகவும், திமிங்கிலம் அவர்களின் செல்ல விளையாட்டுப்பிள்ளையாகவும் மாறுகின்றன.

## தமிழ் நூல்கள்


*த. அருளப்ப முதலியார் ‘பரவர் புராணம்’1909*

*வித்வான் சோ.சு. இராமநாதபிள்ளை பரத வம்ச விளக்கம் (1887).*

*கன்னியாகுமரிக் கல்வெட்டு தொகுதி 6, 2008, தமிழ் நாடு அரசு தொல்லியல் துறை, 66-67.*

*வறீதையா கான்ஸ்தந்தின், கடற்கோள் காலம்  முதல் பதிப்பு: ஜூன் 2019. கடல்வெளி பதிப்பகம்.*

*அனந்தபுரம் கோ. கிருஷ்ணமூர்த்திம் ‘மீனவர் வாழ்வியல்’, நூல், (முதற்பதிப்பு, 2002; திருக்குறள் பதிப்பகம், 66/1பெரியார் தெரு, எம்.ஜி.ஆர்.நகர், சென்னை)*

*ஆ தனஞ்செயன், குலக்குறியியலும் மீனவர் வழக்காறுகளும், 2012, நியு சென்சுரி புத்தகாலயம், 2026, பரிசல் வெளியீடு.*

*டெக்லா, எஸ். முக்குளித்துறையில் போர்ச்சுக்கீசியர், சென்னை, நியு சென்சுர்ரி புத்தக நிலையம், 2009.*

*என். ஸ்டீபன், கன்னியாகுமரி மாவட்ட மீனவர்களின் வாழ்வியல்: ஓர் ஆய்வு  கல்லுக்கூடம் : தங்கம் பதிப்பகம் 1994.*

*எஸ். சாந்தினிபீ, பரதவர். கடற்கரை. ஜன-பிப் 2022, கடல்.1, அலை 2. 3-5.*

*ம. ஜெரோமி பெட்ரீஷியா. சேலாளி. வேலாற்றுப்படை: தொல்லியல், கல்வெட்டியல், வரலாறு, மொழியியல், இலக்கிய ஆய்வு, பேராசிரியர் சு.இராசவேலு பாராட்டு மலர், அதியன் வெளியீடு, சேலம், (No. 7, 2026, பக். 90–94).*

### ஆங்கில நூல்கள்

A History of Christianity in India, 1964. Bangalore, Theological Publications in India. 2 Vols.

ARE Annual report on Indian Epigraphy 274, 1910.
Baruah, Silpisikha. 'Service Groups' In Early Kāmarūpa Society: 600 C.E To 1200 C.E. Proceedings of the Indian History Congress 78 (2017): 161–68. https://www.jstor.org/stable/26906081.

Bayly S. The Christian Paravas of southern Tamilnad. In: Saints, Goddesses and Kings: Muslims and Christians in South Indian Society, 1700–1900. Cambridge South Asian Studies. Cambridge University Press; 1990, 321-378.

Bhakthavatsala Bharathi, S. Coromandel Fishermen: an ethnography of Pattanavar subcaste.
Pondicherry : Pondicherry Institute of Linguistics and Culture, 1999.

Bühler, Georg, ed. and tr, The laws of Manu, 1886. Oxford, Clarendon Press Casie Chitty, V. Simon 1837. Remarks on the Origin and History of the Paravaas, vol 4 130-134

Dujovny, Eial Casteing The Net: The Making Of A Lagoon And The Emergence Of Caste As Social Network. Graduate Faculty of The University of Georgia in Partial Fulfillment of the Requirements for the Degree Doctor Of Philosophy Athens, Georgia 2010.

Hall, K.R. Trade and Statecraft in the Ages of Colas. New Delhi, Abhinav Publications, 1980, revised 2003.

Hambye, S.J, Rev.Fr. E.R. Rev.Fr.G.Schurhammer, S.J, Rev.A.D'Cruz and Dr.Simon Fernandes.

Hornell, James The Indian Pearl Fisheries of the Gulf of Mannar

and Palk Bay. Bulletin of the Madras Fishery Department 16, 1922, 1-188.

Hodder, I. Entangled. An archaeology of the relationships between humans and things. 2012. Wiley and Blackwell, Oxford.

Hodder, Ian. The Entanglements of Humans and Things: A Long-Term View. New Literary History 45, no. 1 (2014): 19–36. http://www.jstor.org/stable/24542579.

Krishna Murthy, C. Saiva Art and Architecture in South India. 1985. New Delhi, Sundeep Prakashan.
Maloney, Clarence "The Paratavar: 2000 Years of Cultural Dynamics of a Tamil Caste,' Man in India, 48: 3 (1969), 224-40.

Maloney, Clarence Thomas The Effect of Early Coastal Sea Traffic on the Development of Civilization in South India, Unpublished Ph. D. thesis submitted in the Dept. of Anthropology, University of Pennsylvania, 1968.

Minakshi, Cadambi Administration and Social Life Under the Pallavās . Revised edition,1977, Madras, University of Madras.

Petrishya, Jeromi M. The indigenous knowledge of star navigation practices among the fisherfolk of Kanniyakumari. In Proceedings of the ICSSR Sponsored National Seminar on Archaeological Excavation in South India: New Insights (No. 22, 2025,p. 205).

Patrick Roche, A., Fishermen of the Coromandel-A Social Study of the Paravas of the Coromandel, New Delhi, Manohar, 1984.

Rajesh, Vinod Vincent  Embracing Christianity: Tracing Parathavar Conversion In The Light Of Sixteenth Century Sociopolitical Ruptures. Journal of Indian History and Culture, 20, 2014, 92- 112.

Selvakumar, V. 'Icons and Patterns of Worship from the Fringes of South India: The Religious Landscape of Northern Tamil Nadu',

in Texts, Contexts and Visual Representation in Ancient and Early Medieval India, ed. R. Mahalakshmi (New Delhi: Bloomsbury, 2019).

Selvakumar, V. Archaeology of Marginalization in Indian History, Studies in History 38(1) 28–59, 2022.

Selvakumar, V. The Models of Cultural Developments of Tolkappiyar and C.J. Thomsen, and the Mesolithic-Neolithic-Iron Age-Early Historic Cultural Transition in South India. Proceedings of the National Seminar on Reflections on Cultural Development: An Archaeological Perspective on 22nd and 23rd November 2023 at Madurai Kamaraj University, Madurai, K.Rajan and R. Sivanandam eds., 2023, 252-268Tamil Nadu State Archaeology Department, Chennai.

Selvakumar, V., S Gowrishankar and R. Karthikeyan Selvakumar, V.Molapalayam: A Neolithic Site Near Coimbatore in Western Tamil Nadu. Heritage: Journal of Multidisciplinary Studies in Archaeology 7, 2019, 70-94.

Selvakumar, V., Veena Mushtrif-Tripathy, G.S. Abhayan, Sathish Naik, Ravi Kant Prasad, V.N. Prabhakar and Sharmila Bhattacharya. Status of the Neolithic Culture in Tamil Nadu: Excavations at Molapalayam (2020-21), Coimbatore District, Tamil Nadu, in Early Tamil Culture and Heritage, Proceedings of the 1st International Seminar in Commemoration of Padmashree Iravatham Mahadevan, K. Rajan and R. Sivanandam eds., Chennai: Tamil Nadu State Archaeology Department, 2024, pp. 93-109.

Selvakumar, V.; Naik, S.; Abhayan, G.S.; Mushrif-Tripathy, V.; Prabhakar, V.N.; Krishnan, K.; et al. 2026. Scientific investigations at the Neolithic site of Molapalayam, Coimbatore District, Tamil Nadu, India. Proceedings of International Symposium on Recent Scientific Studies in Archaeology of Tamil Nadu 1: 185-216.

SII = South Indian Inscriptions, IV 223, Archaeological Survey of India.

Sivasubramanian, A. Uppittavarai. Chennai: Kalachuvadu Pathipagam, 2009.

# மானிடவியலும் பின்நவீனத்துவமும்

பெ.தமிழ் ஒளி*

***கட்டுரைச்சுருக்கம்:*** *பின்நவீனத்துவப் பார்வை அல்லது சிந்தனை இலக்கியத் திறனாய்வுகளில் தொடங்கி, கட்டிடக் கலை, நாடகம், ஓவியம், இசை, சினிமா எனத் தொடர்ந்து பிறகு சமூக அறிவியல் கல்விப்புலங்களிலும் அதன் தாக்கத்தை ஏற்படுத்தியது. பின்நவீனத்துவத்தின் மையக்கூறுகளில் முக்கியமான ஒன்றாகக் கருதப்படுவது, நவீன அறிவியல், தொழில் நுட்பப் பயன்பாடு குறித்து வைக்கப்படும் விமர்சனப் பார்வை. பின்நவீனத்துவப் பார்வை மானிடவியலின் முக்கிய கருத்தாக்கங்களான சமூகம், பண்பாடு, பண்பாட்டுப் பன்மையம், பாலினம், குறித்த புரிதல்களுக்கு, அவற்றோடு அதிகாரம், பன்மையம், மொழி சார்ந்த கருத்தாக்கங்களை இணைத்துப் புதிய விளக்கங்களை அளிக்கிறது. மேற்கத்திய கருத்தாக்கங்களையும், கோட்பாடுகளையும் பயன்படுத்துவதை மறுபரிசீலனைக்குட்படுத்துகிறது. கீழைத்தேய மற்றும் அகத்தார் கருத்தாக்கங்களை பயன்படுத்தி சமூகப் பண்பாடுகளை ஆய்வு செய்ய வேண்டும் என அறிவுறுத்துகிறது. பின்நவீனத்துவம் பல புதிய களஆய்வு அணுகுமுறைகள், நுட்பங்கள் குறித்துப் பேசுகிறது. பின்நவீனத்துவ திறனாய்வு, மானிடவியல் - அறிவாய்வியலில் அடுத்த கட்ட நகர்வு எனவும், மேலும் இது மானிடவியலில் ஒரு புதிய சொல்லாடலை உருவாக்குவதற்கான நம்பிக்கையினையும் அளிக்கிறது.*

## தொடக்கவுரை

பின்நவீனத்துவப் பார்வை அல்லது சிந்தனையின் தொடக்கம் 1950 களில் இரண்டாம் உலகப் போருக்கு முன்பு இருந்த மேம்பட்ட காலச்சூழலுக்கான நினைவேக்கமாக இலக்கியத் திறனாய்வுகளில் வெளிப்படுத்தப்பட்டது, இதைத் தொடர்ந்து 1960 களில் ஒரு இயக்கமாக வளர்ச்சி பெற்றது. அன்றைய காலகட்டத்தில் நவீனத்துவச் சிந்தனை அதன் சுயம், வளர்ச்சிப் பாதை இவற்றிலிருந்து தடம் புரண்டு அமெரிக்கா, அப்போதிருந்த சோவியத் முகாம்களுக்கிடையே நிலவிய பனிப்போர், கம்யூனிச எதிர்ப்பு ஆகியவற்றிக்கு ஒரு கருத்தாயுதக் கிடங்காக மாற்றப்பட்டது. இந்தச் சூழலில் அமெரிக்காவில் பின்நவீனத்துவப் பார்வை ஒரு கலகக் குரலாக வெளிப்பட்டது. அடுத்தப் பத்தாண்டுகளில் இலக்கியம் தாண்டி மேலும் விரிவடைந்து அதன் தாக்கத்தினை பிற துறைகளான

* *சமூக மானிடவியலாளர், மின்னஞ்சல்:* Thamizoli@hotmail.com

கட்டிடக் கலை, நாடகம், ஓவியம், இசை, சினிமா, சமூக அறிவியல் கல்விப்புலங்கள் ஆகியவற்றில் ஏற்படுத்தியது (ஹெசென் - Hayssen, 1990).

அடிப்படையில் நவீனத்துவத்திற்கு (Modernism) ஒரு எதிர்சிந்தனைப்போக்காக அமைந்த பின்நவீனத்துவம் (Postmodernism) பற்றிப் பேச நவீனத்துவம் குறித்தஅறிதல்அவசியம். நவீனத்துவ சிந்தனை, நவீன யுகம் என்பது நிலப்பிரபுத்துவ சமூக அமைப்பும், மதக்கட்டளைகளின் அடிப்படையிலான மதவாழ்க்கை முறையும் சிதைவுற்று, தொழில்மயமாதல், நகரமயமாதல், பகுத்தறிவுச் சிந்தனையின் அடிப்படையில் வாழ்க்கையின் நடைமுறைச் செயல்பாடுகள் ஆகியவற்றை உள்ளடக்கியது. அதோடு பொருளாதார வேறுபாடுகளும் ஏற்றத்தாழ்வுகளும் கொண்ட புதிய சமூகம் உருவாதல், இவற்றோடு அறிவும் மேலோங்கி இருந்த அச்சூழலும்/காலமும் புத்தொளி காலமாகக் (Age of enlightenment) கருதப்பட்டது. உலகின் புறநிலையைச் சார்ந்த பௌதீக, மற்றும் சமூக நிலைமைகள் குறித்த அறிவியல் கண்டுபிடிப்புகளும், இவற்றோடு தொடர்பு கொண்ட பகுத்தறிவின் அடிப்படையில் உருவாக்கப்பட்ட கொள்கைகளும், கோட்பாடுகளும், தீர்வுகளும் உலகம் முழுமைக்கும் (universal) பொருந்தும் என்கிற நம்பிக்கையும் இருந்தது.

இப்புதிய சூழலின் தொடர்ச்சியாக உலகப் பொருளாதாரத்தில் நிகழ்ந்த மிகப் பெரும் மாற்றமான பன்னாட்டு நிறுவனங்களின் வளர்ச்சி, உலக அரசியலில் ஏற்பட்ட அரசு, அரசதிகார மாற்றங்கள், தகவல் தொழில்நுட்பத் துறையில் நிகழ்ந்த அதிவேக வளர்ச்சி, ஊடகங்கள் சமூகங்களில் ஏற்படுத்திய தாக்கங்கள், நுகர்விய கலாச்சாரம் ஆகியவற்றால் சமூகத்தில் ஏற்பட்ட தாக்கம் என இவையனைத்தும் அன்றைய சிந்தனைப் போக்கில் பின்நவீனத்துவம் என்கிற திருப்பம் நிகழ வழிவகுத்தது.

பின்நவீனத்துவத்தின் மையக்கூறுகளில் முக்கியமான ஒன்றாகக் கருதப்படுவது, நவீன அறிவியல், தொழில் நுட்பப் பயன்பாடு குறித்து வைக்கப்படும் விமர்சனப் பார்வை. அறிவியல் கண்டுபிடிப்புகளும், தொழில் நுட்ப வளர்ச்சியும் மனித சமூகத்திற்கு பெருவாரியான நன்மைகளை அளித்திருக்கிறபோதிலும் அதோடு இயற்கைப் பேரழிவினையும், இப்புவியிலிருந்து மனிதகுலம்

அழிந்து போகும் அளவிற்கு அணுகுண்டு கண்டுபிடிப்பு போன்ற பேராபத்தினை விளைவிக்கும் சூழலையும் உருவாக்கியது. இவற்றோடு 'நவீனத்துவம்' என்கிற கருத்தியல் காலனிய உருவாக்கம், காலனி ஆட்சியாளர்கள், காலனி நாடுகள் என உலக அளவில் ஏற்றத்தாழ்வுகளையும், அதிகார மேலாதிக்க மையங்களையும் உருவாக்குவதற்கான கருவியாகவும் பயன்பட்டது. அறிவியல், தொழில் நுட்பத்தின் வரலாறு என்பது, வளர்ச்சி, முன்னேற்றம், மேம்பாடு போன்றவற்றை நோக்கிய ஒரு வரலாறாகவே காண்பிக்கப்படுகிறது அல்லது கட்டமைக்கப்படுகிறது. ஆனால் உண்மையில் அறிவும், அதிகாரமும் சேர்ந்த, அதிகாரத்திற்கும், மேலாதிக்கத்திற்கும் சாதகமான ஒரு கட்டமைப்பாக அறிவியலையும், தொழில் நுட்பத்தையும் உருவாக்கவே அறிவியலாளர்கள் தயார் செய்யப்படுகிறார்கள். பூக்கோ (Foucault 1980) என்கிற பிரெஞ்சு பின்நவீனத்துவவாதி "அதிகாரமும், அறிவும் பிரிக்க முடியாதது, ஒன்றுடன் ஒன்றாக இருப்பது" என்கிற கருத்தினை முன்வைக்கிறார். அறிவு என்பது அதிகாரத்தைச் சேர்ந்திராத புறவயமான ஒன்று அல்ல, மாறாக அறிவு உருவாக்கப்படுவதே அதிகார அமைப்புகள் சமூகத்தினை தன் வலிமையான கட்டுப்பாட்டில் வைக்கத்தான்" என்கிறார்.

ஏற்கனேவே ஏற்புடையதான அல்லது ஏற்றுக்கொள்ளப்பட்ட நவீனத்துவப் பார்வைகள், அனுமானங்கள், கோட்பாடுகளை பின்நவீனத்துவத் திறனாய்வுகள் தீவிர விமர்சனத்திற்குட்படுத்தின அல்லது நிராகரித்தன.

## மானிடவியலில் பின் நவீனத்துவத்தின் தாக்கம்

மானிடவியல் பண்பாடு குறித்த வரையறையில் பின்கண்ட இரண்டு கருத்துக்களை முன்வைக்கிறது:

ஒன்று, ஒரு பண்பாடு என்பது தனித்துவமானது, அது உள்ளடக்கியிருக்கும் பண்பாட்டுக் கூறுகளை, அவற்றிக்கிடையிலான ஒழுங்கமைவினை விளக்கி, அதனடிப்படையில் அப்பண்பாட்டினை ஒற்றைத்தன்மையானது (homogenous) என்று விளக்கவுரை எழுதுவது.

மற்றொன்று இவ்வாறு இருக்கும் வெவ்வேறு பண்பாடுகளுக்கிடையே நிலவும் வேறுபாடுகள், ஒற்றுமைகள், தனித்தன்மைகளை விளக்கி, அதன் மூலம் மனித சமூகத்தில் நிலவும் பண்பாட்டுப் பன்மையத்தினை (cultural diversity) ஆய்வு செய்து விளக்குவது.

ஒரு சமூகத்தின் பண்பாடு, மரபு என்பது ஒற்றைத்தன்மையானது, சமூகத்தின் செயல்பாடுகள், அச் செயல்பாடுகளுக்கான அர்த்தங்கள் ஆகியன அம்மக்கள் அனைவருக்கும் பொதுவானவை, அவர்கள் அனைவராலும் பகிர்ந்து கொள்ளப்படுகிறது என்கிற கருத்துடன் ஒத்தியைந்த மானிடவியலாளர்களால் அச் சமூகத்திற்கான இனவரைவியல் எழுதப்படுகிறது. மேலும் இதுபோன்ற தனித்துவம் வாய்ந்த வெவ்வேறு பண்பாடுகளை, பண்பாட்டுப் பன்மையத்தினை மானிடவியல் ஆய்வு செய்கிறது, போற்றுகிறது, கொண்டாடுகிறது; மேலும் பிரகடனப்படுத்துகிறது. இக்கருத்தினை வலியுறுத்தி அமெரிக்கப் பெண் மானிடவியலாளரான ருத் பெனடிக்ட் (Ruth Benedict) பின்கண்டவாறு கூறுகிறார்: "மானிடவியலின் முக்கிய நோக்கமே இவ்வுலகினை மனித இனத்தில் நிலவும் வேறுபாடுகளுக்குகான ஒரு பாதுகாப்பான இடமாக உருவாக்குவதுதான்". இன்று நிலவும், உலகமயமாக்க சூழலில் உலக, பிராந்திய, தேசிய அளவில் உள்ள மேலாதிக்க பண்பாடுகள் மிக வேகமாகப் பரவி உள்ளூர் பண்பாடுகளை, அவற்றின் மரபான பண்பாட்டுக்கூறுகளை அழிக்கும் நிலை இருப்பதால் இக்கருத்தை ஆய்வாளர்கள் தீவிரமாக வலியுறுத்த வேண்டியிருக்கிறது.

அமெரிக்காவில் 1960 களில் பின்நவீனத்துவக் கருத்துக்கள் ஊடுருவத் தொடங்கி, பிறகு தொடர்ந்து 1980 களில் பின்நவீனத்துவப் பார்வை மானிடவியலில் ஒரு மாற்றத்திற்கான உந்துதலாகத் மாறியது. காலப்போக்கில் மானிடவியலின் முக்கிய கருத்தாக்கங்களான சமூகம், பண்பாடு, பண்பாட்டுப் பன்மையம், பாலினம், குறித்த புரிதல்களுக்கு, அவற்றோடு அதிகாரம், பன்மையம், மொழி சார்ந்த கருத்தாக்கங்களை இணைத்துப் புதிய விளக்கங்களை அளித்தது. மேலும் ஒரு சமூகப் பண்பாட்டினை ஒற்றைத்தன்மையாய்க் காணும் மரபான மானிடவியல் வரையறையைக் கேள்விக்குட்படுத்துகிறது. பின்நவீனத்துவம் பெரும் சொல்லாடல்களை (grand narratives)

நிராகரித்து ஒற்றைத்தன்மை அணுகுமுறைக்கு மாற்றாக வட்டாரச் சொல்லாடல்களின் முக்கியத்துவம் பற்றியும், ஒரு சமூகப் பண்பாட்டிற்குள் நிலவும் பன்மைத்துவம் பேசுகிறது. ஒரு சமூகப் பண்பாட்டினை ஒற்றைத்தன்மையுடன் காணும் அணுகுமுறையானது, அச்சமூகத்தினை, குறைத்து அல்லது சுருக்கி பொருள்படுத்துகிறது. மேலும் ஒரு பண்பாட்டின் அகஒழுங்கமைவு என நிறுவ முயல்வதன் வாயிலாக அங்கு நிலவும் வேறுபாடுகளைப் புறக்கணிக்கவும் செய்கிறது.

மேலும் பின் நவீனத்துவம், ஒரு பண்பாட்டின் செயல்பாடுகளை, சமூக நிகழ்வுகளைப் புதிய அணுகுமுறையில் காண வலியுறுத்துகிறது. பின்நவீனத்துவவாதிகள் ஒரு சமூகப்பண்பாட்டின் எல்லைகள், பன்மையங்கள் குறித்து அதிதீவிர நிலைப்பாடுகள் கொண்டிருந்தனர், வெவ்வேறு சமூக பண்பாடுகளுக்கிடையே நிலவும் எல்லைகள் உடைகிறது என்கின்றனர். அதுபோலவே ஒரே பண்பாட்டிற்குள்ளும் ஏற்படும் உடைப்புகளால் வேற்றுமைகளும், பன்மைகளும் தோன்றி பன்மைத்துவச் சூழல் உருவாகிறது என்கின்றனர். ஒரு சமூகப்பண்பாட்டின் உண்மைநிலை (reality) என்பதே பன்மையமானது, பல உட்பிரிவுகளாக (உள்ளூர்/வட்டாரத் தன்மைகளுடன்) இருப்பதே என எழுதினர். இதை உறுதிப்படுத்தும் வகையில் ரெசால்டோ (Rosaldo 1989) பின்கண்டவாறு கூறுகிறார்,

"ஒரு சமூகத்தின் பண்பாடு என்பது சுருக்கமாக அனைவராலும் பகிர்ந்துகொள்ளக்கூடிய நடைமுறைகள் என ஒப்புக்கொள்வதினால் என்ன நடக்கிறது எனில், அப்பண்பாட்டிற்குள் வேறுபடும் அல்லது முரண்படும் செயல்பாடுகள், மற்றும் சமூக நடைமுறையில் ஒரு சமூகத்தில் வேறுபாடுகளை உருவாக்கும் காரணிகளான வயது, மரபான தொழில், வர்க்கம் மற்றும் பாலினம் போன்றவற்றால் அவற்றிற்குள் வேறுபடும் பண்பாட்டு அர்த்தங்கள், அல்லது எதிர்நிலை அர்த்தங்கள் ஆகியன மிகவும் தெளிவாக விதிவிலக்குகள் என்று சொல்லப்பட்டு ஒதுக்கப்படுகின்றன".

ஆனால் மாறாக அவைகள் முக்கியமாக ஆய்வுக்கு உட்படுத்த வேண்டிய பகுதிகளாகும். சமூகப் பண்பாடுகள் பன்மையமானவை என்பதைத் தாண்டி, ஒரே சமூகப் பண்பாட்டிற்குள் இருக்கும்

பன்மைத்துவத்தினையும் (உட்குழுக்கள்) அறிந்து கொள்ள வேண்டியது அவசியம். ஒரே பண்பாட்டில் இருக்கும் பன்மைத்துவக் குரல்களை அடையாளம் கண்டு அவற்றுள் இருக்கும் முரண்பாடுகள் குறித்தும் கவனம் செலுத்த வேண்டும். அதிகாரமற்ற விளிம்பு நிலைக்குழுக்கள், அவற்றின் குரல்கள் எதிர்கொண்ட சவால்கள், மௌனிக்கப்பட்டது ஏன் என்பது குறித்தும் பேச வேண்டும். பின்நவீனத்துவம் குறித்து ஜேம்சன் (Jamson 1991) கூறுகையில் தற்காலத் சூழலில் பல்வேறு வகைகளில் நிலவும் சமூகப்பண்பாட்டு மேலாதிக்கம் குறித்து மிகத் தெளிவாக எடுத்துரைப்பதற்கு ஒரு சிறந்த கருத்தியல் என்கிறார்.

### மையம் —விளிம்பு என இருமைப் பார்வை

பின்நவீனத்துவம் மேட்டுக்குடி, அடித்தட்டு மக்கள், உயர்குடிப் பண்பாடு, வெகு ஜன பண்பாடு, போன்ற நவீனத்துவம் உருவாக்கிய கருத்தாக்கங்களைக் கேள்விக்குட்படுத்துகிறது. இதன் விளைவாக சமூகத்தில் மேலாதிக்கம் செலுத்தும் உயர்குடியினருக்கும், பிற கீழ்நிலையிலுள்ள சமூகப் பிரிவினருக்கும் இடையே நிலவிய உறவு பேசு பொருளாகிறது, ஆய்வுக்குள்ளாகிறது, இந்த கீழ்நிலை, 'மற்றைமை' அல்லது 'பிற' (others) என்கிற வகைமையில் சிறுபான்மையினர், பெண்கள், பொருளாதாரத்தில் நலிவடைந்தோர் போன்றோர் இடம்பெறுகின்றனர். வழக்கமாக மானிடவியல், இனவரைவியல் ஆய்வுகளில் 'மற்றமை' வகையினரைத் தவிர்ப்பதைப் பிரச்சனையாக்குகிறது, மேலும் அதை அதிகாரம், அதிகார அமைப்புகள் பற்றிய அறிவாய்வியல் (epistemology) கருத்தாக்கத்துடன் பொருத்துகிறது (Mutman 2006). இது மையம் - விளிம்பு என்கிற இருமை வகைப்பாட்டிற்கு அடித்தளமிட்டது. மையம், விளிம்பு என்கிற இருமையில் அதிகாரம் கொண்ட மையம், அதிகாரமற்ற விளிம்பு நிலை என்பதால் பின்நவீனத்துவம் 'மையமின்மை' (decentredness) அல்லது மையமழிப்புப் பற்றி பேசுவது அவசியம் என்கிறது. பின்நவீனத்துவம் பண்பாட்டுச் செயல்பாடுகளில் 'மையமின்மை' யின் உருவாக்கம் குறித்துப் பேசுகையில், மையம் – விளிம்பு என்ற இந்த இருமையில் அதிகாரம் கொண்ட மையம், அதிகாரமற்ற விளிம்பு நிலை, இதில் மையம் மேலோங்கி நிற்கும் விளிம்பு மறைக்கப்படும் அல்லது

மௌனிக்கப்படும். விளிம்பினை அதிகாரப்படுத்துவத்தின் மூலம் அதை மையம் நோக்கி நர்த்தலாம், இது மையத்தின் விளிம்பினை நோக்கிய நகர்விற்கு வழிவகுக்கும்.

இங்கே மையம் – விளிம்பு, மையமளித்தல், மையமின்மை இவற்றை விளக்க தமிழ்ச் சூழலிருந்து இரண்டு எடுத்துக்காட்டுகளைக் காண்போம்:

தமிழில் சமயம் குறித்த சொல்லாடலில் - சிறு தெய்வம், கிராம தேவதைகள், கிராம தெய்வம் என்பது ஒரு வகைமையாகவும் இன்னொரு வகைமையாக பெருந்தெய்வங்கள் என்கிற படிநிலை கொண்ட இருமை வகைப்பாடு பயன்படுத்தப்படுகிறது. இது மையம் - விளிம்பு பார்வையின் விளைவாகும், இதன் பொருள், மையம் என்பது மட்டுமே முக்கியம், 'மையம்' தவிர்த்து 'மற்றவை' எல்லாம் கவனம் பெறாமல் புறந்தள்ளப்படும். இதில் 'மற்றைமை' விளிம்பு நிலை என்கிற பொருளில் புரிந்து கொள்ளவும், மையமே மேலானது என்று நிர்பந்திக்கிற உளவியல் உள்ளடங்கியிருக்கிறது. பொதுப்புழக்கத்திலும், ஆய்வுக்கட்டுரைகளிலும் இவ்வாறு பயன்படுத்தப்படும் மொழிப்பிரயோகத்தின் பின்னுள்ள உளவியலை பின் நவீனத்துவம் கட்டவிழ்க்க முயல்கிறது. மேலும் சமூகப்பண்பாட்டின் உண்மை நிலை என்பதைக் கட்டமைப்பதில் கையாளும் மொழியின் முக்கியப் பங்கினை வலியுறுத்துகிறது. எனவே இதற்கு மாற்றாக 'சிறு' மற்றும் 'பெரு' முன்னொட்டுகளைத் தவிர்த்து நாட்டார் தெய்வங்கள் என்றும் சம்ஸ்கிருத தெய்வங்கள் என்று படிநிலை மறுத்த, ஏற்றத் தாழ்வு மறுத்த வகைப்பாட்டினை முன்வைக்கிறது.

அடுத்த எடுத்துக்காட்டு, சென்னையில் மார்கழியில் இசைவிழா என்றால் அது கர்நாடக சாஸ்திரீய சங்கீதத்திற்கு (டிசம்பர் சீசன்) மட்டும்தான். அதுதான் மைய இசை, இசை என்றால் அங்கிருந்துதான் ஒலிக்கும் என்பதால், சாதாரண மக்களின்பிற இசை வகைமைகள் விளிம்பில் மறைந்து போகும். சாதாரண மக்களின் இசை வகைமைகளுக்கு மார்கழி இசையில் இடமில்லை. மையம் என்பது மேலாதிக்கம்தான், இது பன்மைய இசை வடிவங்களை மறுதலிக்கும் அல்லது புறக்கணிக்கும். சென்னையில் அதே டிசம்பர் சீசனில் கடந்த ஐந்து ஆண்டுகளாக 'மார்கழியில் மக்களிசை' நிகழ்வு திறந்த

வெளியில் ஆயிரக்கணக்கானோர் பங்கேற்புடன் நடைபெறுகிறது (சபாக்களில், மூடிய அரங்குகளில் அல்ல), சாதாரண மனிதர்கள் வாசிக்கும், பங்கேற்கும் பல வகையான இசைவடிவங்கள் ஆரவாரமாய் ஒலிக்கிறது, பாட்டும், இசையும், நடனமும் சேர்ந்த நிகழ்வாய் நடைபெறுகிறது. விளிம்பு நிலை வடிவங்கள், மையம் நோக்கி நகர்கையில், மையம் - விளிம்பு என்கிற இருமை கலைந்து 'மையமின்மை' என்கிற சூழல் உருவாகிறது. டிசம்பர் 2025 மார்கழி மக்களிசையில் கர்நாடக இசைக்கலைஞர் டி. எம். கிருஷ்ணா கலந்து பேசியபோது, மக்களோடு தான் இசை, மக்களிடமிருந்து விலகிய இசை இல்லை, இங்கே சாதி என்பது இசைக்கருவிக்கும் இருக்கிறது, கலைக்கும் இருக்கிறது இதை உடைக்க வேண்டும், எல்லா மக்களுக்குமான இசைக்கான மாதமாக இந்த மார்கழி இருக்க வேண்டும் என்றார். இறுதியில் கர்நாடக இசை வடிவில் 'புறம்போக்கு' (இது அரசின் வருவாய்த்துறை பதிவேடுகளில் நில வகைமை குறித்த சட்டபூர்வமான சொல்லாக பயன்பாட்டில் இருப்பினும், பொதுத்தளத்தில் தினசரி வாழ்வில் ஒரு வசவு சொல்லாக 'எதற்கும் பயனற்றவன்' என்கிற பொருளில் பயன்படுத்தப்படுகிறது) என்ற மரபான கர்நாடக இசைக்கு அதன் மரபுக்கு பொருந்தாத பொருளில் ஒரு பாடலைப் பாடினார் (https://www.youtube.com/watch?v=FYTsBfJj0do), இதுதான் பின்நவீனத்துவம் முன்வைக்கும் நகர்வு. விளிம்பு நிலை மக்களின் இசை ஆரவாரமாய் மையம் நோக்கி நகர்வது போலவே, 'மையம்' அந்தஸ்தில் இருக்கும் கர்நாடக இசை விளிம்பு நிலை மக்களின் இசைவிழாவில் பாடுவது. இது ஒரு துவக்கம், இது போன்ற முயற்சிகள், கலகக் குரல்கள் அரிதானவைதான், ஆதிக்கத்தை உடைப்பது என்பது பெரும் சவால், ஆனால் இது போன்ற நிகழ்வுகள் தொடர் செயல்பாடாக மாறுகையில் இசையில் 'மையமற்ற' என்கிற ஒரு சூழல் உருவாக வழிவகுக்கும்.

ஒரு சமூகத்தின் பண்பாடு, அதன் செயல்பாடுகள் என்பது அச்சமூகத்தில் நிலவும் ஏற்றத்தாழ்வுகள், பாகுபாடு, மையம், விளிம்பு, மேலாதிக்கம், சுரண்டல், அதிகார அத்துமீறல்கள் இவைகளிலிருந்து தனித்து நின்று இயங்க முடியாது. மேற்கண்ட கூறுகளோடு தொடர்புடையதாயும், அவற்றின் தாக்கங்களை உள்வாங்கியதாகவுமே அப்பண்பாட்டின் செயல்பாடுகள் இருக்கும். மேலும்

அவைகளைத் தக்க வைத்துக்கொள்வதற்கான ஏற்பாடுகளுடனேயே அப்பண்பாட்டின் அசைவியக்கமும் இருக்கும். வரலாற்றை உற்று நோக்கின் சில மதிப்பீடுகளும், அர்த்தங்களும், கட்டமைப்புகளும் ஒரு சிலருக்கான (பிரிவினருக்கான) சலுகைகளுக்காவும், சிறப்புரிமைகளுக்காகவும் உருவாக்கப்பட்டிருக்கும், அவை அச்சமூகத்தில் பிறருக்கு மறுக்கப்பட்டிருக்கும். வேற்று/மாற்றுக் கருத்துக்கள் ஒடுக்கப்பட்டிருக்கும் அல்லது அழிக்கப்பட்டிருக்கும். இத்தகைய சூழலில் முரண்பட்ட கருத்துக்கள், முரண்பட்ட சமூக உறவுகள், ஊடறுத்துச் செல்லும் காரணிகள், எதிர்கொள்ளும் சவால்கள், மறுதலிப்புகள் இவைகளும் ஆய்வில் இடம் பெற பின்நவீனத்துவப் பார்வை வாய்ப்பினை உருவாக்குகிறது.

மேலும் மேற்கத்திய மானிடவியலாளர்களின் ஆய்வுகளில் வெள்ளையர்/மேற்கத்திய சமூகம் அல்லாத மற்ற 'பிற' சமூகங்கள் குறித்த பார்வையை பின்நவீனத்துவம் தீவிர கேள்விக்குள்ளாக்கியது. மேற்கத்திய அனுபவத்தில், அறிவுலகில் உருவாக்கப்பட்ட கருத்தாக்கங்கள், கோட்பாடுகள், மேற்கல்லாத நிலப்பரப்பில் வாழும் மக்களின் சமூகப் பண்பாடு பற்றி ஆய்விற்கு பயன்படுத்துவதை, அப்பண்பாடுகளைப் புரிந்து கொள்ள முயல்வதை விமர்சனத்திற்கு உட்படுத்துகிறது. எனவே மேற்கத்திய கருத்தாக்கங்களையும், கோட்பாடுகளையும் பயன்படுத்துவதை மறுபரிசீலனைக்குட்படுத்துவது, கீழைத்தேய மற்றும் அகத்தார் கருத்தாக்கங்களையும், வகைமைகளையும் தெறிவு செய்து அவற்றைப் பயன்படுத்திச் சமூகப் பண்பாடுகளை ஆய்வு செய்ய வேண்டும் என்பதையும் அறிவுறுத்துகிறது.

### பண்பாடு, வரலாறு, உண்மைகள்

ஏற்கனவே கூறியது போல பின் நவீனத்துவப் பார்வையின் அடிப்படையில், பண்பாடு என்பதன் விளக்கம் ஒரு சமூகத்தில் நிலவும் ஏற்றத்தாழ்வு என்பது, மேலாதிக்கம், அதிகாரம் மற்றும் சுரண்டல் ஆகியவற்றின் பாதிப்புகள் போன்றவற்றைத் தவிர்த்ததாக இருக்க முடியாது. வரலாற்றில் சில காரணங்களால், செயல்முறைகளால் சில பண்பாட்டுச் செயல்பாடுகளும், அர்த்தங்களும் சிறப்பு உரிமைகளுடன் மேலாதிக்கம் பெற்றிருக்கும்,

அதற்கு மாறாக மற்ற சில செயல்பாடுகள் முறையற்றது அல்லது நெறியற்றதாக கட்டமைக்கப்பட்டு விளிம்பு நிலைக்குத் தள்ளப்படும் அல்லது ஒடுக்கப்படும். இதனால் இதுபோன்ற பண்பாட்டு உண்மைகள் எப்பொழுதும் வரலாற்றுப் பின்புலம் கொண்டிருக்கும், ஒரு சார்புடையதாக இருக்கும், அவ்வாறு வரலாற்றில் கட்டமைக்கப்பட்டிருக்கும், இவை யாவும் கேள்விக்குட்படுத்த வேண்டிய உண்மைகளாகும்.

லியேடார்ட் (Leotard 1984) பிரெஞ்சு பின்நவீனத்துவ சிந்தனைப் போக்கினைக் கட்டமைத்தவர்களில் முக்கியமானவர், இவர் வரலாறு, சமூகம், பண்பாடு ஆகியவற்றின் உண்மைகள் முழுமையானதன்று, அவ்வாறு இருக்க முடியாது, முழுமையாக்கம் (totalizing) செய்யமுடியாது என்கிறார். எனவே ஒரு சமூக பண்பாட்டினை முழுமையான ஒற்றைத்தன்மையுடன் அர்த்தப்படுத்துதலை நிராகரிக்கிறார். இவ்வாறு ஒருங்கிணைத்து ஒழுங்கமைத்து ஒற்றைத் தன்மையாக்குவது என்பது அப்பண்பாட்டினைச் சுருக்கி விளக்கவுரை எழுதுவதாகவும், மற்றும் உள்ளே நிலவுகின்ற அல்லது இனி உருவாகக்கூடிய பன்மையங்களை ஒடுக்கி அல்லது மறைத்து விடுவதாகவும் அமையும் என்கிறார்.

அடுத்து கிளிபோர்ட் (Clifford 1986) மட்டும்தான் இனவரைவியல் விளக்கவுரையை பிரச்சினையாக்கவில்லை, மாறாக பின்நவீனத்துவத்தின் புதிய கருத்தாக்கங்களில் நம்பிக்கைகொண்டு அவற்றை மானிடவியலாளர்கள் ஏற்றுக்கொண்டு புதிய இனவரைவியல் எழுத வலியுறுத்துகிறார், இதனால் இனவரைவியல் உரையாக்கம் பல அடுக்குகளைக்கொண்டதாக இருக்கும் என்றும், மானிடவியலாளர், தகவலாளிகளின் உரையாடல் பன்மையை குரல்களாக, புறக்கணிக்கப்படும் அல்லது விலக்கிவைக்கப்படும் 'மற்றவர்களின்' குரல்கள் பதிவு செய்யப்படும் என்றும் இது மானிடவியலாளரின் விளக்கவுரையில் செயல்படும் 'அதிகார – ஒற்றைக்குரலை' கேள்விக்குட்படுத்தும் என்றும் கூறுகிறார். பின்நவீனத்துவவாதிகளின் இனவரைவியலை யார் எழுதுவது? அதில் வெளிப்படும் குரல்கள் யாருடையவை? என்கிற கேள்விகள் ஒரு நெறிமுறைசார்ந்த பதற்றம் என்று கூட கருதலாம், ஆனால் அதன் அடிப்படை நோக்கம் 'மாற்றமை' வகையினரின் குரல்

இனவரைவியலில் வெளிப்படவேண்டும், உரையாக்கம் 'பன்மைத்துவ குரல்கள்' (Polyphony) கொண்டிருக்க வேண்டும் என்பதே. இவர்களின் குரல் விடுபடாமல் இருப்பதற்கான இது ஒரு ஆய்வு உத்தி எனக்கூடக் கொள்ளலாம்.

வரலாற்றில் ஓர் உண்மையானது முழுமையானதன்று; காலப்போக்கில் உண்மை என்றறியப்படுவது புதிய கண்டுபிடிப்புகளால் மாற்றமடைகிறது, (லியேடார்ட் - Leotard 1984). எந்த ஒரு உண்மையும் அது வரையறுக்கப்பட்டபோது கிடைத்த தகவல்கள், அறிவியல் ஆய்வுமுறை, ஆய்வுகளின் முடிவுகள் அடிப்படையிலேயே கட்டமைக்கப்படுகிறது. இது முழுமையான உண்மை ஆகாது, ஏனெனில் ஆய்வின் போதாமைகள், விடுபடுதல், பயன்படுத்திய ஆய்வு முறையின் குறைபாடு, ஆய்வாளனின் குறைபாடு (!) என பல காரணங்கள் இருக்கலாம். இனிவருங்காலத்தில் கண்டறியப்படும் ஆய்வுகளின் அடிப்படையில் உண்மைகள் மாற்றத்திற்குள்ளாகும், அல்லது ஏற்கனவே கண்டறியப்பட்டதின் போதாமைகள்/ இடைவெளிகள் நிரப்பப்படும்போதும் உண்மைகள் மாறும். மனிதஇன வரலாறு பற்றிய உண்மை என்பது எவ்வாறு ஆய்வுபூர்வமான தரவுகளின் அடிப்படையில் மாற்றம் பெறுகிறது என்றும் இன்னும் கூட வருங்காலங்களில் மாறுதலடையக்கூடும் என்றும் கூறுகிறது. உடல்சார் மானிடவியலில், மனித இனத்தின் தோற்றம், தொன்மை குறித்த உண்மைகளில் இதைக் காணலாம். மனிதஇன வரலாற்றில் லூசி (Lucy) தான் மனித இனத்தின் முன்னோடி என்று அறிவிக்கப்பட்ட உண்மை தற்போது நிகழ்ந்திருக்கும் புதிய கண்டுபிடிப்பிற்குப் பிறகு அதற்கு இருபதாயிரம் வருடங்களுக்கு முன்பே ஒரு மனித இனம் இருந்திருக்கிறது என்று திருத்தப்பட்டிருக்கிறது. லூசி என்கிற புதைபடிவம் (Fossil) மனித இனத்தின் ஆரம்பம் பற்றி அறிய கிடைத்த தொல்லுயிர் எச்சம், மறைந்துபோன இந்த மனித இனத்தின் காலம் சுமார் 3.2 மில்லியன் ஆண்டுகள் எனக் கணிக்கப்படுகிறது. ஆப்பிரிக்காவிலுள்ள எத்தியோப்பியாவின் நிலப்பரப்பில் டொனால்ட் ஜான்சன் (Donald Johnson) என்கிற அமெரிக்க தொல்மானிடவியலாளரின் ஆய்வுக்குழு 1974 ஆம் ஆண்டு செய்த அகழ்வாய்வின் கண்டுபிடுப்புதான் லூசி (Australopithecus afarensis - அஸ்ட்ரலோபித்தக்கஸ் அபரென்சிஸ்). இந்த மனித இன முன்னோடிதான் நான்கு கால்களால் நடந்த

விலங்கினமாக இருந்த நிலையிலிருந்து இரண்டு கால்களில் நடக்கும் மனித இனமாக மாறிய கட்டம், இரண்டு கால்கள் விடுவிக்கப்பட்டு இரண்டு கைகளாக மாறிய கட்டம், இரண்டு கைகள் கிடைத்தது என்பது உடல் அமைப்பில் நிகழ்ந்த பெரும் மாற்றம், அதோடு மூளையின் பருமனும், வளர்ச்சியும் கூடியிருந்தது. லூசிதான் மனிதக்குரங்கினங்களுக்கும், மனித இனத்திற்கும் இடையில் இருந்த அறுபட்ட தொடரில் (missing link) முதல் இனம் என்று முடிவு செய்யப்பட்டது. அதற்குப்பிறகு 2015 ஆம் ஆண்டு அதே எத்தியோப்பியாவில் இன்னொரு மனித இன முன்னோடியின் புதை படிவம் கண்டறியப்பட்டிருக்கிறது அதன் பெயர் (Australopithecus deyiremeda - அஸ்ட்ரலோபித்தக்கஸ் தீரமேடா) இதன் காலம் 3.4 மில்லியன் என்று கணிக்கப்படுகிறது. இதைக் கண்டறிந்தது ஹைலோ சில்லாஸே (Selassie) என்கிற எத்தியோப்பிய தொல்மானிடவியல் அறிஞரின் ஆய்வுக்குழு. இந்த புதை படிவத்தின் தாடை, பல், மற்றும் பாதத்தின் ஒரு பகுதி கண்டெடுக்கப்பட்டிருக்கிறது. இது லூசிக்கு முந்திய இனம், லூசியை விட பழமையான உடலமைப்பைக்கொண்டிருக்கிறது என்கிறார் ஆய்வாளர். இது மரமேறுவதற்கான உடலமைப்புடன் இருந்திருக்கிறது, இதன் வாழ்க்கைமுறையில் இன்னும் மரமேறும் வழக்கமும் வாழ்வின் ஒரு செயல்பாடாக இருந்திருக்கிறது (சில்லாஸே - Selassie 2025)

பின்நவீனத்துவத்தின் தாக்கம் காரணமாகப் பெண்ணிய மானிடவியலானது, ஒரு சமூகத்தில் மரபாக ஆணை மட்டுமே மையப்படுத்தும் பார்வையினை விமர்சனத்திற்குட்படுத்துகிறது. பெண்ணியம் பேசும் மானிடவியலாளர்கள், மானிடவியலில் பண்பாடு குறித்த வழக்கமான ஆய்வுகளில் எவ்வாறு பெண்கள் தவிர்க்கப்பட்டு ஒரு முழுதளாவிய பண்பாடு கட்டமைக்கப்படுகிறது என்று நிறுவுகிறார்கள். மேலும் இனவரைவியல் ஆய்வு அணுகுமுறை பாலினம் (gender) மற்றும் ஆணின் அதிகாரம் எவ்வாறு புரிந்துகொள்ளப்படுகிறது என்பது குறித்தும் பேசுகிறது. பெண்ணிய மானிடவியலாளர்களிடம் (Feminist Anthropologists) எவ்வாறு பண்பாட்டு ஆய்வுகள் எவ்வாறு பெண்களைத் தவிர்க்கின்றன, கவனிக்கத்தவறுகின்றன; அவர்களின் குரல்கள் கேட்கப்படுவதில்லை - பெண்களின் அனுபவங்களும், அந்த அனுபவங்கள் குறித்த அர்த்தங்களும் அவர்களது பார்வையில்

பதிவிடப்படுவதில்லை என்கிற தீவிர விமர்சனமும் உண்டு. காரணம் பல; இன்றும் கூட களஆய்வில் மானிடவியலாளர்களுக்கும், இனவரைவியலாளர்களுக்கும் பொதுவாக ஆண்களே தகவலாளிகளாக உள்ளனர், அவர்களின் தகவல்களும், கருத்துக்களுமே பதிவு செய்யப்படுகின்றன. இதனால் ஆய்வு நடைபெறும் சமூகங்களில் உள்ள, பழங்குடிப் பெண்கள், சாதிச் சமூகப் பெண்கள், பெண் விவசாயிகள் போன்றோர் விடுபட்டுப்போகின்றனர். அல்லது சிலவேளைகளில் ஆய்வாளர்களால் பெண்களின் பங்கேற்பு என்பது - ஒரு சடங்காக கடைபிடிக்கப்படுகிறது. மேலும் களஆய்வின்போது அச்சமூக ஆண்களின் மேலாதிக்கம் என்பது நடைமுறையில் அச்சமூகம் கட்டமைத்திருக்கும் ஆண் அதிகாரக் கருத்தியலால் பெண்கள் பங்கேற்பிற்கு ஆய்வாளர் எடுக்கும் தீவிர முயற்சிகள் கூட இதனால் தடைபடலாம்.

ஒரு மானிடவியலாளருக்கு பெண்களிடம் களஆய்வு செய்ய பாலினம் குறித்த கருத்தாக்கங்கள் பற்றிய அறிவும் அவற்றைக் களஆய்வில் பயன்படுத்தத் திறனும், அனுபவமும் அவசியம். பண்பாடு மற்றும் தினசரி சமூக வாழ்க்கைச் செயல்பாடுகள் என்பன அச் சமூக மக்களில், ஆண், பெண் என இருபாலரும் பகிர்ந்து கொள்ளக்கூடிய நடைமுறையாகும். ஆண்கள், பெண்கள் என இருபாலினத்தவருக்கும் தனித்தனி வேலைகளும் (வேலைப்பகிர்வு), சேர்ந்து செய்யும் கூட்டு வேலைகளும் உண்டு. அதனடிப்படையில் ஆண்களுக்கும், பெண்களுக்கும் தனித்தனி அனுபவங்களும், அறிவுகளும் உண்டு. இது போன்ற நிலையில் ஆய்வில் பெண்கள் விடுபட்டால் அந்தப் பண்பாட்டு ஆய்வு அல்லது இனவரைவியல் ஆய்வினை ஒரு சமூகம் குறித்த முழுமையான ஆய்வு என்று கருத முடியாது. இது போன்ற ஆய்வுகளில் கண்டறியப்படுவது 'ஓரளவிற்கான உண்மைகளே' (partial truths) என்கிற கருத்தும் ஆய்வாளர்களுக்கிடையே உண்டு.

## ஆய்வுக்களம், ஆய்வாளரின் தற்சாய்வு, உள்ளுணர்வு

மானிடவியல் களஆய்வில், மாலினோஸ்கியின் காலத்திலிருந்து 'பங்கேற்புடனான கூர்நோக்கல்' (participant observation) தான் முக்கிய களநுட்பமாகப் பயன்படுத்தப்படுகிறது. ஆனால்

பின்நவீனத்துவம் பல புதிய களஆய்வு அணுகுமுறைகள், நுட்பங்கள் குறித்துப்பேசுகிறது. மானிடவியல்வழக்கமாகவெறுமனேஅறிவியல் பூர்வமாக பண்பாட்டு உண்மைகளைப் பதிவு செய்வதைத் தாண்டி, இனவரைவியல் பிரதிகள் உருவாக்கம், சொல்லாடல், களஆய்வில் ஆய்வாளரின் பங்கு, பயன்படுத்தும் ஆய்வுமுறை, ஆய்வின் தேவை கருதி 'பல தளங்களில் (multiple sites) செய்ய வேண்டிய ஆய்வுகள், அதோடு ஆய்வாளர் - தகவலாளிகள் இடையே நிலவும் உறவின் தன்மை, ஆய்வாளரின் அறிவதிகாரம் (authority) அதற்கு இணங்கி; தகவலளிப்போர் ஆகியவைக் குறித்த கேள்விகளையும், மாற்றுச் கருத்துகளையும், செயல்முறைகளையும் பின்நவீனத்துவம் முன் வைக்கிறது.

மேலும், ஆய்வாளனின் தற்சாய்வு, கருத்தியல் சாய்வு, அகநிலை (subjectivity) ஆகியன அவரது புரிதலை, அறிதலைப் பாதிக்கும், இதனால் இனவரைவியலின் விளக்கவுரையை (representation) எவ்வாறு ஆய்வாளன் ஒரு புறவய பார்வையுடன் உண்மையாகக் கட்டமைக்க முடியும் என்று கேள்வி எழுப்புகிறது. இனவரைவியல் எழுதும் ஒரு மானிடவியலாளருக்கு தொடர் சுயவிமர்சன விழிப்புணர்வு (self critical awareness) மிக அவசியம். அந்த விழிப்புணர்வு களஆய்வு தொடங்கிய நிலையிலிருந்து அச்சமூகத்தின் உண்மை நிலையினை விளக்கும் உரை என முடியும் வரை தொடரவேண்டும், இது ஒரு மானிடவியலாளர் தன் அறிவுப்புலம் சார்ந்துக் கற்றறிந்த அறிவின் மூலம் பெற்ற அறிவதிகாரத்தின் தலையீட்டை ஆய்வில் கட்டுப்படுத்த உதவும் என நம்புகிறது. உரையாக்கம் என்பது பற்றிப் பேசும் பொழுது ஆய்வாளர் மட்டுமே எழுதும் விளக்கவுரையாக அல்லாமல் அது ஆய்வாளர் மற்றும் ஆய்வில் பங்கேற்போர்/சமூகத்தார், ஆண், பெண் எனப் பல சாராரின் குரல்களையும் கொண்ட ஒரு கூட்டு முயற்சியின் வெளிப்பாடாக இருக்கவேண்டும்.

வழக்கமான இனவரைவியல் ஆய்வு மூலம் கட்டமைக்கப்படும் சமூகப் பண்பாடு குறித்த உண்மைகள் மீது பின் நவீனத்துவவாதிகள் கொண்டிருந்த அவநம்பிக்கையின் காரணமாக மானிடவியலின் முக்கிய கவனம் ஒரு குறிப்பிட்ட சமூகப் பண்பாட்டினை ஆராய்வது என்பதிலிருந்து ஆய்வாளனின் தற்சாய்வு, உள்ளுணர்வு ஆகியவை

முக்கியத்துவம் பெற்று ஆய்வுப்பொருளாகின. சுருக்கமாகச் சொல்வதானால் மானிடவியல் ஆய்வு சமூகப்பண்பாடு குறித்த ஆய்வில் கவனம் செலுத்துவதிலிருந்து திசை மாறி, இனவரைவியல் விளக்கவுரை எழுதுவது பற்றிய ஆய்வில் கூடுதல் கவனம் செலுத்தும் ஆய்வாக மாற்றமடைந்தது. இனவரைவியல் உரையாக்கம் குறித்துப் பின் நவீனத்துவ சிந்தனை கொண்ட மானிடவியலாளர்கள், மற்றும் துறையிடை ஆய்வில் ஈடுபட்டிருக்கும் பிற அறிவுப்புலங்களைச் சேர்ந்த ஆய்வாளர்களிடையே நீண்ட, தீவிரமான விவாதங்கள், கலந்துரையாடல்கள் நடைபெற்றுள்ளன, அதை விரித்துப் பேசுவது, எழுதுவது இக்கட்டுரையின் நோக்கத்தையும், எல்லையையும் தாண்டிப் போகும்.

## பின்நவீனத்துவப் பார்வையில் 'காலனிய நீக்கம்'

இனவரைவியல் ஆய்வில் 'காலனியநீக்கம்' என்கிற கருத்தாக்கம் பின்நவீனத்துவத்தின் கருத்தாக்கங்களான மேலாதிக்கம், அதிகாரம், அதிகாரக்கட்டமைப்புகள், மையமின்மை, மொழி, பெருஞ்சொல்லாடல் நிராகரிப்பு போன்றவற்றை உள்வாங்கிக்கொண்டு காலனிய ஆட்சிக்கால இனவரைவியல் எழுத்துக்களை, அவற்றின் மூலம் உருவாக்கப்பட்ட கருத்துக்களை மறுபரிசீலனைக்குட்படுத்துகிறது, இனவரைவியல் கட்டவிழ்ப்பு (deconstruction) செய்கிறது. கட்டவிழ்ப்பு என்பது ஒரு பிரதியை எளிமையாக விளக்குவதற்கு எடுக்கும் முயற்சி எனக் கொள்ளலாம். இந்த செயல்முறையில் பிரதியின் உட்பொருளில் உள்ள நியாயமற்ற அல்லது காரணமற்ற பாகுபாடுகள், ஏற்றத்தாழ்வுகள், ஊகங்கள், அனுமானங்கள், கற்பிதங்கள் போன்றவை ஆய்விற்குட்படுத்தப்படும். ஒரு எடுத்துக்காட்டு கூறுவதானால் குறிப்பிட்ட பிரதியில் பேசப்படும் விளிம்பு நிலை அல்லது அடித்தட்டு சமூகங்கள் பற்றி, அச் சமூகங்களின் மீது நடத்தப்பட்ட அடக்குமுறை பற்றி என்ன சொல்கிறது, எவை விடுபட்டுள்ளன, அல்லது மறைக்கப்பட்டுள்ளன, மற்றும் அவற்றின் முரண்பாடுகள் இவைகள் பற்றிய விளக்கங்களாக வெளிக்கொண்டுவர முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

மானிடவியல் ஆய்வில் காலனிய நீக்கம், சமூகப் பண்பாட்டிற்குள் இருக்கும் பன்மைத்துவத்தினையும் (உட்குழுக்கள்/உட்பிரிவுகள்),

அவற்றில் மையம் – விளிம்பு நிலைகள், விளிம்பு நிலைக்குழுக்களின் குரல்களுக்கு அளிக்க வேண்டிய முக்கியத்துவம் குறித்து ஆய்வு செய்ய வேண்டும். ஒரே பண்பாட்டிற்குள் இருக்கும் பன்மைத்துவக் குரல்களை அடையாளம் கண்டு, அக்குரல்களுக்கு வாய்ப்புகளை உருவாக்க வேண்டும், அவற்றிற்குள் இருக்கும் முரண்பாடுகள் குறித்தும் கவனம் செலுத்த வேண்டும். விளிம்புநிலை அல்லது அடித்தளமக்களால் பேச முடியுமா? என்கிற முக்கியமான கட்டுரையை எழுதிய ஸ்பிவாக் (Spivak 1988) பின்காலனியம் குறித்த முக்கிய ஆய்வாளர்களில் ஒருவர். அவர் தன் கட்டுரையில் அடித்தளமக்களின் குரல்கள் குறித்துப் பின்கண்டவாறு எழுதுகிறார், அதிகாரமற்ற விளிம்பு நிலை மக்கள் அவர்களது வாழ்நிலை பற்றி விளக்க முயன்றால் அவர்கள் குரல்கள் அழிக்கப்படுகின்றன அல்லது அதைத் தவறாகப் புரிந்து கொள்வதற்கு ஏற்ப இந்தச் சமூக (அதிகார) அமைப்பு கட்டமைக்கப்பட்டிருக்கிறது. அடித்தளத்திலிருக்கும் மக்கள் எப்பொழுதும் பேசிக்கொண்டுதானிருக்கிறார்கள், அவர்களது வார்த்தைகள், இந்த அமைப்பிற்கு ஏற்ப ஊடகங்கள் கட்டமைக்கும் சொல்லாடல்கள், அரசின் கொள்கை மொழி, செயற்பாடுகளுக்கான பரப்புரை என இவற்றில் பொருந்தவில்லை எனில் அவர்களது குரல்கள் புறக்கணிக்கப்படும் அல்லது திருத்தி எழுதப்படும். அவர்களின் குரல்கள் இங்கு நிலவும் அதிகார அமைப்புகளுக்கு பொருத்தமானதாக, பயனுள்ளதாக இருப்பின் கேட்கப்படும். இல்லையெனில் அதிகாரத்தின் குரல் தான் அவர்களின் குரலாக ஒலிக்கும்.

மானிடவியல் அறிவுப்புலம், வரலாற்றில் மேற்கத்திய காலனியாக்கம், ஏகாதிபத்தியம் இவற்றுடன் கொண்டிருந்த, இப்போதும் கொண்டிருக்கிற கூட்டினைக் கடந்து வரவேண்டும் எனில் காலனிய நீக்க அணுகுமுறை அவசியம். ஒரு குறிப்பிட்ட சமூகச் சூழலுக்குள் விளிம்பு நிலை, விலக்கி வைக்கப்பட்ட அல்லது ஒடுக்கி வைக்கப்பட்ட சமூகங்களை, உட்பிரிவுகளை வெளிக்காட்டுவது, ஏற்றுக்கொள்வது, ஈடுபடுத்துவது ஆகிய இவைகள் குறித்துத் தீவிரமாகச் சிந்திக்கவும், ஆய்வில் ஈடுபடவும் வேண்டும். சமூகத்தில் நிலவும் மேலாதிக்கம், அடக்குமுறை, எதிர்ப்பு, பாதிப்பிற்குள்ளாவோர், வன்முறை, வருத்தங்கள் இவையாவும்

*இன்றைய மானிடவியலில் தவிர்க்கமுடியாதவை (லூயிஸ் -* Lewis, *2009).*

**பின்நவீனத்துவம் குறித்த விமர்சனம்**

*பின்நவீனத்துவம் குறித்து முன் வைக்கப்படும் முக்கியமான விமர்சனம், பின்நவீனத்துவக் கருத்துக்கள் மானிடவியல் என்கிற அறிவுப்புலத்தின் அடித்தளமாக அமைந்திருக்கும் அதன் அறிவியல் அணுகுமுறை, பண்பாடு குறித்த கருத்தாக்கங்கள், கோட்பாடுகள், மற்றும் இவ்வறிவுப்புலத்தின் தனித்துவமான களஆய்வு முறை ஆகியவற்றை அசைக்க முயல்வதுதான். இதன் மூலம் பின்நவீனத்துவ சிந்தனை மானிடவியலை அடிப்படையில் அறிவியல் அணுகுமுறையற்ற நிலையினை நோக்கிக் கொண்டு செல்கிறது என்பது விமர்சகர்களின் வாதம்.*

*பின்நவீனத்துவம் முன்வைக்கும் ஒரு பண்பாட்டிற்குள் நிலவும் பன்மையம் அல்லது சார்பியம் என்கிற அதீதப் பார்வையும் நடைமுறையில் ஒரு குறிப்பிட்ட சமூக பண்பாடு குறித்த முழுமையான புரிதலுக்கும், விளக்கத்திற்கும் பயன்படாது என்றும் கருதப்படுகிறது. மேலும் இத்தகைய மிகைச்சார்பியல்வாதமும் (*hyper relativity*) மானிடவியலின் ஆக்கபூர்வமான வளர்ச்சிக்கு எவ்வகையிலும் பயனளிக்காது மாறாக இது மானிடவியல் அறிவுப்புலத்தின் வளர்ச்சியில் எதிர்மறையான தாக்கத்தையே உருவாக்கும் என்கிற விமர்சனத்தையும் மானிடவியலாளர்கள் முன் வைக்கின்றனர்.*

*மானிடவியல் என்பது அனுபவ அறிவியல் (*empirical science*) ஆகும், இது களஆய்வினை முக்கிய ஆய்வுமுறையாகக் கொண்டிருக்கிறது, இதற்கு மாறாகப் பின்நவீனத்துவம் இனவரைவியல் உரையாக்கத்தில் அதிக கவனம் கொள்ள வலியுறுத்துகிறது என்கிற விமர்சனமும் உண்டு.*

*ஆனால் ஓல்டனி (*Oldani *1998) பின்நவீனத்துவம் குறித்து ஒரு நேர்மறையான கருத்தினை முன்வைக்கிறார். இக்கருத்தியல் பல்கலைக்கழகங்களில், கல்விப்புலங்களில் இன்று நிலைபெற்றுவிட்ட ஒன்று, சமூகங்களைப் புரிந்து*

கொள்வதற்கான புதிய வழிமுறைகளை அளிக்கிறது. குறிப்பாக மானிடவியல் வரலாற்றில், வெள்ளையர் இனம் அல்லது ஐரோப்பியர் அல்லாத 'பிற' அல்லது 'மற்றமை' சமூகங்கள் குறித்த புரிதலை மறுபரிசீலனைக்குட்படுத்தும் ஒரு கருத்தினை முன்வைக்கிறது. அதேவேளையில் மானிடவியல் என்கிற இக்கல்விப்புலம் தன்னளவில் ஒரு சுயமதிப்பீட்டிற்கு (self reflexive) உட்படுத்திக்கொள்வதற்கான வாய்ப்பினையும் ஏற்படுத்துகிறது, உருவாக்கியிருக்கிறது. பின்நவீனத்துவ திறனாய்வு, மானிடவியல் - அறிவாய்வியலில் (epistemology) அடுத்த கட்ட நகர்வு எனவும் கருதலாம், மேலும் இது மானிடவியலில் அதிகாரம், மேலாதிக்கம், இனம், பாலினம், வகுப்பு, ஆகிய கருத்தாக்கங்களை உள்ளடக்கிய ஒரு சொல்லாடலை உருவாக்குவதற்கான நம்பிக்கையினையும் அளிக்கிறது.

பொதுவாக பின்நவீனத்துவம் குறித்து இரண்டு வகையான கருத்துகள் நிலவுகின்றன என்பதை அறிகிறோம், ஒரு சாரார் எதிர்மறைக் கருத்தினையும் மற்றொரு சாரார் இக்கருத்திற்கு மாறாக நேர்மறைக்கருத்தினையும், இது நீண்டகாலம் நீடிக்கக் கூடிய சிந்தனைப் போக்கு எனவும் கருதுகின்றனர். பொதுவாக அறிவியல் என்பது தொடர் கருத்தியல் சட்டக நிலைமாற்றம் (paradigm shift) என்கிற பொது விதிமுறைக்கு உட்பட்டே இயங்கி வருகிறது. ஒரு குறிப்பிட்ட காலச் சூழலில் குறிப்பிட்ட கருத்தியல் சட்டகம் கோட்பாடாக ஏற்கப்படும், பயன்பாட்டில் இருக்கும் ஆனால் காலப்போக்கில் இது விமர்சனங்களுக்குள்ளாகி அடுத்து புதுச்சட்டகம் உருவாகும். அது போலவே பின்நவீனத்துவமும் என்று கொள்வோமானால், மானிடவியல் கோட்பாட்டுச் சிந்தனையில் உருவாகியிருக்கும் புதிய கருத்தியல் சட்டகம் ஆகும்.

இங்கே கருத்தில் கொள்ள வேண்டியது என்னவெனில் இன்றைய சூழலில் பின்நவீனத்துவம் குறித்து இது போன்ற எதிர்மறை, நேர்மறை விமர்சனங்கள் இருப்பினும் ஒன்றை மட்டும் அறுதியிட்டுக் கூறமுடியும், மானிடவியலின் கருத்தாக்கங்கள், கோட்பாடுகள், ஆய்வின் நெறிமுறைகள், இனவரைவியல் உரையாக்கம், குறித்த ஒரு விவாதத்திற்கும் அதன் மூலம் உண்மையை நோக்கிய நகர்வில் இக்கல்விப்புலத்தை அடுத்த நிலைக்கு கொண்டு செல்வதற்கான வழி

முறையை அமைத்துத் தந்திருக்கிறது.

## தமிழ்ச் சூழலில் இனவரைவியலும் பின்நவீனத்துவமும்

இன்றயை தமிழ்ச் சூழலில், மானிடவியல், இனவரைவியல் எழுத்துக்களில் இரண்டு வகையான முயற்சிகளை ஆய்வாளர்கள் மேற்கொள்ள வேண்டிய தேவைகள் உள்ளன.

1. ஏற்கனவே காலனிய ஆட்சி காலத்தில் ஆங்கிலத்தில் எழுதப்பட்ட இனவரைவியல் எழுத்துக்களை கட்டவிழ்ப்பது அல்லது கட்டுடைப்பது. ஏனெனில் அந்த இனவரைவியல் எழுத்துக்களில் அச்சமூகங்கள் பற்றிய சில தேவையான அடிப்படைத் தகவல்கள் இருப்பினும் இன்றைக்கும் மிகப்பரவலாக அறியப்படும், ஆய்வுக்கட்டுரைகளில் மேற்கோள்காட்டப்படும் காலனிய ஆட்சிக் கால எழுத்துக்கள் குறித்த பின்நவீனத்துவப் பார்வையில் குறிப்பாகச் சமூகக் கட்டமைப்பு, அதிகாரம், பாகுபாடு, உரையாக்கப் பிரதியில் மொழியின் பயன்பாடு போன்றவை குறித்த கட்டவிழ்ப்பு செய்து புரிந்து கொள்ள வேண்டியது அவசியம்.

2. தமிழ் நாட்டில் உள்ள சாதிச் சமூகங்கள், பழங்குடிச் சமூகங்கள் ஆகியவைப் பற்றிய தரமான இனவரைவியல் நூல்கள் தமிழ் ஆய்வாளர்களால் எழுதப் பட வேண்டும், அது இன்னும் தமிழில் தொடக்க நிலையிலேயே உள்ளது. அதை எவ்வாறு சாத்தியமாக்குவது என்பது குறித்து ஆய்வாளர்களுக்கிடையே தொடர் உரையாடல்களும், கருத்தரங்கங்களும், பயிற்சிப்பட்டறைகளும் உயர்கல்வி நிறுவனங்களிலும், சமூக ஆய்வு நிறுவனங்களிலும் நடை பெறவேண்டும். இவற்றை நடைமுறைப்படுத்துவதற்கான செயல்திட்டங்கள் முதலில் தயாரிக்கப்படவேண்டும்.

தமிழ்ச் சூழலில் மானிடவியலின் அறிமுகம் ஐரோப்பிய காலனி ஆட்சிக் காலத்தில் ஐரோப்பிய மானிடவியலாளர்களால் 16 ஆம் நூற்றாண்டின் இறுதியிலிருந்து ஆங்கிலத்தில் எழுதப்பட்ட இனவரைவியல் நூல்கள், கட்டுரைகள் மற்றும் பயணநூல்கள் ஆகியவற்றுடன் தொடங்குகிறது. இதில் முக்கியமானது தர்ஸ்டனின் (Thurston, 1909 ) 'தென்னிந்திய சாதிகளும் பழங்குடிச் சமூகங்களும்' (Castes and Tribes of Southern India) நூலின்

தொகுப்புகள். இவையாவும் முக்கியமாகக் காலனி அரசுகளின் அன்றையத் தேவை கருதி சமூகங்கள் குறித்து அறிந்து கொள்ள எழுதப்பட்டவை, சமூகங்களின் வாழ்க்கை நடைமுறைகளை இயன்றவரை ஆவணப்படுத்த எடுத்துக்கொண்ட முயற்சிகளாகும். இந்திய விடுதலைக்குப் பின்னரும் தமிழ் நாட்டிற்கு மேற்குலக நாடுகளிலிருந்து மானிடவியல் ஆய்வாளர்களின் வருகை தொடர்ந்தது. நீண்ட காலம் களஆய்வு செய்தவர்களில் பெரும்பான்மையோர் ஆய்வு செய்த சமூகங்கள் குறித்து விரிவான இனவரைவியல் நூல்களை ஆங்கிலத்தில் நூலாகவும், விரிவான ஆய்வுக்கட்டுரைகளாகவும் வெளியிட்டுள்ளனர். வெளிநாட்டு மானிடவியலாளர்கள் ஆங்கிலத்தில் எழுதியதில் இரண்டு இனவரைவியல் நூல்கள் மட்டுமே தமிழில் மொழியாக்கம் செய்யப்பட்டுள்ளன, சி. ஜெ. புல்லர் எழுதிய 'இறைவியின் (தேவியின்) பணியாட்கள்: ஒரு தென் இந்தியக் கோவிலின் அர்ச்சகர்கள்' ( Servants of the Goddess: The Priests of a South Indian Temple) மற்றொன்று ராபர்ட் எல்.ஹார்ட்கிரேவ் எழுதிய 'தமிழக நாடார்கள்' ( The Nadars of Tamil Nadu). எஞ்சிய நூல்களையும் தமிழில் மொழியாக்கம் செய்தால் தமிழுக்குச் சில தரமான இனவரைவியல் நூல்கள் கிடைக்கும் (தமிழ் ஒளி 2026).

பின்நவீனத்துவ விமர்சனப் பார்வைக் கொண்டு ஆய்வோமானால், தமிழ் நாட்டில் உள்ள சமூகங்கள் குறித்த காலனி ஆட்சி காலத்தில் எழுதப்பட்ட செவ்வியல் இனவரைவியல் நூல்கள் வெவ்வேறு சமூகப் பண்பாடுகளுக்கிடையில் இருக்கும் வேறுபாடுகளை ஆராய்ந்துப் பதிவு செய்கின்றன, ஆனால் அதைத் தாண்டி சென்று ஒரு குறிப்பிட்ட சமூகப் பண்பாட்டிற்குள் நிலவும் வேறுபாடுகளைக் காணத் தவறுகின்றன அல்லது புறக்கணிக்கின்றன என்கிறது. இன்னும் சற்றுத் தெளிவாக இதைச் சொல்லவேண்டுமானால் ஒரு சமூகப் பண்பாட்டில் உள்ள அனைவராலும் பகிர்ந்துக் கொள்ளப்படும் முறை (shared pattern) செயல்பாடுகள் முக்கியத்துவப்படுத்தப்படுகிறது ஆனால் அச்சமூகத்திற்குள்ளிருக்கும் உட்பிரிவுகளுக்கிடையே இருக்கும் இணக்கம், வேறுபாடுகள், இணக்கமின்மை, அதனால் நிலவும் முரண்பாடுகள் போன்றவை பேசப்படுவதில்லை. இதைக் கட்டவிழ்ப்பு செய்ய பின்நவீனத்துவம் வலியுறுத்துகிறது.

இங்கே இனவரைவியல் என்பது மானிடவியல், பிற சமூக

அறிவியல் ஆய்வாளர்களிடையே பரவலாக நன்கு அறிமுகமாகாத ஒரு கருத்தாக்கமாகவே இன்றளவிலும் இருந்து வருகிறது. ஆனால் கடந்த சில ஆண்டுகளில் தமிழில் சில இனவரைவியல் நூல்கள் வரத்தொடங்கியுள்ளன. இந்நூல்கள் இனவரைவியல் எழுதப்பட்ட சமூகம் குறித்த புரிதலை, விளக்கவுரையாக எழுதுவதற்கான ஆய்வாளர்களின் தொடக்க முயற்சியாக மட்டுமே கருதலாம். இம்முயற்சிகளினால் வெவ்வேறு சமூகங்கள் குறித்து தமிழ் சமூகத்தில் நிலவும் பண்பாட்டுப் பன்மையத்தினை அறிந்து கொள்ளும் வாய்ப்பு உருவாகிறது. மேலும் சமூகங்களின் தனித்துவங்களையும், தனிப்பட்ட அடையாளங்களையும், பல்வேறு சமூகங்களுக்கிடையே நிலவும் வேற்றுமைகளையும் அதில் மறைந்திருக்கும் உள்ளார்ந்த பொருள்களையும் அறிந்து கொள்வதற்கான வாய்ப்புகளை உருவாக்கும். தமிழ் நாட்டில் சாதி என்கிற சமூக நடைமுறை அல்லது சமூக நிறுவனத்தை முழுதளாவிய அணுகுமுறையில் ஆய்வினைச் செய்ய இனவரைவியல் என்கிற மானிடவியல் கருத்தாக்கம் மிகவும் பொருத்தமானதாக இருக்கும். சாதிச் சமூகங்கள் என்கிற எல்லைக்கோட்டிற்குள்வராத முப்பத்தியேழு பழங்குடிச்சமூகங்களும் இங்கு பூர்வீகக் குடிகளாக வசித்து வருகின்றனர், விளிம்புநிலைச் சமூகங்களான இச்சமூகங்களைப் பற்றிய இனவரைவியல் ஆய்வும் அவசியம் மானிடவியலாளர்களால் முன்னெடுக்கப்படவேண்டும்.

இன்றைய தமிழ்ச் சூழலில் இனவரைவியல் எழுத்தின் அவசியம் குறித்துப் பேசவேண்டுமானால் பேராசிரியர் தொ. பரமசிவம் சமீபத்திய நேர்காணல் ஒன்றில் கூறியதை மேற்கோள் காட்டலாம், “தமிழ்ச் சமூகம் என இங்கு ஒன்றில்லை, அடுக்குமுறை அமைப்புகளாக - சாதிகளே உள்ளன என்கிறார். இன்றைய தமிழ் நிலத்தை அறிந்து கொள்ள ஒரு ஆயிரம் ஆய்வுகளாவது சாதிகள் குறித்துச் செய்யப்படவேண்டும், அப்பொழுதுதான் தமிழ் சாதிகளின் அடித்தளங்களைக் காணமுடியும், மீட்டெடுக்க முடியும்” என்கிறார் (https://www.youtube.com/watch?v=j5ttfBFX_xA&t=16s).

## இறுதியுரை

பின்நவீனத்துவம் பேசும் முக்கிய கருத்துக்களில் ஒன்றான 'பண்பாட்டுப் பன்மையம்' என்பது மானிடவியலுக்கு புதியதல்ல, மாறாக பண்பாட்டுப் பன்மையம், பண்பாட்டு சார்பியம் போன்றவை மானிடவியலின் முக்கியமான அதன் அடித்தளத்தைக் கட்டமைத்திருக்கும் கருத்தாக்கங்கள். அறிவியல் அணுகுமுறையில் களஆய்வுத் தரவுகளுடன் மானிடவியல் 19ஆம் நூற்றாண்டில் தரமான ஆய்வுகளின் முடிவுகளாக பண்பாட்டுப் பன்மையம் என்கிற உண்மையை உறுதி செய்திருக்கிறது. இங்கே பின்நவீனத்துவத்தின் தவிர்க்க முடியாத புதிய பங்களிப்பு யாதெனில், சமூகப் பண்பாடுகளுக்கிடையேயன்றி ஒரு தனித்த சமூக பண்பாட்டிற்குள் நிலவும் பன்மையம் பற்றிய ஆய்வினைக் கவனத்தில் கொள்ள வலியுறுத்துகிறது, இது மானிடவியல் வளர்ச்சியில் அடுத்த நிலை, இதை மானிடவியலாளர்கள் புறந்தள்ள முடியாது என்கிற நிலையை பின்நவீனத்துவ சிந்தனைப் போக்கு உருவாக்கியிருக்கிறது.

இனவரைவியல் கட்டவிழ்ப்பு, உண்மையின் பன்மையம், மொழிப் பிரதியில் வெளிப்படுத்தும் அதிகாரம், மற்றும் ஆய்வாளர், ஆய்வுக்குட்படும் சமூகத்தின் தகவலாளிகள் இவர்களின் கூட்டு உரையாக்கம் என இவ்வறிவுப்புலத்தின் இனவரைவியல் ஆய்வு முறையில் சில அடிப்படை மாற்றங்களை உருவாக்குவதற்கான கருத்துக்களை பின்நவீனத்துவம் முன்வைக்கிறது, அதற்கான ஆய்வுமுறைகளையும், நுட்பங்களையும் அளிக்கிறது. ஒரு சமூகப் பண்பாடு குறித்துப் பலகுரல்கள் வெளிப்படும் இனவரைவியல் எழுதப்படவேண்டும் என்று வலியுறுத்துகிறது.

பின்நவீனத்துவம், மானிடவியல் அறிவுப்புலம் மனித சமூகத்தினை ஒரு புதிய பார்வையில் காண்பதற்கான வாய்ப்பினை உருவாக்கியிருக்கிறது, குறிப்பாக வரலாற்றில், நிகழ்காலச் சூழலில் நாம் எவ்வாறு, 'மற்றமை' அல்லது 'பிற' என்கிற வகைமையை புரிந்து கொள்வது என்றும் அதே வேளையில் இவ்வறிவுப்புலம் ஒரு தீவிர சுய மதிப்பீட்டிற்கு உட்படுத்திக் கொள்வதற்கும், அதன் மூலம் அதன் அடுத்தகட்ட நகர்விற்கும் பின்நவீனத்துவ பார்வையும் கருத்துக்களும்

சிந்தனையும் உதவும். இது மானிடவியலின் முன்னோக்கிய நகர்விற்குப் புதிய வாய்ப்புகளை உருவாக்கும் என்கிற நம்பிக்கையும் இருக்கிறது.

மானிடவியலின் இனவரைவியல் கருத்தாக்கம் குறித்த தெளிவான புரிதலோடு, பின்நவீனத்துவம் முன்வைக்கும் சிந்தனை, மாற்றுக் கருத்துக்களையும் கவனத்தில் கொண்டு இங்குள்ள சமூகங்கள் பற்றிய இனவரைவியலை எழுதுவது என்பது இன்றயை தமிழ்ச் சூழலில் அவசியமாக நிகழ வேண்டிய ஒன்றாகும்.

தவிர பின்நவீனத்துவத்தின் தீவிர விமர்சகர்கள், மானிடவியல் என்கிற முறையான களஆய்வின் அனுபத்தில் உண்மைகளைக் கண்டறியும் வரலாறு கொண்ட அறிவுப்புலம் பின்நவீனத்துவ கருத்துக்களின் தாக்கத்தினை தகர்த்து அல்லது உள்வாங்கி அதன் இருப்பை நிலை நிறுத்திக்கொள்ளும் பலம் உண்டு என்றும், மேலும் இந்த அறிவுப்புலம் மனித செயல்பாடுகளை விவரிப்பது மட்டுமல்ல அவற்றிற்கு விளக்கங்கள் அளிக்கும் வரலாற்று மரபினையும் தொடரும் என்பதையும் திடமாக நம்புகின்றனர்.

## References

*தமிழ் ஒளி, பெ. 2026. 'இனவரைவியல்: கருத்தாக்கமும் செயல்முறையும்' மானிடவியல் 1 (1): 9 –33*
https://manidaviyal.com/wp-content/uploads/2026/02/Chapter-1.pdf
accessed on *5 ஏப்ரல் 2026.*

Clifford, J., & Marcus, G.E. (Eds.). 1986. Writing Culture: The Poetics and Politics of Ethnography. Berkeley: University of California Press.

Foucault, M. 1980. Power/Knowledge: Selected interviews and other writings, Ed. Colin Gordon, Pantheon books, New York.

Huyssen, A. 1990. "Mapping the Postmodern" In Jeffrev C.Alexander and Steven Seidman (eds.) Culture and Society: Contemporary Debates. Cambridge: Cambridge University Press.

Jameson, Fredric. 1991. Postmodernism or the Cultural Logic of Late Capitalism. Durham, NC: Duke University Press.

Lyotard, K.F. 1984. The postmodern condition: A report on Knowledge. Minneapolis: University of Minnesota Press.

Lewis, S.H. 2009. The Radical Transformation of Anthropology: Histroy Seen trough the Annual Meetings of the American Anthropological Association, 1955 -2005, Histories of Anthropology Annual, 5 (1): 200 -228 DOI:10.1353/haa.0.0052 file:///C:/Users/ADMIN/Downloads/Lewis-RadicalTransform- HoAA2009.pdf accessed on 12 March 2026.

Mutman, M. 2006. Writing Culture: Postmodernism and Ethnography, Anthropological Theory, Vol 6 (2) 153 - 178 10.1177/1463499606065033 file:///C:/Users/ADMIN/Downloads/WritingCulture%20(1).pdf accessed on 2 February 2026.

Oldany, M.C. 1998. Postmodernism and Anthropology: Conflict or Cooperation? Kroeber Anthropological Papers file:///C:/Users/ADMIN/Downloads/Postmodernism_and_Anthropology_Conflict%20(2).pdf accessed on 2 February 2026.

Rosaldo, R. 1989. Culture and Truth: The Remaking of Social Analysis. Boston: Beacon Press.

Selassie, H., Y., Schwartz, G.T., Prang, T.C. 2025. New finds shed light on diet and locomotion in Australopithecus deyiremeda. Nature 648, pp 640 – 648
https://doi.org/10.1038/s41586-025-09714-4

Spivak, G.C. 1988. "Can the Subaltern Speak?" C.Nelson and L.Grossberg (Eds.), Marxism and the Interpretation of Culture, Macmillan Education: Basingstoke pp. 271 – 313.

Thurston, E. 1909. Cates and Tribes of India, Government Press, Madras.

# தமிழ்நாட்டுப் பழங்குடிச் சமூகத்தின் வழிபாடும் நம்பிக்கைகளும்: 'இயற்கை - மாந்தர் - மீயியற்கைக் கூட்டிணைவுக் கோட்பாடு' அணுகுமுறையை முன்னிறுத்தி- ஒரு சமூகப் பண்பாட்டு மானிடவியல் பார்வை

**முனைவர் சி. மகேசுவரன்***

***கட்டுரைச்சுருக்கம்:*** *பிரிக்கப்படாத பீகார் மாநிலத்தின் மாலர் பழங்குடியினர் இடையே 1963-இல் களப் பணி மேற்கொண்ட பேரா. எல். பி. வித்யார்த்தி 'இயற்கை - மாந்தர் - மீயியற்கை' என்கிற ஒரு நுட்பமான மானிடவியல் கோட்பாட்டினை முன்மொழிந்தார். இம்மானிடவியல் கோட்பாட்டுப் பார்வையின்வழி, தமிழ்நாட்டுப் பழங்குடியினரின் சமயம்சார் சடங்கு ஆற்றுகைகளையும் நம்பிக்கைகளையும் சமூக மானிடவியல் நோக்கில் எடுத்துக் காட்டுவதே இக்கட்டுரைக் களம். இதன்வாயிலாகப், "பழங்குடியினர்க்கென வழிபாட்டு முறைகளும் நம்பிக்கை அமைப்பொழுங்கும் அடங்கிய தனித்ததொரு சமயமே இல்லை" - என்கிற தவறான கருத்து முன்னெடுக்கப்படும் இக்கால கட்டத்தில் பேரா. வித்யார்த்தி - அவர்களுடைய இக் கோட்பாடு மண்ணின் இயல் மரபினை வெளிப்படுத்திட உதவிடும் ஆய்வுக் கோட்பாடாக மிளிரக் காணலாம்.*

## 1.முன்னுரை

*1951-இல் (பிரிக்கப்படாத) பீகார் மாநிலத்தின், மாலர் பழங்குடியினர் (* Malar Tribes*) பற்றி முதன் முதலில் அறிந்த இந்திய மானிடவியல் பேராசிரியர் எல்.பி. வித்யார்த்தி, இப்பழங்குடியினரின் 'சமூகச் - சமய அமைவகங்கள்' (*Socio-religious Organizations*) குறித்து 1963 கால கட்டத்தின்போது விரிவாகக் களப்பணி ஆய்வினை மேற்கொண்டார். அப்போது, 'பண்பாட்டுச் சூழலியல்' (*Cultural Ecology*) அணுகுமுறைவாயிலாக, மாலர் பழங்குடியினர் இடையே* 'Gossaiyan' *(நன்மை செய் ஆவிகள்),* 'Alchi' *(தீமை செய் ஆவிகள்)* 'Jiwe Urrkya' *(முன்னோர் ஆவிகள்), மற்றும்* 'Chergani' *(பில்லி சூனியம்) உள்ளிட்டவற்றைப் 'புனிதப் புவிவரைவியல்' (*Sacred Geograhy*), 'புனித ஆற்றுகைகள்' (*Sacred Observances*) மற்றும் 'புனித வல்லுநர்கள்' (*Sacred Specialists*) என்னும் சட்டகங்களின்*

---

* மேனாள் இயக்குநர், பழங்குடியினர் ஆய்வு நடுவம், தமிழ்நாடு அரசு, *91-94449 58385*, Maheswaran.heritage@gmail.com

(Frameworks) கீழ், இனங்கண்டறிந்து வெளிக்காட்டியதன்வழியே பேரா. எல்.பி. வித்யார்த்தி 'இயற்கை - மாந்தர் - மீயியற்கை' (Nature – Man - Spirit Complex)[1] என்கிற ஒரு நுட்பமான கோட்பாட்டினை முன்மொழிந்தார்.[2]

பேரா. வித்யார்த்தி முன்மொழிந்த மேற்குறித்த மானிடவியல் கோட்பாட்டுப் பார்வை வழியே தமிழ்நாட்டுப் பழங்குடியினரின் சமயம்சார் சடங்கு ஆற்றுகைகளையும் (Religious Observances) நம்பிக்கைகளையும் சமூக மானிடவியல் நோக்கில் எடுத்துக்காட்டுவதே இக்கட்டுரைக் களம்.

## 2.தமிழ்நாட்டுப் பழங்குடியினர் - ஒரு பருந்துப் பார்வை

மிக அண்மையில் தமிழ்நாடு மாநில அட்டவணைப் பழங்குடியினராக சேர்க்கப்பட்டுள்ள நரிக்குறவர், குருவிக்காரர் 'அலை குடிகளாக' (Nomadic People) அமைய, எஞ்சியுள்ளோருள் கிழக்குத் தொடர்ச்சி மலைப் பரப்பில் 'மலையாளி' எனும் பழங்குடிக் குழுவும் ஏனைய பழங்குடிக் குழுக்கள் மேற்குத் தொடர்ச்சி மலைப் பரப்பிலும் வாழ்ந்து வருகின்றனர். மேற்குத் தொடர்ச்சி மலைப் பரப்பில் வாழும் இருளர் பழங்குடியினர் மலை அடிவாரம், கழிமுகம், கடற்கரை, சமவெளி எனப் பல் வேறுபட்ட நிலவியல்களிலும் வாழ்ந்து வருவதால் 'பரவல் பழங்குடி' (Disbursed Tribe) என அறியப்படுகின்றனர். எண்ணிக்கையில் 37 வகைமையினர் என மாநிலப் பட்டியலில் சுட்டப்பட்டிருப்பினும், உண்மையில்

---

[1]மேனாட்டுக் கோட்பாடுகளை அடியொற்றியதாகவே பெரும்பாலும் மானிடவியல் துறையின் ஆய்வுப் புலம் அமைகிறது என்கிற குற்றச்சாட்டிற்கு மாறாக, இந்திய மானிடவியலாளர் பேரா. எல்.பி. வித்யார்த்தி அவர்கள் மண் மரபு சார்ந்த இரு மானிடவியல் கோட்பாடுகளை அறிமுகப்படுத்தினார். அவற்றுள் ஒன்றே, 'இயற்கை-மாந்தர்-மீயியற்கை கோட்பாடு' ஆகும். இங்கு அவர் 'Man' என்கிற ஆண் பாலினம்சார் சொல்லைப் பயன்படுத்தி இருப்பினும், பாலினச் சார்பின்மை கருதி 'மாந்தர்' என்கிற சொல்லாடலை எனது எழுத்தில் எடுத்துரைத்துள்ளேன். மேலும், 'Spirit' என்கிற 'குறிப்பீட்டு சொல்லை' (Specific Term) அவர் பயன்படுத்தி இருப்பினும், சார்பின்மை கருதி 'மீயியற்கை' என்கிற சொல்லாடலையே எனது எழுத்தில் எடுத்துரைத்துள்ளேன்.

[2] பேரா. எல்.பி. வித்யார்த்தி அறிமுகப்படுத்திய மற்றொரு கோட்பாடான 'The Sacred Complex' என்பது இந்து சமயம்சார் ஆய்வுக் கோட்பாடாக அமைந்துவிட்டமை ஒரு கெடு வாய்ப்பே.

தமிழ்நாட்டில் 17 பழங்குடிக் குழுக்கள் மட்டுமே உள்ளனர் என்பதனை கருத்தில் இருத்திக் கொள்ள வேண்டிய நிலையே உள்ளது.


### 3.'இயற்கை - மாந்தர்-மீயியற்கை கூட்டிணைவுக் கோட்பாடு' - ஓர் அறிமுகம்

பேரா. எல்.பி. வித்யார்த்தி - அவர்களுடைய 'இயற்கை-மாந்தர்-மீயற்கைக் 'கூட்டிணைவுக் கோட்பாட்டின் படி,

- மாந்தர்க்கும் மாந்தர்க்கும் இடையேயான ஒத்துப்போதல்கள் (Man-Man Adjustments)
- மாந்தர்க்கும் இயற்கைக்கும் இடையேயான ஒத்துப்போதல்கள் (Man-Nature Adjustments)
- மாந்தர்க்கும் மீயியற்கைக்கும் இடையேயான ஒத்துப்போதல்கள் (Man-Supernature Adjustments)

- என்பன முழுதளாவிய நிலையில் முறையான ஆய்வுகளுக்கு உள்படுத்தப்பட்டதுடன், இவற்றிற்கு இடையிலான 'கூட்டிணைவு' குறித்தும் விரிவாக எடுத்துக் காட்டப்படுகின்றன (காண்க : படம் - 1) - இயற்கை - மாந்தர் - மீயியற்கைக் கூட்டிணைவு

படம் - I



மாந்தர்க்கும், மாந்தர்க்கும் இடையேயான ஒத்துப்போதல்கள் - 'சமூக அமைவகம்' (Social Organization), 'வாழ்க்கைச் - சுழற்சிச் சடங்குகள்' (Life-cycle Ceremonies) 'அரசியல் அமைவகம்' (Political Organization) உள்ளிட்டவற்றைக் கட்டமைக்கின்றன - மாந்தர்க்கும் இயற்கைக்கும் இடையேயான ஒத்துப்போதல்கள் - 'பொருளியல் அமைவகத்தை' (Economic Organization) கட்டமைக்கின்றன; மாந்தர்க்கும் மீயியற்கைக்கும் இடையேயான ஒத்துப்போதல்கள் 'சமய அமைவகத்' தையும் (Religious Organization) அதனோடு தொடர்புடைய 'சமயம்சார் சடங்கு ஆற்றுக்களை'யும் (Religious Observances) 'நம்பிக்கை அமைப்பொழுங்கை'யும் (Belief System) கட்டமைக்கின்றன என்பதைக் காண்கிறோம்.

## 4.திணைக் குடிகளின் சூழலியல் பற்றிய தெளிவும் இயற்கை - மாந்தர் - மீயியற்கைக் கூட்டிணைவும்

தொன்று தொட்டு இயற்கைத் தாயின் மடியில் வாழ்ந்து வரும் 'திணைக் குடிகள்' (Indigenous Peoples) - 'தெய்வப் பாதெ' எனத் தம் கடவுளர்க்கான பாதையையும் 'யானைப் பாதெ' என யானைகளுக்கான வலசைப் பாதையையும் 'காட்டு சீவனுங்க பாதெ' என ஏனைய வன விலங்குகள் வந்து போவதற்கான பாதையையும் 'மனுசப் பாதெ' என மாந்தர் சென்று வருவதற்கான பாதையையும் தனித், தனி வழித் தடங்களாகக் காட்டின் ஊடாக இனங்கண்டறிந்துள்ள சூழலியல் பற்றிய தெளிவினை உடையோராக உள்ளனர்.

இத்தகைய தனித்த பாதைகளால் 'மாந்தர் - விலங்கு மோதல்களும்' (Human-Animal Conflicts) 'பொது வெளி-புனித வெளி முரண்களும்' (Secular – Sacred Spatial Confrontations) பெருமளவில் தவிர்க்கப்படுகின்றன. மீயியற்கையின் புனிதமும் சீர்குலைவதில்லை; மாந்தர்க்கும், மாந்தர்க்கும் இடையிலான 'காடு' குறித்த கருத்தியல் மாறுபாடுகளும் கவனமாகக் கையாளப்படுகின்றன. மேலும், தற்செயலாகக் காட்டில் எதிர்ப்படும் காட்டு விலங்குகளால் மாந்தர்க்கு

தீங்கு நேராதவாறு திணைக்குடிகளால் 'தற்காலிக வாய்க்கட்டும்' [3] போடப்படுகிறது.

## 5.மீயியற்கையின் உள் வகைமைகள் - ஒரு பருந்துப் பார்வை

'மீயியற்கை' என்பது 'இயற்கைக்கு விஞ்சிய ஆற்றல்கள்' (Supernatural Prowesses) கொண்டனவாகத் திணைக் குடிகளால் [4] கருதப்படுகிறது. இவற்றைத் 'தெய்வங்கள்' (Deities) எனவும் 'ஆவிகள்' (Spirits) எனவும் இருவேறு வகைமைகளாகப் பகுத்துக் காண்பர்.

இறந்தோரின் ஆவிகளை 'நன்மைசெய் ஆவிகள்' (Benevolent Spirits) என்றும்'தீமைசெய் ஆவிகள்' (Malevolent Spirits) என்றும் இருமை எதிர்வுகளாக, (Binary Opposition) காண்பது திணைக் குடிகளின் வழக்கம். தம்மிடையே வாழ்ந்து மறைந்து போன 'முன்னோர் ஆவிகள்' (Ancestral Spirits) தம் வாழ்வில் உற்ற துணையாக, வழிகாட்டியாகப், பாதுகாவலராகப் பல வகைகளிலும் நன்மைசெய் ஆவிகளாகவே திகழ்வதாகத் திணைக் குடிகள் கருதுகின்றனர். சான்றாக, மேற்குத் தொடர்ச்சி மலைப் பரப்பில் திருநெல்வேலி, கன்னியாகுமரி உள்ளிட்ட தென் தமிழ்நாட்டு மாவட்டங்களில் வாழும் பழங்குடியினராகிய காணி என்கிற காணிக்காரர் இடையே, 'வாதெ' என்பது நன்மைசெய் ஆவியையும் 'ராயி' என்பது தீமைசெய் ஆவியையும் 'சாவு' என்பது முன்னோர் ஆவியையும் 'தெய்வொம்' என்பது கடவுளையும் குறிப்பதைச் சுட்டலாம்.இது போன்றே, கிழக்குத் தொடர்ச்சி மலைப் பகுதியின் பச்சைமலையில் வாழும் மலையாளிப் பழங்குடியினர் நன்மைசெய் ஆவியைப் 'பதுவெ' எனவும் தீமை செய் ஆவியைச் 'சந்து' எனவும் முன்னோர் ஆவியை 'நர சாதி' எனவும் தெய்வ வரிசையில் இடம் பெறும் ஆவியைக் 'குடி தெய்வொம்' எனவும் குறிக்கப்படுவதைக் காட்டலாம்.

---

[3] நீலகிரி மாவட்ட ஆலு குறுமப் பழங்குடியினர் இத்தகைய 'வாய்க்கட்டு போடும்' மந்திர ஆற்றலில் திறன் மிக்கவர் என நீலகிரி மாவட்டத்தின் ஏனைய திணைசார் குடிகள் உறுதியாக நம்புகின்றனர்.

[4] தமிழ்நாட்டைச் சார்ந்த மானிடவியலாளரான பேரா. ஆ. செல்லபெருமாள் கல்வராயன் மலையாளிப் பழங்குடியினர் இடையே வழங்கலாகும் பல் வேறு 'சந்து'கள் பற்றித் தம் களப்பணி ஆய்வுகளின்வழியே கண்டுணர்ந்து பதிவிட்டுள்ளார்.

பழங்குடியினர் மீயியற்கையுடன் தங்களைத் தகவமைத்துக் கொள்ள உரிய சமயம்சார் சடங்கு ஆற்றுகைகளை முறையாகக் கடைப்பிடிக்கின்றனர். இவற்றிற்குத் தக்க சான்றுகளாகக் காணிப் பழங்குடியினரின் ‘பிணிச் சாற்றுப் பாட்டு’, பச்சைமலை மலையாளிப் பழங்குடியினரின் ‘சந்து விக்ரது’ எனும் இரு வேறு சமயம்சார் சடங்கு ஆற்றுகைகள் குறித்து இனிச் சற்று விரிவாகக் காணலாம்.

### காணிப் பழங்குடியினரின் பிணிச் சாற்றுப் பாட்டு

மேற்குத் தொடர்ச்சி மலைவாழ் காணிப் பழங்குடியினர் தங்களுடைய உற்றார், உறவினர்க்குத் தீராத நோய் ஏற்படும்போது ‘பிலாத்தி’ என்கிற தங்கள் பூசாரியைக் கொண்டு நோய் ஏற்பட்ட காரணத்தை அறிய முதலில் ‘தெளிவு பார்த்தலி’ல் ஈடுபடுகின்றனர் அப்போது ‘சாற்றுக்காரர்’ எனப்படுவோர் தெய்வத்தை வருவிக்கும் முயற்சியாகக் ‘கொக்கரெ’ [5] என்னும் மரபார்ந்த இசைக் கருவியை இசைத்து [6] ‘சாற்றுப் பாட்டு’ [7] பாடுவதில் ஈடுபடுவார். கொக்கரெ இசைப்புடன் கூடிய சாற்றுப் பாட்டைச் சாற்றுக்காரர் பாடப், பாடப் பிலாத்தியின் மீது தெய்வம் இறங்கும் என்று காணி மக்கள் உறுதியாக நம்புகின்றனர். நோய்வாய்ப்பட்டவரின் இன்னலுக்கு என்ன காரணம் என்றும் இன்னல் தீர என்ன செய்ய வேண்டும் என்றும் தெய்வத்திடம் பிலாத்தி கேட்க பிலாத்தியின்வாயிலாகவே தெய்வம் தக்க தகவல்களை அளிப்பதாகக் காணிப் பழங்குடியினர் நம்புகின்றனர். இத்தெய்வ வாக்கின்படி, உற்ற தீர்வைப் பிலாத்தி கூறுவதைக் ‘கருக்கடித்தல்’ என்கின்றனர் காணிப் பழங்குடியினர்.

காணிப் பழங்குடியினரின் பிணிச் சாற்றுப் பாடல் கீழ்க் காணும் நிலைகளில் அமைகிறது:

---


[5] காண்க : ஸ்டீபன், ஞா. 1997.

[6] குழந்தை பிறந்தவுடன் அதைத் தம் பழங்குடிச் சமூகத்தில் உள்ளிணைத்துக்கொள்ள அனுமதி கேட்டல் எனத் தொடங்கி, இறப்பு ஏற்பட்ட பின்னர் இறந்தோரின் ஆவியை மேல் உலகில் ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டிக்கொள்ளல் – என்பது வரை (அதாவது, ‘பிறப்பு’ முதல் ‘இறப்பு’ வரையிலான) வாழ்வின் அனைத்துக் கால கட்டங்களிலும் காணிப் பழங்குடியினர் தங்களுடைய தெய்வத்துடன் பேசுவதற்கு உரிய பண்பாட்டு வழிமுறையாக இத்தகைய சாற்றுப் பாட்டுகள் அமைகின்றன.

[7] ‘பழங்குடிச் சமயம்‘ (Tribal Religion) என்கிற பொருண்மை பற்றிய மேலதிகத் தகவல்களுக்குக் காண்க : Maheswaran, C. 2025.

**படம் - 2**

**காணிப் பழங்குடியினரின் பிணிச் சாற்றுப் பாடலின் பல்வேறு நிலைகள்**





## பச்சைமலை மலையாளிப் பழங்குடியினரின் சந்து விக்ரது

கிழக்குத் தொடர்ச்சி மலைப் பரப்புகளுள் ஒன்றான, பச்சை மலை எனும் குன்றில் வாழ்ந்து வரும் பழங்குடியினரான 'பச்சைமலை மலையாளிகள்' அமைதியற்று அலையும் இறந்தோர் ஆவியான 'சந்து' பல் வேறுபட்ட தீமைகளை உருவாக்கும் தன்மை கொண்டது என நம்புகின்றனர். அதனால் 'சாமியாடி' தமது சமயம்சார் சடங்கு ஆற்றுகை வழியே ஒரு கல் அல்லது உருவம் பொறித்த சிலையில் இதை அமைதிப்படுத்தி, நிலைப்படுத்துவதில் ஈடுபடுகிறார். இந்நிலையில், மேற்படிக் கல் அல்லது உருவச் சிலை 'பதுவெ' என்று குறிக்கப்படுகிறது. ஓராண்டு நிறைவிற்குப் பின் இப்பதுவையை 'நர சாதி' எனக் குறிப்பிடுவதுடன், அதனொடு தொடர்புடைய குடும்பத்தினர்க்கு உரிய 'குடி தெய்வ வரிசை'யில் அது உள்ளிணைக்கப்படும். இச்சமயம்சார் சடங்கு ஆற்றுகையைச் 'சந்து விக்ரது' என்று பச்சைமலை மலையாளிப் பழங்குடியினர் குறிப்பிடுகின்றனர் (காண்க : படம் -3).

படம் - 3


'சந்து விக்ரது' எனும் சமயம்சார் சடங்கு ஆற்றுகையின் படிமலர்ச்சி நிலைகள்




## 6.'இயற்கை வெளி'யில் அமையும் 'மீயியற்கை வெளி'

திணைக் குடிகள் தம்முடைய 'நம்பிக்கை அமைப்பொழுங்கு' *(*Belief System*)* வழியே, கண்ணால் காணும் 'இயற்கை'க்கும் கருத்தால் உணரும் 'மீயியற்கை'க்கும் இடையே ஒரு வகைத் தொடர்புறவை ஏற்படுத்தி வாழ்கின்றனர். அதாவது, 'இயற்கை வெளி'யில் *(*Space of Nature*)* அமையும் ஓர் 'இடம்' *(*Site*)*, 'ஒதுங்கிடம்' *(*Shelter*)* 'மலையுச்சி' *(*Peak*)* உள்ளிட்ட குறிப்பிட்ட சில இடங்களை முறையே 'புனித இடமாக' *(*Sacred Site*)* 'புனித வைப்பிடமாக' *(*Sacred Repository*)*, 'புனித மலையுச்சி'யாக *(*Sacred Peak*)* அறிந்தேற்பு செய்வதன்வாயிலாக, மேற்படி இயற்கை வெளியையே மீயியற்கை வெளியாகக் கருதிக் கூடுதலான 'பண்பாட்டு விழுமியத்தை' *(*Cultural Value*)* இத்தகைய இயற்கை வெளிகளுக்கு அளித்திடும் 'பண்பாட்டு நடத்தை'யைத் *(*Cultural Behaviour*)* திணைக் குடிகள் கடைப்பிடிக்கக் காண்கிறோம். திணைக் குடிகள் இடையே நிலவிடும் இத்தகைய கருத்தியல் கீழ்க்காணுமாறு அமையும்:


படம் - 4 'இயற்கை வெளி'யில் அமையும் 'மீயியற்கை வெளி'




எடுத்துக்காட்டாக, மேற்குத் தொடர்ச்சி மலைப் பரப்பில் அமைந்துள்ள 'தலைமலைச் சிகரம்', 'மல்லேசுவரன் முடி' எனும் மலைச் சிகரங்கள் முறையே 'கொட்ரு போலி', 'குவாட்டெய்ன்' என்னும் பெயர்களில் தொதவப் பழங்குடியினரால் புனிதச் சிகரங்களாகவும். 'ரங்கசாமித் தூண்' என்கிற மலைப் பரப்பு 'கொட்டேர் விக்கீன்' எனும் பெயரில் கோத்தப் பழங்குடியினரின் புனிதச் சிகரமாகவும் கேத்தரீன் அருவியும் எருமைப் பலியிடு இடமும் முறையே 'உளி மண்டெ', 'கோணெ உந்தோ பரெ' எனவும் ரங்கசாமி சிகரம் 'கிரி பெட்டு' என்னும் பெயரிலும் ஆலுகுறுமப் பழங்குடியினரின் புனித இடங்களாகவும் புனித வைப்பிடங்களாகவும் கருதப்படுவதைக் காட்டலாம். மேலும், பெருங்கற்காலக் கல்பதுக்கைகள் (Megalithic Dolmens) ஆலுகுறுமப் பழங்குடியினரால் 'கொவெ மனெ' என்கிற பெயரிலும் இருளப் பழங்குடியினரால் 'தெவ குடி' எனும் பெயரிலும் புனித இடங்களாகவும் முள்ளுகுறுமப் பழங்குடியினரால் குடியிருப்பின் நடுவே அமையும் 'தெய்வப் பெறெ' அம்மக்களால் புனித வைப்பிடமாகவும் இனங்காணப்படுவதைக் கூடுதலாகக் குறிக்கலாம்.

இவற்றுடன், காணிப் பழங்குடியினரின் சாற்றுப் பாட்டில் இடம்பெறும் கீழ்க் குறித்துள்ள 'தொன்ம வெளிகளை'யும் (Mythological Spaces) இயற்கை வெளியில் அமையும் மீயியற்கை வெளிகளுக்கான கூடுதல் சான்றுகளாகச் சுட்டலாம் :

**படம் - 5 காணிப் பழங்குடியினரின் சாற்றுப் பாட்டில் இடம் பெறும் தொன்ம வெளிகள்**




## 7.நிறைவுரை

‘பழங்குடியினர்க்கென வழிபாட்டு முறைகளும் நம்பிக்கை அமைப்பொழுங்கும் அடங்கிய ‘தனித்ததொரு சமயம்‘ *(*Independent Religion*)* - அதாவது, ‘பழங்குடிச் சமயமே’ *(*Tribal Religion*)* இல்லை [8] - என்கிற தவறான கருத்தை இந்துத்துவ அமைப்புகள் முன்னெடுத்திடும் இக்கால கட்டத்தில் - அதற்கு பா.ஜ.க. ஒன்றிய அரசின் ஆட்சியதிகார அமைப்புகள் துணை நிற்கும் சூழ்நிலையில் - மேனாட்டுக் கோட்பாடுகளையே முன்னிறுத்திக் களமாடும் மானிடவியல் ஆய்வுலகில் பேரா. எல்.பி. வித்யார்த்தி அவர்களுடைய ‘இயற்கை - மாந்தர் - மீயியற்கைக் கூட்டிணைவுக் கோட்பாடு’, மண்ணின் மரபை - அதுவும், ‘இயல் மரபை’ *(*Native Tradition*)* வெளிப்படுத்திட உதவிடும் உரியதொரு ஆய்வுக் கோட்பாடாக மிளிர்கிறது. 60 ஆண்டுகள் கடந்த பின்னரும் மண் மரபு சார்ந்த பழங்குடியினரின் சமயம்சார் சடங்கு ஆற்றுகைகளையும் நம்பிக்கை அமைப்பொழுங்கையும் ஆய்தற்கு உரிய தக்கதொரு ஆய்வியல் முறைக்கு இட்டுச் செல்லல் பாராட்டுதற்கு உரியது.

---

[8] ‘பழங்குடிச் சமயம்‘ *(*Tribal Religion) என்கிற பொருண்மை பற்றிய மேலதிகத் தகவல்களுக்குக் காண்க : Maheswaran, C. *2025.*

**நோக்கீட்டு ஏடுகள்**

| | | |
|---|---|---|
| மகேசுவரன், சி. | *2023* | “சந்து விக்ரது: பச்சைமலைப் பழங்குடியினரின் இறந்தோர் ஆவியை நிலைப்படுத்தும் சடங்கு”. 378-382. பண்பாட்டு ஆய்வியல் (‘பண்பாட்டியல் குறித்த முழுதளாவிய பார்வை’). சென்னை : பாரதி புத்தகாலயம். |
| ஸ்டீபன், ஞா. | *1997* | கொக்கறை : காணிக்காரரர் வாழ்வும் வழிபாடும் - நாகர்கோவில் : திணை வெளியீட்டகம். |
| Maheswaran, C. | *2025* | “Tribal Religion is a Reality (Furnishing of Certain Clinching Evidences from the Tribal Nilgiris)” 419-428, In : M.C. Behera (Ed.) The Rouledge Handbook of Contemporary Readings on Tribe and Religions in India (Emerging Negotiations). New York: Rouledge. |
| Vidyarthi, L.P. | *1963* | The Maler : Nature – Man-Spirit Complex in a Hill Tribe of Bihar. Calcutta : Bookland (P) Ltd. |

*1. நீலகிரி ஆலு குறுமப் பழங்குடியினர் ‘கொவெ மனெ’ என்கிற ‘நாளு பாடி’யில் வழிபடுதல்*



*2. தேன் எடுக்கப் புறப்படும் முன் ஆலு குறுமப் பழங்குடியினர் தெய்வத்தை வழிபடுதல்*



*3. காணிப் பழங்குடியினர் ‘சாவு’ எனும் தெய்வத்திற்குப் படையல் வைத்துள்ளமை*



# முதுவர் பழங்குடி இனமக்களின் வாழ்வியலில் 'இளந்தாரிமடம்' எனும் இளையோர்கூடங்களின் பங்களிப்பு

முனைவர் க.முத்துஇலக்குமி*

***கட்டுரைச்சுருக்கம்:*** *தமிழகப் பழங்குடி மக்களுள் தமக்கென தனித்த மரபு, பழக்கவழக்கங்கள், சமூகஅமைப்பு, வழிபாட்டுமுறை, குலக்கட்டுப்பாடுகள் என பிற பழங்குடி மக்களினின்றும் வேறுபட்ட பண்புகளைக் கொண்டவர்களாக முதுவர் பழங்குடி மக்கள் விளங்குகின்றனர். அடர்ந்த வனங்கள் நிறைந்த மலைச் சரிவுகளில் வாழ்ந்த போதிலும் முதுவர் பழங்குடி மக்கள் தமக்கென தனித்த பழக்கவழக்கங்களையும் வாழ்வியல் சடங்குகளையும் பின்பற்றுபவர்களாக விளங்குகின்றனர். முதுவர் பழங்குடி மக்களிடம் நிலைபெற்றுள்ள வழக்காறுகளில் குறிப்பிடத்தக்க ஒன்று இளம் வயதினர் தங்குமிடமான இளையோர்கூடங்கள் ஆகும். இவை இவர்தம் வாழ்வியல் கல்வியின் பயிற்சிக்கூடங்களாக அமைந்திருக்கின்றன. முதுவர் இன மக்களின் வாழ்வில் மிக முக்கிய, தவிர்க்க இயலாத பங்களிப்பினைக் கொண்டிருக்கும் இளயோர்கூடங்கள் மற்றும் அவற்றின் செயல்பாடுகள் குறித்து விளக்குவதாக இக்கட்டுரை அமைகின்றது.*

## முன்னுரை

*தமிழ் நாட்டில், கோயம்புத்தூர் மாவட்டத்தில் வால்பாறை சரகத்திற்குபட்ட காடம்பாறையை அடுத்த வெள்ளிமுடி, கருமுட்டிக்குடி, அடுத்து மாணாம்பள்ளி சரகத்திற்குட்பட்ட பரமன்கடவு, சங்கரன்குடி; உடுமலைச் சரகத்திற்குட்பட்ட பூச்சக்கொட்டான் பாறை, சோலையூத்து, ஆட்டுமலை, பொருப்பார்குடி, கோட்டையார் போன்ற இடங்களிலும் அமராவதி சரகத்திற்குட்பட்ட மஞ்சம்பட்டியிலும் முதுவர் பழங்குடி மக்கள் வாழ்ந்து வருகின்றனர். தொன்மைப் பழங்குடி மக்கள் பற்றிய தமது நூலில், 'முதுவர்கள் கலப்பினத்தைச் சார்ந்தவர்கள்' என்று தர்ஸ்டன் (*Thurstan*1909 குறிப்பிடுகின்றார். கள ஆய்வில் சேகரிக்கப்பட்ட செய்திகளும் முதுவர் கலப்பினத்தவராகிய நாட்டு மக்கள் என்பதை அரண் செய்வதாகவே அமைகின்றன.*

---

* *பேராசிரியர், ஆர்.ஜி.எம் அரசினர் கலை அறிவியல் கல்லூரி, அட்டப்பாடி*
muthusenthil2010@gmail.com

மதுரையில் ஏற்பட்ட குழப்பம் அல்லது போர் காரணமாக வெளியேறிய மக்கள் இனத்தவர் ஒரே கூட்டமாக இணைந்து வந்தனர் என்றும் இன்று முதல் நம்மிடையே பிரிவு இல்லை என்று அனைவரும் சத்தியம் செய்து கொண்டு ஒரே இனமாக வாழத்தலைப் பட்டனர் என்றும் அறியமுடிகின்றது[1]. பிறப்பு முதல் இறப்பு வரை முதுவர் இன மக்கள் பின்பற்றும் சடங்கியல் வழக்காறுகள் பிற பழங்குடி மக்களினின்றும் இவர்களை வேறுபடுத்துவதோடு பண்டையத் தமிழர் வழக்காறுகளோடு பொருந்தியும் அமைந்திருப்பது இங்கு சுட்டத்தக்கது. குழந்தைப்பிறப்பு (பேறுகாலம்), முழுக்குவீடு, குழந்தையை முதுகில் கட்டுதல், முடிகட்டும் சீர், இளையோர் கூடம், குறக்கட்டுப் புடவை முறை, உடன்போக்கு, திருமணம், பொங்கல் விழா, கோமாளி வேடமிடல், இறப்பு, பகிர்ந்துண்ணல், கூட்டுண்ணுதல் என அனைத்து நிகழ்வுகளிலும் தனித்துவமான முறைகளைப் பின்பற்றுகின்றனர். இசையும் நடனமும் இவர்தம் கலை உணர்விற்குச்சிறந்த எடுத்துக்காட்டுகளாகும். முதுவர் இனப்பழங்குடி மக்களின் பழக்கவழக்கங்களையும் இவர்கள் பின்பற்றும் வாழ்வியல் நெறிகளையும் கற்றுத்தரும் கல்விக்கூடங்களாக விளங்குபவை இவர் தம் குடிகளில் நிலைபெற்றிருக்கும் இளையோர்கூடங்களே (Youth dormitories). இவை உறவுமுறைசாராத குழுக்களைக் கொண்டவை. முதுவர் இன மக்களின் அனைத்து குடிகளிலும் இளையோர்கூடங்கள் செயல்படுகின்றன.

இந்திய முழுவதிலும் வாழும் பல பழங்குடிச் சமூகங்களில் இந்த இளையோர்கூடங்கள் என்கிற தனித்துவமான சமூகநிறுவனம் கடந்த காலங்களில் இருந்திருக்கிறது. மத்திய இந்தியாவில் வசிக்கும் பழங்குடிகளிடமும், வடகிழக்கு பகுதிகளில் வசிக்கும் பழங்குடிகளிடமும் இளையோர்கூடம் என்கிற நடைமுறை பரவலாகக் காணப்படுகிறது, எ.கா., ஓரான் பழங்குடிகளிடையே காணப்படும் இளையோர்கூடத்திற்கு டும்குறியா (Dhumkuria) என்று பெயர், அதேபோல நாகா பழங்குடிகள் அவைகளுடைய இளையோர்கூடத்தை மொருங் (Morung) என்று அழைக்கின்றனர். மத்திய இந்தியாவில் பஸ்தார் பகுதியில் வாழும் முரியா

[1] தகவலாலர், பழனிச்சாமி, வயது 70, கோட்டையார்

பழங்குடியினரிடையே இன்றும் கோட்டுல் (Ghotul) என்றழைக்கப்படுகிற இளையோர்கூடங்கள் உண்டு, இவை குறித்து பெயர்பெற்ற மானிடவியலாளர் வெரியர் எல்வின் (Verier Elwin 1947) 'முரியா பழங்குடியினரின் கோட்டுல்' ( Muria and their Ghotul) என்கிற புகழ்பெற்ற செவ்வியல் இனவரைவியல் நூல் ஒன்றினை எழுதியுள்ளார்.

**முதுவர் இளையோர்கூடங்கள்**

உயர்ந்த மலைச் சரிவுகளை இருப்பிடமாகக் கொண்டு வாழ்பவர்கள் முதுவர் பழங்குடி மக்கள். ஏறக்குறைய 4000 அடி முதல் 6000 அடி உயரத்தில் இவர்களது குடியிருப்புப் பகுதிகள் அமைந்துள்ளது. தாம் குடியிருக்கும் பகுதியை 'குடி' என்றழைக்கின்றனர். ஒரு குடியில் பத்து முதல் ஐம்பது வீடுகள் வரை அமைந்துள்ளன. ஒரு குடும்பம் தனியாக வாழும் இடத்தையும் குடி என்கின்றனர், குடி என்பதோடு 'கூர', 'வீடு', என்றும் சுட்டுகின்றனர். முதுவர் இனமக்கள் வாழும் ஒவ்வொரு குடியிலும் இளையோர்கூடங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இவற்றை 'இளந்தாரிமடம்' என்பர். பெரும்பாலும் பேச்சு வழக்காற்றில் 'சத்திரம்' அல்லது 'சாவடி' என்றே சுட்டுகின்றனர். முதுவர் பழங்குடி மக்கள் வாழும் ஒவ்வொரு குடியிலும் ஆண்களுக்கும், பெண்களுக்கும் தனித்தனியாக இளையோர்கூடங்கள் உள்ளன. இவை ஆண்கள் சத்திரம், பெண்கள் சத்திரம் என வேறுபடுத்தி அடையாளப் படுத்தப்படுகின்றன. இவ்வின மக்களின் இளையோர்கூடங்கள் கல்வி, தொழில், பழக்கவழக்கங்கள் மற்றும் கலைகளைக் கற்றுக்கொள்ளும் இடங்களாகவும் பொழுது போக்குக் களங்களாகவும் செயல்படுகின்றன. இந்த இளயோர்கூடங்களின் செயல்பாடுகள் முதுவர் பழங்குடி மக்களின் வாழ்வியல் நிகழ்வுகளைச் சமூக நிகழ்வுகளாக மாற்றுகின்றன எனில் மிகையன்று. இம்மக்களிடம் காணப்படும் ஒற்றுமைக்கும், பண்பட்ட வாழ்க்கைக்கும் முக்கியப் பங்காற்றுவது இளையோர்கூடங்களே. ஒரு ஒழுங்கு முறையான மக்கள் ஒரே கூரையின் கீழ் வாழ்ந்துவந்த காலத்தில் தனியிடம் அமைக்க முற்பட்டபொழுது அமைந்த முதல் நிலையே இளையோர்கூடங்கள் என ஹட்சன் கருதுகிறார் (பக்தவத்சலபாரதி 2003). இந்த இளையோர்கூடங்களில் ஐந்து வயதிற்கு மேற்பட்ட குழந்தைகளும் திருமணமாகாத இளைஞர்களும் தங்குவர். பெண்கள்

கூடங்களில் இளம்பெண்களுக்குத் துணையாக மூதாட்டிகளும் கணவனை இழந்த பெண்களும் உடன் தங்குவர். இக்கூடங்களில் வயதில் மூத்தவர் மேற்பார்வையாளராகப் பொறுப்பேற்றுக் கொண்டு இளையவர்களை வழி நடத்துவார்.

தமிழ் நாட்டில் உள்ள நீலகிரி மலையில் வசிக்கும் பெட்டக் குறும்பர்களின் ஆண்கள் இளையோர்கூடம் 'சித்தால் மானே' என்றும் பெண்கள் இளையோர்கூடம் 'பங்கிரி' என்றும் கூறப்படுகிறது, மற்றப்பழங்குடி இனங்களான கோத்தர், காணிக்காரர், மலைமலசர் பழங்குடிகளிடமும் இளையோர்கூடங்கள் வழக்கில் இருக்கின்றன (பக்தவத்சலபாரதி 2003).

## 'இளந்தாரிமடம்' - இளையோர்கூடங்களின் அமைப்புமுறை

முதுவர் பழங்குடி மக்களின் இளையோர்கூடங்கள் வீடுகளை விடவும் அளவில் பெரியதாக அமைந்துள்ளன. ஒரே நேரத்தில் முப்பது முதல் ஐம்பது ஆட்கள் தங்கும் அளவில் பெரிய கூடமாக அமைந்துள்ளது. கூடத்தின் உள்ளே இரவு முழுவதும் நெருப்பு எரிந்து கொண்டே இருக்கும். நெருப்பு அணையாமல் எரிவதற்காக நன்கு காய்ந்த பெரிய மரத்துண்டுகள் சிலவற்றைச் சேர்த்து நெருப்பிடுகின்றனர். நெருப்பு எரியும் பக்கமாக கால் வைத்து உறங்குகின்றனர், குளிருக்கு நெருப்பின் கத கதப்பு கூடம் முழுவதும் பரவியிருக்க, காட்டு விலங்குகள் பற்றிய அச்சமுமின்றி நிம்மதியாக உறங்குகின்றனர். இதே போல அனைத்து வீடுகளிலும் இரவு முழுவதும் நெருப்பு எரிந்து கொண்டேதான் இருக்கும். இளையோர்கூடத்தின் ஒரு பகுதியில் பரண் அமைக்கப்பட்டுள்ளது. இப்பரணில் இசைக்கருவிகள் ,வெட்டுகத்தி, உணவு சமைத்து உண்பதற்கான பாத்திரங்கள், சமைப்பதற்குத் தேவையான அரிசி, உப்பு, எண்ணை முதலிய பொருட்களும் வைக்கப்பட்டுள்ளன. பகல் நேரங்களில் உணவு தேவையெனில் இளைஞர்கள் தங்களே சமைத்துக் கொள்கின்றனர். சிறுவர்கள் தவிர அனைத்து ஆண்களும் உணவு சமைக்கக் கற்றுக்கொள்கின்றனர். ஒரு வாயில் மட்டுமே கொண்ட இளையோர்கூடங்களின் முற்றம் பரந்து காணப்படுகின்றது. சில குடிகளில் கூடத்தின் வெளியே வாயிலின் இருப்புறமும் திண்ணை அமைக்கப்பட்டுள்ளது. திண்ணையில் தேவையான அளவு

விறகுகள் அடுக்கி வைக்கப்பட்டுள்ளன. ஒருசில குடிகளில் கூடத்தின் பக்கவாட்டிலோ, பின்புறமோ இட வசதியைப் பொறுத்து விறகுகளை அடுக்கி வைத்துள்ளனர். வேலை இல்லாத நேரங்களில் தேவையான விறகுகளை சேகரித்துக் கொண்டு வந்து சேமித்து வைக்கின்றனர். சில குடிகளில் ஆண்கள் கூடங்களில் கூடத்தின் நடுப்பகுதியில் நெருப்பிடுவதற்கு ஏதுவாக இடம் விட்டு சுற்றிலும் மூங்கில் கழிகளால் பரந்த மேடை போன்று அமைத்துள்ளனர். இம்மேடை கட்டிலின் அமைப்பு போன்று அனைவரும் உறங்குவதற்கு வசதியாக உள்ளது.

குடிகளில் அமைந்துள்ள இளையோர்கூடங்களின் முற்றங்களின் தான், குடி சார்ந்த பொதுக்கூட்டங்கள், விழா மற்றும் சடங்குகள்சார்ந்த கொண்டாட்டங்கள் அனைத்தும் நடைபெறுகின்றன. பொங்கல், சித்திரை முதல் நாள் போன்ற விழாக்க்களைக் குடிக் கோவிலில் பூசை செய்து வணங்கும் இவர்கள் நடனம், கும்மி போன்ற ஆட்டங்களை இளையோர்கூடங்களின் முற்றங்களில் நிகழ்த்துகின்றனர். சமனற்ற மலைச் சரிவுகளில் வாழும் முதுவர்கள் குடிக்கோயில்கள் வீடுகள் அமைந்திருக்கும் பகுதியிலிருந்து உயரமான இடங்களில் அமைத்திருப்பதும் இதற்கு ஒரு காரணம் எனலாம். பெரும்பாலும் இரவு நேரங்களில்தான்கலை நிகழ்ச்சிகளை நடத்துகின்றனர். எனவே இளையோர்கூடங்கள் ஊர்ப்பொது மன்றங்களாச் செயல்படுகின்றன.



‘இனக்குழுச் சமூக, அரசியல், பண்பாட்டு நிகழ்வுகள் நடைபெற்ற முக்கிய சமூகப் பொதுவெளியாகத் திகழ்ந்தது மன்றம்’ (தனஞ்செயன் 2014). நிகழ்வுகளின் போது அனைவருக்கும் தேவையான தேநீர் மற்றும் உண்ணக் கிழங்குகள் ஆகியவற்றை இங்கேயே சமைத்துக் கொள்வர்.

## இளையோர் கூடங்களில் தங்குவதற்கான விதிமுறைகள்

முதுவர் இன மக்களின் இளையோர்கூடங்களில் ஐந்து வயதிற்கு மேற்பட்ட குழந்தைகளும் இளைஞர்களும் தங்குவர். ஐந்து வயதிற்கு மேற்பட்ட குழந்தைகள் பெற்றோருடன் இரவு தங்குவதற்கும் உறங்குவதற்கும் இவர்கள் அனுமதிப்பதில்லை. குழந்தைகள் இளையோர்கூடங்களில் தங்க வேண்டும் என்பதற்கு பெற்றோர்கள் அவர்களை தயார் செய்து விடுவர். திருமணம் ஆகும்வரை இவர்கள் இளையோர்கூடங்களில் தங்குவர். இத்தன்மை ஒரு கட்டுப்பாடான ஒழுக்கமுறைக்கு வழிவகுக்கின்றது எனலாம். கோந்த் பழங்குடி மக்களின் இளையோர்கூடங்களிலும் இம்முறையே பின்பற்றப்படுகின்றது (பக்தவத்சலபாரதி 2014). இளையோர்கூடங்களில் தங்குவதால் குழந்தைப்பருவம் முதல் தம்முடைய வேலைகளைத் தாமே செய்து கொள்வதோடு சமூகத்திற்கான பொது வேலைகளையும் மூத்தோர் சொல்படி பகிர்ந்து செய்ய வேண்டும் என்ற பொது நல உணர்வினையும் ஒற்றுமையையும் இவர்களிடையே உருவாக்குகின்றது.

## விருந்தினர் தங்குமிடம்

வெளியிலிருந்து குடிக்கு வரும் விருந்தினர் அனைவரையும் மகிழ்வுடன் உபசரிக்கும் பண்பினர் முதுவர் பழங்குடி மக்கள். இவர்தம் குடிக்கு வரும் விருந்தினர் தங்குமிடமாக அமைவதும் இளையோர்கூடங்களே. பிற குடிகளிலிருந்து வரும் ஆண் உறவினர்கள் இரவு தங்க நேர்ந்தால் ஆண்கள் கூடங்களிலும் பெண் உறவினர்கள் பெண்கள் கூடங்களிலும் தங்குவர். குடிக்கு வரும் விருந்தினர் முதுவர் அல்லாத வெளி ஆட்களாக இருப்பின் முதலில் குடி மூப்பனைக் காணவேண்டும் (மூப்பன் என்பவர் அக்குடியின் தலைவர்). மூப்பன் அவரை வரவேற்று உபசரிப்பதோடு விருந்தினர் வருகையை குடியிலுள்ள அனைவருக்கும் அறிவிக்கும் தன்மையில் ‘ஒரமரகோ’ என்று கூவுவார். இவ்வாறு அறிவிப்பதால் இரவு உணவு வேளையில் அனைவரது வீட்டிலிருந்தும் விருந்தினருக்கான உணவு கொடுக்கப்படும். ஒரு சிறுவன் தட்டுடன் அனைத்து வீடுகளுக்கும் சென்று ஒரு பங்கு (சிறிதளவு) உணவினை வாங்கிவந்து விருந்தினர்க்குக் கொடுப்பான். வாங்கிவந்த உணவு மீதமிருப்பின் கூடத்திலுள்ள அனைவரும் ஆளுக்கு ஒரு கவளம் எடுத்து உண்பர். விருந்தினர் எத்தனை நாட்கள் தங்கினாலும் இளையோர்கூடத்தில் தான் தங்கவேண்டும். விருந்தோம்பலில் தலைசிறந்து விளங்கும் முதுவர்கள் குடிக்குச் செல்லும் ஒருவரும் பசியோடு இருக்கக்கூடாது, பசியோடு திரும்புவதில்லை.

## இளையோர் கூடங்களின் செயல்பாடுகள்

குறிஞ்சி நிலத்தை வாழ்விடமாகக் கொண்ட பழங்குடிச் சமூகங்களின் வாழ்வில் வேட்டையாடுதல், காடுபடு பொருட்களைச் சேகரித்தல், காட்டெரிப்பு அல்லது இடமாற்று வேளாண்மை, பாதுகாப்பு என அனைத்துமே சமூகக்கூட்டு நிகழ்வாக இயங்கும் பான்மையது. இச்செயல்பாடுகளின் வெற்றிக்குத் துணையாவதும் இக்கூட்டு முயற்சியே. இத்தகைய ஒருமித்த செயல்களுக்கு அடித்தளமாக அமைவது இளையோர்கூடங்களின் இருப்பும், செயல்பாடுகளும்.

இளைஞர்கள், இளைஞிகள் தங்களது சமூகப் பண்பாட்டு நெறிமுறைகளிலிருந்து வழிமாறிச் செல்லாமல் இருக்க இந்த இளையோர்கூடங்கள் அமைப்பு முக்கியப் பங்காற்றுகிறது. முதுவர் இன மக்களின் இளையோர்கூடங்கள் தங்குமிடமாக மட்டுமே அல்லாமல் வாழ்க்கைக் கல்வியைக் கற்றுத் தரும் இடமாகவும் அமைந்துள்ளன. இளையோர்கூடங்களில் சிறுவர், சிறுமியர் கல்வி, தொழில், ஆடல், பாடல், பழக்கவழக்கங்கள், மதிப்பீடுகள், விழுமியங்கள், சமையல், மற்றும் வீட்டு வேலைகள் ஆகியவற்றைக் கற்றுக்கொள்வதோடு பாதுகாப்பையும் பெறுகின்றனர்.

**கல்வி**

முதுவர் இன மக்களில் ஒரு சிலரே பள்ளி மற்றும் கல்லூரிப் படிப்பு முடித்துள்ளனர். இயல்பாகவே ஆண்கள் அனைவரும் எழுதவும் படிக்கவும் தெரிந்தவர்களாக இருப்பினும், இவர்கள் கல்விக்கூடம் சென்று கற்றவர்கள் அல்லர். மலைகளில் வாழ்வதாலும் வெளியிடங்களில் சென்று தங்கி கல்வி கற்க வேண்டியிருப்பதாலும் பொதுவாக முதுவர் பழங்குடிக் குழந்தைகள் கல்விக்கூடம் செல்வதை விரும்புவதில்லை. ஆனால் மாலை நேரங்களிலும் ஓய்வு நேரங்களிலும் எழுதப்படிக்கத் தெரிந்தவர்கள் மற்றவர்களுக்கு எழுதப் படிக்கக் கற்றுத்தருகின்றனர். இதனால் அனைவரும் எழுதவும் படிக்கவும் தெரிந்தவர்களாகவே உள்ளனர். அண்மைக்காலங்களில் குடிக்கு அருகில் ஆரம்பப் பள்ளிகள் அமைந்திருக்கும் காரணத்தால் அங்கு சென்று கற்க பலர் விரும்புகின்றனர். இடுக்கி மாவட்ட முதுவர் குழந்தைகள் சிலர் அரசால் நடத்தப்படும் உண்டுஉறைவிடப் பள்ளிகளில் தங்கிப் பயில்கின்றனர். எனினும் சென்ற தலைமுறைக்குக் கல்விக்கூடமாக விளங்கியவை இந்த இளையோர்கூடங்களே எனில் மிகையன்று.

## தொழில்

வேளாண்மையே முதுவர்களின் அடிப்படைத் வாழ்வாதாரமாகும். கடந்த காலங்களில் காட்டெரிப்பு வேளாண்மையும், காடுகளில் காடுபடு பொருட்களைச் சேகரித்தலும் இவர்களது தொழில்களாக அமைந்தன. வன விலங்கு வேட்டை 1971ஆம் ஆண்டு வனச்சட்டம் நடைமுறைக்கு வந்த பிறகு அரசாங்கத்தால் தடை செய்யப்பட்டது. தற்போது தமக்கென அளிக்கப்பட்ட நிலங்களில் வேளாண்மை செய்வதோடு, காடுபடு பொருட்களைச் சேகரிப்பாதை மட்டுமே தொழிலாகக் கொண்டிருக்கின்றனர். காட்டெரிப்பு வேளாண்மை செய்த மக்களைக் கானக் குறவர் (நற்றிணை, பாடல் எண் 102), குன்றக் குறவர் (புறநானூறு பாடல் எண்231), புனக்குறவன் (புறநானூறு பாடல் எண் 231) சிறுகுடிக் கானவன் (அகநானூறு பாடல் எண் 152) என்று சங்க இலக்கியங்கள் பலவாறு பதிவு செய்கின்றன. முதுவர், மலசர், மலைமலசர் மற்றும் இருளர் பழங்குடி மக்களிடம் காட்டெரிப்பு வேளாண்மை இன்றும் இடம் பெற்றுள்ளமை கவனிக்கத்தக்கது. காட்டினை அழித்து நெருப்பிட்டு நிலம் பக்குவமடைந்தபின் கொத்துக்காடு முறையில் விதை விதைக்கின்றனர். மரங்கள் நிறைந்த மலைச்சரிவுகளில் அனைவரும் ஒன்றாகக் கூடி குற்றிச் செடிகளை வெட்டி, காய்ந்தபின் அவற்றை நெருப்பிட்டு எரித்து ஒவ்வொரு வீட்டினரும் தமக்கென தனிதனியாக சிறுபகுதியை எடுத்துக்கொண்டு பயிர் செய்கின்றனர். இவ்வாறு கூட்டு முயற்சியும் உடல் உழைப்பும் கொண்டு நிலத்தைப் பதப்படுத்தி வேளாண்மை செய்கின்றனர். அதுபோன்றே பயிர்க்காவலுக்கும் பலர் ஒன்று கூடிச் செல்கின்றனர். பகலில் பெண்களும் இரவில் ஆண்களும் காவல் காக்கின்றனர். மேலும் உணவு, பொருளாதாரத் தேவையை நிறைவுசெய்ய தேன், கிழங்கு, கீரை முதலிய காடுபடு பொருட்களைச் சேகரிப்பதிலும் இவர்கள் ஒன்றிணைந்து செயல்படுவதும் இங்கு குறிப்பிடத்தக்கது. ஒன்றாக உண்டு, ஒன்றாக உறங்கி வாழும் இவர்களுக்கு ஒன்றிணைந்து வேளாண்மை செய்வதிலும், காடுபடு பொருட்களைச்சேகரிப்பதிலும் ஒற்றுமையாகச் செயல்படமுடிகின்றது.

### பகிர்ந்து உண்ணுதல்

இனக்குழு சமுதாய வாழ்வை மரபாக மேற்கொண்டிருக்கும் பழங்குடி மக்களிடம் பகிர்ந்து உண்ணுதல் என்பது அடிப்படைப் பண்பாக அமைந்துள்ளது. முதுவர் இனமக்களிடமும் பரிமாற்றமும், மறுபங்கீடு செய்தலும் அடிப்படைப் பண்புகளாக விளங்குகின்றன. இவர்களில் ஒரு குழுவினர் மட்டும் காட்டிற்கு கிழங்கு, தேன், கீரை போன்ற பொருட்களையும் சேகரிக்க சென்றாலும், அல்லது நீர்நிலைகளில் மீன் பிடிக்கச் சென்றாலும் சேகரித்த பொருட்களையும், மீன்களையும் பாகுபாடின்றி குடியிலுள்ள அனைவருக்கும் பகிர்ந்து கொடுக்கின்றனர். வேட்டையை மரபாகக் கொண்டிருந்த சமூகத்தில் பாதீடும், கூட்டாக உண்ணுதலும் இயல்பாகக் காணக்கூடிய ஒன்றாகும். ஒருபடித்தான சமூக அமைப்பில் இத்தகு பண்புகள் இயல்பாகக் காணப்படும் என்று விளக்குகிறார் பக்தவதசல பாரதி (2013). ஒரு வீட்டிலுள்ளவர் உடல் நலக்குறைவாலோ அல்லது வேறு காரணத்தலோ தொழிலுக்குச் செல்லாவிடினும் அவர்கள் பசித்திருக்க வேண்டியதில்லை. அவர்களுக்குரிய பங்கு பகிர்ந்து கொடுக்கப்படும். இப்பண்பு சங்கத் தமிழரின் ‘பாதீடு’ என்னும் பங்கீட்டு முறையைப் பிரதிபலிக்கின்றது. இதனை “தந்துநிறை பாதீடு உண்ட்டாட்டு கொடையென என்று சுட்டுவார் தொல்காப்பியர் ( .... ).

### கூட்டுண்ணுதல்

இனக்குழு சமுதாயப் பண்புகளில் தலையாயது, பொதுவில் வைத்து உண்ணுதல் என்பது. சங்கப் பாடல்கள் இதைக் கூட்டுண்ணுதல் எனக் குறிப்பிடுகின்றன. சீறூர் மன்னர் சமுதாயத்தின் விருந்து பேணும் பண்பும், ஊரொடு தலைவி பசித்திருந்தாள் என்பதும் இக்கூட்டுண்ணுதலின் எச்சங்கள் ஆகும் (மாதையன் 2004). இப்பண்பினை, படைப்புப் பல படைத்து பலரொடு உண்ணும் (புறநானூறு பாடல் எண் 188), உலகுபுகழ்த் திறந்த வாயில் பலரொடு உண்டல் மரீஇயோனே (புறநானூறு பாடல் எண்234) என்று புறநானூறு பதிவு செய்கின்றது. இத்தகைய கூட்டுண்ணுதல் முதுவர் இன மக்களிடம் காணப்படும் சிறப்பியல்பு என்றே கூறலாம். விடிந்ததும் கிழங்கு தோண்ட மற்றும் விளை நிலங்களுக்குச் செல்லும் முதுவர் பழங்குடி மக்கள் இரவு நேரங்களில் மட்டுமே சமைக்கின்றனர்.

சமைத்ததும் ஒரு தட்டு உணவினை இளைஞர்களுக்காக எடுத்துவைப்பர். குடியிலுள்ள இளைஞர்கள் அனைவரும் ஒன்றாக ஒவ்வொரு வீடாகச் சென்று அவர்கள் தரும் உணவை ஆளுக்கு ஒரு கவளம் உண்பர். இவ்வாறே அனைத்து வீடுகளுக்கும் சென்று உணவு உண்பர். உணவிற்குப்பின் இளையோர்கூடங்களுக்குச் உறங்கச் செல்வர். இக்கூட்டுண்ணுதல் வழக்கத்தினால் வீடற்ற அல்லது வீட்டில் உணவு சமைக்காத குழந்தைகளுக்கும் உணவு கிடைக்கின்றது. குடியில் பசியோடு யாரும் உறங்குவதில்லை. அது மட்டுமன்றி பெற்றோர் இல்லாத குழந்தையாக இருப்பினும் தான் யாருமற்றவர் என்ற உணர்வு தோன்றாமல் அனைவரும் அரவணைத்துச் செல்வர். 1877 இல் ஏற்பட்ட பஞ்சத்தின் போது கைவிடப்பட்டவர்களாக பட்டினியால் வருந்திய நெசவாளர் சாதியினைச் சேர்ந்த சிறுவனையும் சிறுமியையும் இவர்கள் தங்களவர்களாக ஏற்றுக்கொண்டதோடு அவர்கள் வளர்ந்த பின் சாதிக்குரிய எல்லா உரிமைகளும் வழங்கப்பட்டன (Thurston 1909). குடியிலுள்ள இளம் பெண்களும் இம்முறையில் அனைத்து வீடுகளுக்கும் சென்று உணவு உண்பர். தங்கள் வீட்டில் உண்டு வந்தாலும் மற்றவீடுகளிலும் சிறிதளவாவது உண்பது இவர்களது வழக்கம். பொங்கல் போன்ற விழா நாட்களிலும், குடியில் நடைபெறும் விருந்து நாட்களிலும் கூட்டுண்ணுதல் முறையையே முதுவர் இன மக்கள் பின்பற்றுகின்றனர். இரண்டு அல்லது மூன்று இலைகளை ஒன்றாகச் சேர்த்து வைத்து உணவினை விளம்பி நான்கைந்து பேர் இலைகளைச் சுற்றி வட்டமாக அமர்ந்து உண்கின்றனர். ஆண்,பெண் என இருபாலரும் இம்முறையிலேயே உண்பர்.

இளைஞர்கள் மட்டுமல்லாமல் குடியிலுள்ள யார் சென்றாலும் உணவு கொடுத்து உபசரிப்பர். பகல் நேரங்களில் உறவினர் வந்தால் வேகவைத்தக் கிழங்கு, அவல் மற்றும் வாழைப்பழத்தை சொளகு எனப்படும் முறத்தில் வைத்துக் கொடுப்பர். விருந்தினர்க்கான உணவினை இளையோர் கூடங்களுக்குக் கொடுத்து விட்டாலும் விருந்தினர் ஆண் எனில் ஏற்கனவே அறிமுகமானவராக இருந்து வீட்டில் வீட்டுத்தலைவன் இருப்பின் உணவுண்ண அழைப்பர். விருந்தினர் பெண் எனில் உணவு கொடுத்து உபசரிப்பர். இத்தன்மை அறிமுகமற்ற ஆண்களால் ஏற்படும் இன்னல்களைத் தவிர்க்க துணைசெய்கின்றது.

### சமையல் மற்றும் வீட்டு வேலைகள்

முதுவர் பழங்குடி இனத்தைச் சேர்ந்த குழந்தைகள் தம்மைத்தாமே கவனித்துக் கொள்வதோடு இளையோர்கூடங்களில் வீட்டைச் (கூடத்தை) சுத்தம் செய்தல், சமைத்தல் முதலான அனைத்து வீட்டு வேலைகளையும், மற்றும் எவ்வாறு வேலைகளைப் பகிர்ந்து கொள்வது என்பதையும் இங்கு கற்றுக் கொள்கின்றனர். ஆண், பெண் என இருபாலரும் அனைத்து வேலைகளையும் கற்றுக்கொள்ளும் இளையோர்க்கூடங்கள் விளங்குகின்றன. இப்பயிற்சி பருவமடைந்த பின் முழுக்கு வீட்டில் (மாதவிடாய் காலங்களில் பெண்கள் தங்கும் இடம்) தங்கும்போது உதவியாக உள்ளது. முதுவர் பழங்குடி மக்கள் மாதவிலக்கு நாட்களில் பெண்களை முழுக்கு வீடு எனப்படும் தனி வீட்டில் தங்க வைக்கின்றனர்.

முழுக்கு வீட்டில் தங்கியிருக்கும் நாட்களில் அவர்களுக்கான உணவினை அவர்களே சமைத்துக் கொள்ளவேண்டும். குடும்பத்தலைவி முழுக்கு வீட்டில் தங்கும் நாட்களில் வீட்டிலுள்ள சிறிய குழந்தைகளுக்கும் சேர்த்து ஆண்கள் உணவு சமைத்துக் கொள்ள வேண்டும். இளையோர்கூடங்களில் வீட்டைப் பராமரித்தல் மற்றும் சமையல் வேலைகளைக் கற்றுக் கொள்வதால் சிக்கலின்றி இவ்வழக்கம் பின்பற்றப்படுகின்றது.

### கலை

முதுவர் பழங்குடி மக்கள் குடிகளில் இருக்கும் இளையோர்கூடங்கள் அவர்களுடைய கலையை வளர்க்கும் பயிற்சிக்கூடங்கள் எனில் அது மிகையன்று. மாலை நேரங்களிலும் ஓய்வு நேரங்களிலும் இசைக்கருவிகளை இசைப்பதும் இசைக்கேற்ப நடனமாடுவதும் இவர்களது வழக்கம். உறுமி, குழல், தப்பட்டை ஆகிய இசைக்கருவிகளை இசைக்கின்றனர். இளையோர்கூடத்தின் முற்றத்தில் நெருப்பிட்டு நெருப்பினைச் சுற்றி அமர்ந்த வண்ணம் முதியவர்கள் இசைக்க இளைஞர்கள் அனைவரும் நடனமாடுவர். இதுவே இவர்களது முக்கியமான பொழுதுபோக்கு நிகழ்வாகும். குறிப்பாக பொங்கல் விழாவின் போது விழா நடைபெறும்

பத்துநாட்களும் கோமாளி வேடமிட்டு ஆடுவர். கோமாளி வேடமிடும் இளைஞர்கள் விழா நடைபெறும் பத்து நாட்களும் வேடத்துடனேயே காட்சியளிப்பர். விழா நாட்களில் இரவு நேரங்களில் மட்டுமன்றி பகல் வேளைகளிலும் நடனமாடுவர். அவர்களுடைய தெய்வங்களுக்கு செலுத்தும் நேர்ச்சைக்கடனாக கோமாளி வேடமிடுகின்றனர்.



சங்ககாலத் தமிழர் பாணர்களையும், கூத்தர்களையும் போற்றி இசை, கூத்துக் கலைகளை வளர்த்தனர். தொல் சமூகத்தின் பண்பாட்டுக் கூறுகளை இன்றும் தன்னகத்தே கொண்டு விளங்கும் பழங்குடிச் சமுதாயங்களில் ஒன்றான முதுவர் பழங்குடி மக்கள் இசைக்கும் நடனத்திற்கும் மிகவும் முக்கியத்துவம் கொடுப்பவர்களாக உள்ளனர். விழாக்கள் மற்றும் திருமணம் போன்ற மகிழ்வான தருணங்கள் அனைத்திலும் இவர்களது இசையும் ஆட்டமும் இடம்பெறும். ஆண், பெண் என அனைவரும் நடனமாடுவர். ஆண்கள் தனியாகவும் பெண்கள் தனியாகவும் நடனமாடுவர் .ஆண்களும் பெண்களும் இணைந்து நடனமாடுவது அனுமதிக்கப்படுவதில்லை. இசைக்கு ஏற்ப கும்மியடிக்கும் வழக்கமும் இவர்களிடம் காணப்படுகின்றது. பெண்களும் ஆண்களும் என இருபாலரும் தனித்தனியாகக் கும்மியடிக்கின்றனர். ஆண்டு விழாக்களின் போது கூத்து நடத்தும் வழக்கம் இடுக்கி மாவட்டத்து முதுவர்களிடையே இருப்பதாக சீலியா

தோமஸ்பெரும்பனானி (2010) குறிப்பிடுகின்றார். .அதுபோன்றே இவர்களிடையே மயிலாட்டம் ஆடும் வழக்கம் இருப்பதாகவும் அவர் சுட்டுகின்றார்.

**தோழமைக்காரர் உறவு**

முதுவர் பழங்குடி இன மக்களில் இளைஞர்களின் வாழ்வில் முக்கியமான தவிக்கமுடியாத உறவுகள் தோழமைக்காரர்களாவர். இச் சமூகத்தின் நடைமுறைகளான முடிகட்டும் சீர், பூப்புச்சீர், திருமணம் ஆகிய நிகழ்வுகளை முன்னின்று நடத்துபவர்கள் தோழமைக்காரர்கள் என்றழைக்கப்படும் தோழன் ,தோழியரே. ஆண்களுக்குத் தோழனும் பெண்களுக்குத் தோழியும் எப்போதும் உடனிருப்பர். இளையோர்கூடங்களின் நிலைப்பாட்டிற்கு இத்தகைய சடங்கு முறைகளும் காரணமாக அமைகின்றன. குழந்தைகள் பெற்றோரைச் முழுமையாகச் சார்ந்திராமல் தம்மையொத்த வயதினரோடு கூடி அந்தந்தப் பருவங்களை மகிழ்வாகக் கடந்து வருகின்றனர். தொல்காப்பியம் பதிவு செய்யும் பாங்கர்க்கூட்டம், பாங்கியர்க்கூட்டத்தின் செயல்பாடுகளோடு இத்தன்மை ஒப்பு நோக்கத்தக்கது. ஐந்து வயது முதல் திருமணம் வரை ஒரு தட்டில் உண்டு ஒரு பாயில் உறங்கி நாள் முவழுதும் ஒன்றாக இருக்கும் இத்தோழியர் உறவு சங்க இலக்கியம் முன் வைக்கும் தலைவி, தோழி உறவினை பிரபலிக்கின்றது.

**முடிவுரை**

தொன்மைக் கலைகளும் பண்பாட்டுக் கூறுகளும் நலிந்து வரும் இந்நாளில் பழந்தமிழரின் பண்பாட்டின் வாழ்வியல் எச்சங்களாக பல வாழ்வியல் கூறுகளையும் முதுவர் பழங்குடி மக்கள் கொண்டுள்ளனர். காட்டெரிப்பு வேளாண்மை, காடுபடு பொருட்களைச் சேகரித்தல், கூலி வேலை எனக் கலப்புப் பொருளாதாரத்தைக் கொண்டுள்ள இவர்களிடம் காட்டெரிப்பு வேளாண்மை, தினைப்புனம் காவல், காடுபடு பொருட்களைச் சேகரித்தல், வேட்டையாடுதல் போன்ற சங்ககால மக்களின் வாழ்வியல் பதிவுகள் பலவும் இப்பழங்குடி மக்களிடம் நிலைபெற்றுள்ளது. மேலும் பழக்க வழக்கம் மற்றும் பண்பாட்டு நிலைகளில் உறைவிடம், சடங்குகள், பங்கீட்டு உணர்வு,

விருந்தோம்பல், உணவு, குறிப்பாக உணர்த்துதல், பலியிடல், தெய்வம் மற்றும் பேய் பற்றிய நம்பிக்கை, வெறியாட்டு நடத்துதல், கலை உணர்வு, மண நிகழ்வு, நடுகல் வழிபாடு என பழந்தமிழர் வாழ்வியல் கூறுகளைத் தம்மிடத்தே இன்றும் தக்கவைத்துள்ளனர். இசையும் நடனமும் இம்மக்களின் இரு கண்களாக விளங்குகின்றன. காதல் மணம், விதவை மணம், மறுமணம் போன்றவற்றில் ஆண், பெண் இருபாலருக்கும் சம நீதியைப் பின்பற்றுவது இவர்தம் பண்பாட்டு உயர்வினை எடுத்துரைப்பதாக அமைந்துள்ளது. முதுவன் பழங்குடிச் சமூகத்தின் இளந்தாரிமடம் எனப்படும் இளையோர்கூடங்கள், அச்சமூகத்தின் பண்பாட்டு நடைமுறைகள், பழக்கவழக்கங்கள் அவைகள் சார்ந்த மதிப்பீடுகள் ஆகியவற்றை அடுத்தத் தலைமுறைக்குக் கொண்டு செல்கிறது. அவர்களின் சமூகப்பொருளாதாரச் செயல்பாடுகள், நடனம், இசை போன்றவற்றுக்கான திறன், அனுபவம் பெறவும், மேம்படுத்தவும் வழிவகுக்கிறது. அதோடு அச்சமூகத்தின் தனித்துவமான பண்பாட்டுக்கூறுகளையும், வாழ்க்கைமுறையையும் பாதுகாக்கிறது.

## References

*தனஞ்செயன், ஆ. 2014. தமிழில் இலக்கிய மானிடவியல், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை*

*பக்தவத்சலபாரதி 2003. பண்பாட்டு மானிடவியல், அடையாளம், திருச்சி*

*பக்தவத்சலபாரதி 2013. தமிழகப் பழங்குடிகள், அடையாளம், திருச்சி*

*பக்தவத்சலபாரதி 2014. திராவிட மானிடவியல், காலச்சுவடு பதிப்பகம், நாகர்கோவில்*

*மாதையன், பெ 2004. சங்ககால இனக்குழு சமுதாயமும் அரசு உருவாக்கமும், பாவை பப்ளிகேஷன்ஸ், சென்னை*

*புலியூர்கேசிகன் 2010. நற்றிணை, ராம் பிரசுரம், சென்னை*

*சாமிநாதையரவர்கள், உ. வே 2014. புறநானூறு: மூலமும் உறையும். டாக்டர் உ.வே.சாமிநாதையர் நூலகம், சென்னை.*

*செயபால், இரா 2004. அகநானூறு, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட், சென்னை*

*தொல்காப்பியம் பொருள், புறம் 3*

*சீலியா தோமஸ்பெரும்பானானி, டா. 2010. கேரளத்திலே ஆதிவாசிகளுடே ஜீவிதவும் சமஸ்காரவும், கரண்ட் புக்ஸ், கோட்டயம்*

Elwin V 1947. The Muria and their Ghotul, Oxford University Press, London

Thurston, E 1909. Cates and Tribes of India, Government Press, Madras

# சென்னைப் பெருநகர மனிதக்கழிவுநீர் மேலாண்மை: வேர்களிலிருந்து விருட்சம்வரை ஒரு பகுப்பாய்வு

**ந.மீனாட்சிசுந்தரம்***

***கட்டுரைச்சுருக்கம்:*** *மானிடச் சுற்றுச்சூழல் பாதுகாப்பில், கழிவுநீரகற்றல் மேலாண்மை, தினசரி வாழ்வில் நேரடித் தொடர்பினைக் கொண்டிருக்கிறது, பண்டையச் சமூகங்களிலேயே கழிவுநீர் மேலாண்மைகான ஆதாரங்கள் இருப்பினும் இன்றைக்கும் முறையான கழிவுநீரகற்றல் இல்லாததினால், மக்கள் எதிர்கொள்ளும் சுகாதார நலக்கேடு அச்சுறுத்தல்களில் முதன்மையானதாக இருக்கிறது. கழிவுநீர் மேலாண்மை என்பது ஒரு சமூகப் பண்பாட்டுச் செயல்பாடு, ஆனால் நம் சமூகத்தில் அது குறித்த மதிப்பீடுகள், அருவருப்பு மனப்பான்மை மற்றும் பழமைவாதச் சிந்தனைகளோடு இணைக்கப்பட்டிருக்கிறது. மிக நீண்டவரலாற்றினைக் கொண்ட சென்னை மாநகரின் கழிவுநீர் மேலாண்மையில் தொடக்கம் முதல் இன்றுவரை எட்டிய சாதனைகள், கள நிலவர போதாமைகள், எதிர் கொண்ட இடையூறுகள், நேர்செய்ய வேண்டிய சமூக அவமானங்கள், உறுதிசெய்யப்படவேண்டிய மனித உரிமைகள், நீடித்த கழிவுநீர் மேலாண்மைக்கான எதிர்காலத் திட்டங்கள் என அனைத்தையும் விரிவாக கட்டுரை ஆராய்கிறது.*

> *“இயற்கையின் ஒவ்வொருவிதியும் மனிதகுலத்தின் ஆயத்த நிலை சேவகர்களே, முறையாகப் பயன்படுத்தினால் நன்மை, ஆனால் புறக்கணித்தால் அழிவு”*
>
> *-1896 ஆம் ஆண்டு, ஜே. ஏ. ஜோன்ஸ்,மெட்ராஸ் மாகாண சுகாதாரப் பொறியாளர்.*

## முன்னுரை

மானிட வாழ்வியலில், ஓரிடத்தில் வசிப்பதற்கான குடியிருப்புகள் நாடோடிச் சமூகங்களின் தற்காலிக முகாம்களில் தொடங்கி, ஊர்ப்புறங்களில் நிலையான கிராமங்கள் என உருவாகிப் பிறகு அடர்த்திமிக்க மக்கட்தொகை கொண்ட பெருநகரங்களாகப்

* பொறியாளர் / ஒய்வு, சென்னைக்குடிநீர் வாரியம்,
*மின்னஞ்சல்:* selva4meena@gmail.com

பரிணமித்துள்ளன. நமது வசிப்பிடங்களில், உருவாகும், மனிதக்கழிவுகள் அகற்றும் கழிவுநீர் மேலாண்மைப் பணிகள், அன்றிலிருந்து இன்று வரை, நலமிகு நோயற்ற வாழ்வியலை முக்கியக் குறிக்கோளாக கொண்டுள்ளது. எனவே மனித நல வாழ்க்கைக்கு பொருத்தமான கழிவுநீர் மேலாண்மை அமைப்புகள் அவசியமாகின்றன.

பண்டைய மனிதர்கள் வாழ்ந்த தொல்வரலாறுகளைக் கொண்ட மெசபடோமியா மற்றும் சிந்து சமவெளி நாகரிகங்களில் கழிவுநீரகற்றல் உள்கட்டமைப்புகளை உருவாக்கியிருந்தனர் என்பதற்கான தொல்பொருள் ஆதாரங்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. மெசபடோமியா (கி.மு. 4000–3200) மற்றும் சிந்து சமவெளி (கி.மு.3000–2000) நாகரிகங்களின் நகரங்களில் உருவாக்கப்பட்டிருந்த பழமையான கழிவுநீர் கட்டமைப்புகளில், கழிவுநீரை அகற்ற களிமண் குழாய்கள் பயன்படுத்தப்பட்டன.[1]

பண்டைய ரோமில் கி.மு. 6-ஆம் நூற்றாண்டில், உலகின் மிகப் பழமையான கழிவுநீர் அமைப்புகளுள் ஒன்றான 'க்ளோக்கா மாக்ஸிமா' (Cloaca Maxima), தொடக்கத்தில் ஒரு திறந்த கால்வாயாக அமைந்திருந்த இது, நகரத்தின் சதுப்புநிலங்களை டைபர் நதியில் வடியச் செய்வதில் முக்கியப் பங்காற்றியது அங்கு சாக்கடைகளின் தேவதை "குளோசினா" (Cloacina)[2] சிலையும், வழிபாடும் இருந்தன. இவை ரோமானிய பொறியியல்நுட்பத்தினையும், நகரத் திட்டமிடல் மற்றும் கழிவுநீர் மேலாண்மையில் அவர்களின் திறனையும் வெளிப்படுத்தின.


---

[1] https://www.heritageuniversityofkerala.com/JournalPDF/Volume6/36.pdf

[2] குளோசினா (Cloacina): பண்டைய ரோமின், நலம் மற்றும் தூய்மைப் பேணுவதற்கு, கழிவுநீர்க்கால்வாய்கள் தேவை இருந்தது. மிகப் பழமையான பொறியியல் சாதனை குளோகா மாக்சிமா, நகர கழிவுநீரை டைபர் நதியில் வெளியேற்றியது. இக்கட்டமைப்பின் செயல்பாட்டை உறுதி செய்வதற்காக, ரோமானியர்கள் கழிவுநீர்க் கால்வாய்கள், வடிகால்கள் மற்றும் பெரும் கழிவுநீர்க் கால்வாய் அமைப்பான குளோகா மாக்சிமாவின் தெய்வமான குளோசினாவை நாடினர். ரோமானியர்கள், சமய நம்பிக்கைகளில் இக்கட்டமைப்பின் வெற்றி, பொறியியலை மட்டுமல்ல, தெய்வீக அருளையும் சார்ந்தது என நம்பினர். தொடர்ந்த கழிவுநீர்க் கால்வாய்கள் இயக்கத்திற்கும், நகர மக்களின் நோய்களைத் தடுப்பதற்கு மற்றும், பொது சுகாதாரத்தைப் பராமரிக்க சாக்கடைகளின் தேவதை குளோசினா வழிபடப்பட்டாள். www.sewerhisory.org









தமிழ்நாட்டில், தொல்லியல் அகழ்வாராய்ச்சியில், 2,500 ஆண்டுகளுக்கு முந்தைய சுகாதார அமைப்புகள், நவீன சுகாதார வசதிகள் கொண்ட குடியிருப்பு வளாகங்கள் கீழடியில் (கி.மு.ஆறாம் நூற்றாண்டு), இருந்தாக கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. சுடுமண் வளையக்கிணறுகள், ஒன்றுடன் ஒன்று இணைக்கப்பட்ட மூடிய வடிகால்குழாய்கள் மற்றும் செங்கற்களால் கட்டப்பட்ட கழிவுநீர்க் கட்டமைப்புகள் இவ்வாராய்ச்சியின் முக்கியக் கண்டுபிடிப்புகளாகக் கருதப்படுகிறது. பல கட்ட கீழடி அகழ்வாராய்ச்சியில்,

கழிவுநீர் வழித்தடப் பாதைக்கு பயன்பட்ட சுடுமண் குழாய்கள் கண்டறியப்பட்டிருக்கின்றன. இவை பண்டைய தமிழ் மக்களின் நகர நாகரிகத்தில் நிலவிய அன்றைய சூழலில் நவீன தொழில் நுட்பங்களுடன் கூடிய நீர் மேலாண்மை மற்றும் கழிவுநீர் அகற்றும் திறன்மிகு முறைகளை நிரூபிக்கின்றன.





கீழடி அகழ்வாராய்ச்சி குடியிருப்பு வளாகங்கள், சுடுமண் குழாய்கள், வளையக் கிணறு மேலும் ஹரப்பா நாகரிகத்தைப் போலவே, பண்டைய கீழடியின் தமிழர் சுகாதாரம் மற்றும் நகரத் திட்டமிடல் குறித்த மேம்பட்ட அறிவைப் பெற்றிருந்தனர் என இக்கண்டுபிடிப்புகள் சுட்டிக்காட்டுகின்றன. [3]

**பண்டையத்தமிழரின் நலவாழ்வியல்**

தமிழறிஞர் தேவநேய பாவாணர் “பண்டை தமிழ் நாகரிகமும் பண்பாடும் “ நூலில் பண்டைத் தமிழர் துப்புரவு குறித்து கூறுவன: “பண்டை தமிழ் மக்கள் காலையில் எழுந்தவுடன், ஊருக்கு வெளியே சென்று காலைக்கடன் கழித்து, ஆற்றில் அல்லது கால்வாயில் அல்லது குளத்தில் கால் (குண்டி எனும் குதவாய் கழுவுதல்) கழுவுவர். ஆற்றுக்கு, கால்வாய்க்கு, குளத்திற்கு, கொல்லைக்கு போதல், வெளிக்கு போதல்” எனும் உலக வழக்கு இதையுணர்த்தும்.

[3] http://www.tnarch.gov.in/keeladi

இத்தகைய வழக்கும் ஒன்றுக்கு போதல், இரண்டுக்கு போதல் எனும் இடக்கரடக்கலும் தமிழர் நாகரிகத்தை காட்டும்."[4]

சிவராமகிருஷ்ணன் கழிவுநீர் வடிகால்கள் குறித்து கூறுவது பின்வருவன: "சங்க இலக்கியங்களில் பூமிக்கடியில் பதிக்கப்பட்ட நன்னீர் குழாய்கள் மற்றும் கழிவு நீரினை வெளியேற்றுகிற குழாய்கள் பற்றிய பதிவுகள் காணப்படுகின்றன. 1800 ஆண்டுகளுக்கு முன் மதுரை நகரில் தரையடி குழாய்கள் பற்றி பரிபாடல் '' நெடுமால் சுருங்கை நடுவழிப் போந்து..'[5] என்று குறிப்பிடுகிறது. எனவே நீண்ட சுரங்கம் போன்று பூமிக்கடியில் பதிக்கப்பட்ட குழாய்கள் மூலம் கழிவுநீர் கொண்டுச் செல்லப்பட்டதை இதனால் அறியமுடிகிறது. இத்தொழில் நுட்பம் தற்கால பாதாள கழிவு நீர் குழாய் அமைப்பிற்கு ஒப்பானது, அதன் முன்னோடித் தொழில்நுட்பம் எனக் கருத வாய்ப்பிருக்கிறது.

பண்டை தமிழிலக்கியங்களில் நீரின் தேவை, சிறப்பு, மாசடைதல் (Pollution), மேலாண்மை குறித்து நிறைய தரவுகள் உள்ளன. ஆனால் கழிவுநீர், கழிவுநீரகற்றல் மேலாண்மை குறித்து மேலே குறிப்பிட்ட பரிபாடலில் உள்ளது போன்று சொற்பத் தகவல்களே நீண்டத் தேடலில் கிடைத்துள்ளன. மேலும் இது குறித்த புரிதலுக்கு விரிவான ஆய்வுகள் மற்றும் தகவல்கள் சேகரிப்பு அவசியத் தேவை.

பழந்தமிழர் வாழ்வியலில், இயற்கைச் சார்ந்த தீர்வாக, மறுபயன்பாடு முறையில், கழிவு நீர் சுத்திகரிக்கப்பட்டு தோட்டப்பாசனத்திற்குப் பயன்படுத்தப்பட்டது. அன்றைய சூழலில், திறந்தவெளிகள், அதிகமிருந்த நிலையில், மட்கும் கழிவு மேலாண்மையினால் மனிதக்கழிவுகளை மண்ணோடு மட்கச்செய்து இயற்கை உரமாக்கப்பட்டன. மனித வாழ்க்கை மற்றும் சுற்றுச்சூழல் பாதிப்படையாத வகையில், அன்றைய பழந்தமிழர், கழிவுநீர் மேலாண்மை முறை அமைந்திருந்தது.

---

[4] ஞா. தேவநேய பாவாணர் "பண்டை தமிழ் நாகரிகமும் பண்பாடும் "https://tamildigitallibrary.in/

[5] https://drsivaramakrishnan.blogspot.com/2017/05/blog-post_

*நாம் அனைவரும் எதிர்கொள்கிற மல-மூத்திர அடக்கல், ஒரு அழுத்தம் (மனஇறுக்கம்), அழுகை போன்றது தான், மலம்-மூத்திரம் வெளியேற்றாது அடக்கி வைத்துக்கொண்டே இருந்தால், நமது உடல் மற்றும் மனநிலை பாதிக்கப்படும். மல-மூத்திரம் கழிப்பதில் கிடைக்கும் நிம்மதிதான், “உலகில் மிகப்பெரிய மகிழ்ச்சி” என்பதை அக்பருக்கு பீர்பால் உணர்த்திய குறுங்கதை மூலம் அறியலாம்:*

*அக்பர் ஒருமுறை பீர்பாலிடம், “இந்த உலகிலே மிகப்பெரிய மகிழ்ச்சி எது?” என்று கேட்டார். பீர்பால் சற்றும் யோசிக்காமல், “மலம்-மூத்திரம் கழிப்பதுதான் மகா பிரபஞ்ச மகிழ்ச்சி” என பதிலளித்தார். அக்பருக்கு இந்த பதில் அருவருப்பாகவும் கோபத்தை உண்டாக்கக்கூடியதுமாக இருந்தது. பீர்பால் தன்னை கேலி செய்வதாக நினைத்த அக்பர், “நீ, இதை நிரூபிக்க வேண்டும், இல்லையெனில் உனக்கு தண்டனை உறுதி” என்றார்.*

*பீர்பால் ஒரு பெரிய விருந்துக்கு ஏற்பாடு செய்து அக்பரை அழைத்தார்.அக்பர் வயிறு முட்ட அறுசுவை உணவுகளை உண்டார். பிறகு பீர்பால் அக்பரை ஒரு அழகான அறைக்கு அழைத்துச் சென்று பேசிக்கொண்டிருந்தார். பீர்பால் ரகசியமாக நண்பரிடம் அந்த அறையின் அனைத்து கதவுகளையும் வெளிப்பக்கமாக பூட்டச் சொன்னார். சிறிது நேரத்தில் அக்பருக்கு மலம் கழிக்க வேண்டும் என்ற உணர்வு ஏற்பட, அவர் வெளியே செல்ல முயன்றபோது கதவுகள் பூட்டப்பட்டிருந்தன.*

*பீர்பாலிடம் கதவைத் திறக்கச் சொன்னார், ஆனால் பீர்பால் ஏதோ ஒரு காரணத்தைச் சொல்லி நேரத்தைக் கடத்தினார். நேரம் செல்லச் செல்ல, அக்பரின் அவதி அதிகரித்து, அவரால் உட்காரவோ, நிற்கவோ முடியாமல் வயிறு பிசைந்தது. “பீர்பால், இப்போதே கதவைத் திற, இல்லையெனில் உன்னை கொன்றுவிடுவேன், எனக்கு உயிர் போவது போன்ற வேதனை இருக்கிறது” என்று கதறினார் அக்பர். பின்னர் பீர்பால் உடனே கதவைத் திறந்தார்.*

*அக்பர் மின்னல் வேகத்தில் சென்று மலம், மூத்திரம் கழித்துவிட்டுத் திரும்பினார். அப்போது அவர் முகம் மிகவும் அமைதியாகவும்,*

பெரிய நிம்மதியுடனும் காணப்பட்டது. அப்போது பீர்பால் சிரித்துக்கொண்டே கேட்டார், "மன்னா, இப்போது சொல்லுங்கள்? நீங்கள் உண்ட அந்த அறுசுவை உணவில் இருந்த மகிழ்ச்சியை விட, இப்போது அந்த பாரத்தை வெளியேற்றியதில் கிடைத்த நிம்மதி பெரியதுதானே?" அக்பர் உண்மையை உணர்ந்தார். எவ்வளவு செல்வம் இருந்தாலும், ஒரு மனிதன் தன் உடலின் கழிவை வெளியேற்ற முடியாமல் போனால், அந்த வேதனைக்கு முன் வேறு எந்த இன்பமும் ஈடாகாது என்பதை அக்பர் ஒப்புக்கொண்டார். எனவே நமது மானிட வாழ்வியலில் நாள்தோறும் மலம் மூத்திரம் கழித்தல் தவிர்க்கமுடியாத ஓர் அடிப்படை செயலாகும்.

## கழிவுநீர் மேலாண்மை

கழிவுநீர் மேலாண்மை குறித்து, மனிதக்கழிவுநீர், அதன் கருப்புநிறம், அழுகல், நச்சு துர்நாற்றம், அகற்றல் முறை மற்றும் அதன் அறிவியல் ஆகியவற்றைப் புரிந்து கொள்வது, அவசியமான ஒன்றாகும். மனித கழிவுநீர் (Sewage), மனித கழிவு, திரவ மற்றும் திட (திண்ம) கழிவுகள் என இருவகைப்படும், மனிதர்களால் பயன்பாட்டிற்கு பிறகு உருவாகும், திரவக்கழிவு, கழிவு நீரெனவும் (Sewage), திடக்கழிவுகள் குப்பை (Solid Waste) எனவும் அழைக்கப்படுகின்றன. இது வசிப்பிடங்களில் உள்ள கைகழுவும் தொட்டிகள்,குளியலறை கழிவுநீர் மற்றும் துணி துவைப்பது, சமையலறை திரவக்கழிவுகள் இன்னபிற பயன்படுத்திய திரவக்கழிவுகள் ஆகும். இதில் மனித கழிவு நீர், என்பது பழுப்புநீர் (blackwater) மற்றும் சாம்பல் நீர் (greywater) சேர்ந்த, பயன்படுத்திய நீராகும் (used water). பழுப்புநீர் அல்லது சாக்கடை நீர் என்பது மனித உணவு செரிமான அமைப்பின் திரவ கழிவுகளான மலம் , சிறுநீர் , குண்டி-குதவாய்-கழுவிய நீர் மற்றும் கழிவறைக் காகிதங்கள் அடங்கிய நீராகும். கழிவுநீரில் ஆக்சிஜன் குறையும்போது , அதன் கரிமப் பொருட்கள் காற்றில்லா முறை சிதைவடைவதால் கழிவுநீர் கருப்பாகவும் அழுகியதாகவும் (Black and Putrefied) மாறுகிறது. கழிவுநீரில் ஆக்சிஜன் இல்லா நிலையில் அதன் கரிமக் கழிவுகளின் பாக்டீரியாக்களும், நுண்ணுயிரிகளும் சிதைக்கப்படுவதினால் வெளிவரும் ஹைட்ரஜன்சல்பைடு, அம்மோனியா மற்றும் மீத்தேன் வாயுக்களின் கலவையினால் நச்சு துர்நாற்றம் உருவாகிறது.

ஆங்கிலேய காலனி ஆட்சிக் கால மெட்ராஸ் மாகாணத்தில் மனித கழிவுகளை , மலம் அள்ளுதலை மனித கழிவுகள் (Night Soil) சேகரிப்பு என்றும், அதன் சேமிக்குமிடங்களை, மல கழிவுகிடங்கு (Night Soil Depot) என பெயரிட்டு அழைத்தனர். மனித கழிவுகளை கையால் துப்புரவு செய்யும் தொழிலாளி (Manual Scavenger) ஆவார்.

கழிவுநீரகற்றல் அமைப்பு (Sewerage System) என்பது, கழிவுநீரோட்டத்தினை, குழாய்வலைப்பின்னல் பதித்து, ஆள்நுழைவுத்தொட்டிகள் கட்டமைத்து, பம்பிங் நிலையங்களில் சேகரித்து, நீரேற்றி, செலுத்தி, சுத்திகரிப்பு நிலையங்கள் சென்றடையும் தொழில்நுட்ப திறன்மிகு உள்கட்டமைப்பு ஆகும். கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் (Sewage Treatment Plant) வசிப்பிட மக்களின் சேகரித்த கழிவுநீரினை, இயற்பியல், வேதியியல், மற்றும் உயிரியல் செயல்முறைகளைப் பயன்படுத்தி அசுத்தங்களை அகற்றி, தூய்மையான, மீண்டும் பயன்படுத்தக்கூடிய நீரை மீட்டெடுக்க, உதவும் நவீன உள்கட்டமைப்பு. கழிவுநீர்ப் பண்ணை (Sewage Farm) என்பது, கழிவுநீரை அகற்றுவதற்கும், சுத்திகரிப்பதற்கும், விவசாயப் பயன்பாட்டிற்கான ஒரு நிலப்பரப்பாகும். இது ஒரு வகை இயற்கை சுத்திகரிப்பு தீர்வு முறை (Nature Based Solution) ஆகும்.

## உலக மக்கள் தொகை பெருக்கம், நகரமயமாக்கல், கழிவுநீர்ப்பிரச்சினை

ஐக்கிய நாடுகள் அவை, தற்போது உலகில் 8.2 பில்லியன் மக்கள் தொகை உள்ளனர் என்றும், பெருகிவரும் கட்டற்ற நகரமயமாக்களினால் 55 – 56 விழுக்காடு, நகரங்களில் வசிக்கின்றனர் எனத் தெரிவித்துள்ளது. இது 2050 ஆம் ஆண்டில் 68 விழுக்காடு அதிகரிக்கும் எனக் கணிக்கப்பட்டுள்ளது (ஐ.நா.பொருளாதார மற்றும் சமூக விவகாரத் துறை). கிராமங்களிலிருந்து நகரங்களுக்கு, மக்கள் இடம்பெயர்தல் மற்றும் இனப்பெருக்கத்தினால் மக்கள் தொகை அதிகரிப்பு, இவற்றினால் மக்கள்தொகை எண்ணிக்கை கூடி நகரங்களில் புதிய பகுதிகள் உருவாகி நகரங்கள் பெருநகரங்களாகின்றன. இதன் விளைவாக, உள்கட்டமைப்பு தேவைகள், வீட்டுவசதி, குடி நீர், கழிவுநீரகற்றல் ஆகியவற்றில் பற்றாக்குறைகள், நெருக்கடிகள் ஏற்படுகின்றன.

மக்கட்தொகைப் பெருக்கத்தால் வெளியேறுகிற கழிவுநீர், ஏறத்தாழ 80 விழுக்காட்டிற்கு மேல், சுத்திகரிக்கப்படாமல், அருகில் உள்ள ஆறுகள், ஏரிகள், கடலில் கலப்பது, அல்லது வசிப்பிடங்களில் தேங்குவது இவற்றால், மாசுபடுவதோடல்லாமல், நச்சுச்சூழல், உயிரிழப்புகள் மற்றும் சுகாதாரக் கேடுகள் உருவாகின்றன. மேலும் தற்போது காலநிலை மாற்றம் இப்பிரச்சினையை தீவிரமடையச் செய்வதால், உலகின் 425 கோடி மக்கள் பாதுகாப்பான சுகாதார வசதிகள் இன்றி நோயுற்று உயிரிழக்கின்றனர் (Stephanie 2021).

**இந்திய மற்றும் தமிழ் நாட்டுச் சூழலில் கழிவுநீர்ப் பிரச்சினை**

இந்தியாவில் நதிகள், ஆறுகள், ஏரிகள், நகரங்கள், பெருநகரங்களின் புறநகர்ப்பகுதிகள், மக்களின் வசிப்பிடங்கள் ஆகியன சுத்திகரிக்கப்படாத, பகுதியளவு சுத்திகரித்த கழிவுநீர், மற்றும் தொழிற்சாலைக் கழிவுநீர் வெளியேற்றத்தினால் பெருமளவில் மாசு அடைகின்றன. இந்திய அரசியலமைப்பு, 74 வது திருத்தச்சட்டத்தின்படி, பொது சுகாதாரம், தூய்மைப் பணி, தூய்மை மற்றும் திடக்கழிவு மேலாண்மை ஆகியவை, மாநில நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் பணிகளில் ஒன்றாகும். அதில், தூய்மைப் பணி என்பது "மனிதக் கழிவுகளைப் பாதுகாப்பாகக் கையாளுதல், அவற்றின் பாதுகாப்பான சேகரிப்பு, சுத்திகரிப்பு, அகற்றுதல் மற்றும் அதனுடன் தொடர்புடைய சுகாதார நடைமுறைகள் உட்பட" என வரையறுக்கிறது.

2021 ஆம் ஆண்டு, மத்திய மாசுக் கட்டுப்பாட்டுவாரிய (Central Pollution Control Board) அறிக்கையின்படி, இந்திய நகரங்கள், மற்றும், தமிழக நகரங்களின், நாளொன்றுக்கு உருவாகும் கழிவுநீர், அதன் சுத்திகரிப்பு திறன் மற்றும் பற்றாக்குறை குறித்து கணக்கீடு கீழேயுள்ள அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ளது.

| கணக்கெடுப்பு வகை | நாளொன்றுக்கு மில்லியன் லிட்டர் (MLD) | | |
|---|---|---|---|
| | உருவாகும் கழிவுநீரின் அளவு | நிறுவப்பட்ட சுத்திகரிப்புத் திறன் | பற்றாக்குறை திறன் |
| இந்திய நகரங்கள் | *72,368* | *31,841* | *40527 (~ 56 %)* |
| தமிழக நகரங்கள் | *6421* | *2519* | *3902 (~61 %)* |

*ஆதாரம்:* https://sansad.in/getFile/annex/267/AU3741_RWtoRz.pdf?source=pqars

இந்த புள்ளிவிவரம், இந்திய நகரங்களின், கழிவுநீர் சுத்திகரிப்பில் குறிப்பிடத்தக்க பெரும் இடைவெளி இருப்பதைக்காட்டுகிறது. அது போல, தமிழ் நாட்டில் பல நகரங்களில் போதுமான கழிவுநீர் மேலாண்மை உள்கட்டமைப்புகள் இல்லாத நிலையே நிலவுகிறது, தற்போது பற்றாக்குறை நீக்கி திறன் மேம்படுத்த, மேலும் கட்டமைப்புகள் அதிகரிக்க பல திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

**தூய்மை மற்றும் அபாயம்**

*1966* ஆம் ஆண்டில் வெளிவந்த பிரிட்டிஷ் மானிடவியலாளர் மேரி டக்ளஸ் (Mary Douglas) எழுதிய, பரவலாக கவனத்தை ஈர்த்த 'தூய்மை மற்றும் அபாயம்' (Purity and Danger) எனும் நூல், தெளிவான மற்றும் விவாத அணுகுமுறையில் தூய்மை மற்றும் தீட்டு கருத்தாக்கங்கள் குறித்து விளக்குகிறது. எந்தவொருப் பண்பாட்டிலும் 'தூய்மையற்றது' என்பதை ஆராய்வது, அப்பண்பாடு நிலைநாட்ட முயலும் ஒழுங்கமைப்பை உற்றுநோக்குவது ஆகும். இப்புரிதல், சமய சார்பற்ற மற்றும் சமயம் சார்ந்த, அதேபோலப் பின்தங்கிய மற்றும் வளர்ந்த சமூகங்களுக்கும் சமமாகப் பொருந்தக்கூடியதாக உள்ளது. இத்தகைய அணுகுமுறை, தூய்மை குறித்து, ஒரு உலகளாவிய புரிதலை வழங்குகிறது.

## கழிவுநீர் கட்டமைப்புகள், மேலாண்மை குறித்த மானிடவியல் பார்வை

*மானிடவியல் கழிவு மற்றும் கழிவுநீர் அகற்றுதலை, சுகாதாரம் மற்றும் சமூக ஒழுங்கு ஆகியவற்றுடனான ஒரு சமூகப் பண்பாட்டுச் செயல்பாடாகக் கருதுகிறது. மேலும் 'அழுக்கு' எனும் கழிவினை, சமூகம் பொருத்தமற்ற, விலக்க வேண்டிய பொருளாக, சமூகம் காண்பதாக விளக்குகிறது. கழிவு பற்றிய பேச்சு, அதனை அகற்றும் முறைகள் பெரும்பாலும் தூய்மை, மாசு, மற்றும் அருவருப்பு குறித்த பண்பாட்டு மதிப்பீடுகளைக் கொண்டிருக்கிறது. மானுடவியலாளர்கள், கழிவினை அகற்றும் கட்டமைப்புகள், அல்லது அவை இல்லாத நிலை, இதனோடு தொடர்புடைய சமூக ஏற்றத்தாழ்வுகள், இதை அகற்றும் பணியில் இருப்போர் யார்? சமூகக் காரணிகள், இதில் பதிப்படைவோருக்கான நியாயம், நீதிப் பிரச்சினைகள், மேலும் சுற்றுச்சூழல் பற்றிய சிக்கல்கள், இவற்றை வெவ்வேறு நிலைகளில் உள்ள அதிகார மையங்கள் எவ்வாறு கையாளுகின்றன, மற்றும் இவைகளுக்கான தீர்வுகள் குறித்த ஆய்வுகளில் ஈடுபடுகின்றனர்.*

*மேரி டக்ளஸ், அழுக்கை அது இருக்கிற இடம்/சூழல் சார்ந்து அது புரிந்து கொள்ளப்படுகிறது என்கிறார். தட்டில் உணவு இருந்தால் அது உணவு, அதுவே ஆடையில்/தரையில் விழுந்து விட்டால் அது அழுக்கு. மேலும், கழிவுநீர் மேலாண்மை, ஒரு சுகாதாரப் பிரச்சினை மட்டுமல்ல, அது சமூகப் பண்பாடு எவ்வாறு தூய்மையின் எல்லையை வரையறுகிறது என்பதோடு மனிதகுலத்தை அதன் கழிவுகளிலிருந்து பிரிப்பதற்குமான ஒரு சமூகச் செயல்முறையினைக் கொண்டிருக்கிறது என்பதையும் விளக்குகிறார்.*

*வரலாற்று ரீதியாக, கழிவுகளைக் கையாளும் அணுகுமுறைகள் வெவ்வேறு பண்பாட்டுச் சூழல்களில், அக்காலக்கட்டதின் சூழ்நிலைக்கேற்ப மாறுபடுகின்றன. சில பண்பாடுகள், எ.கா., பண்டைய இந்தியாவில் சிந்து சமவெளி நாகரிகம் போன்றவை, கழிவுநீரைப் பிரிக்கும் மேம்பட்ட, முழுமையான வடிகால் அமைப்புகளைக் கொண்டிருந்தன.*

இந்தியாவில் கழிவுநீர் அகற்றுவது சமூக-பண்பாட்டுச் சூழலோடு மரபாக இணைக்கப்பட்டிருக்கிறது. இங்கு நிலவும், தூய்மை மற்றும் மாசு குறித்த வைதீகக் கருத்துகள் அதோடு இணைக்கப்பட்ட படிநிலைச் சாதி அமைப்புகளில் குறிப்பிட்ட சாதிகளுக்கான வேலையாக கழிவினை அகற்றுவது நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. இன்றைய விரைவான நகரமயமாக்கல், அதனால் உருவாகும் அதிகரிப்பு தேவைகளினால், இவற்றால் இது ஒரு பெரும் சவாலாக இங்குள்ளது.

## பண்பாட்டு மதிப்பீடுகளும் அருவருப்பு மனப்பான்மையும்

கழிவுநீரகற்றுதல் என்பது பெரும்பாலும் நமது உடல் கழிவுகள் மீதான அசூயையால் தீர்மானிக்கப்படுகிறது. பல்வேறு சூழல்களில், மனிதக் கழிவுகள் இயற்கைக்கு மாறானதாக, அழுகலான, அசுத்தமானதாக, மற்றும் நச்சு எனக் கருதப்படுகிறது. இதனால், கழிவுகளைப் கண் பார்வையிலிருந்தும், அதன் நாற்றத்தினைத் தவிர்ப்பதிற்கும் மற்றும் சுத்திகரிப்பதற்கும், தொழில் நுட்பங்களும், நிறுவனங்களும், சமூகச் செயல்பாடுகளும் உருவாக்கப்படுகின்றன. கழிவுநீரகற்றல் மேலாண்மையில் பணியாற்றும் துப்புரவுப் பணியாளர்கள், பெரும்பாலும், கழிவுநீர் மற்றும் கழிவுகளுடனான, தொடர்பின் காரணமாக, அவர்களே சமூகத்தின் பார்வையில் களங்கப்பட்டவர்களாக, தூய்மையற்றவர்களாக, அழுக்கர்களாக, தீண்டத்தகாதவர்களாக பார்க்கப்படுகிறார்கள். எனவே கழிவு மேலாண்மை என்பது தொழில்நுட்பத்தைப் பற்றியது மட்டுமல்ல, சமூக மதிப்பீடுகள் மற்றும் நடத்தைகளோடும் தொடர்பு கொண்டது.

உள்கட்டமைப்பு வசதிகள் விளிம்புநிலை சமூகங்களை எவ்வாறு தவிர்க்கிறது, அதனால் உண்டாகும் பாதிப்புகள் யாவை என்பதில் கவனம் செலுத்தி, உலகளாவிய நீர், சுகாதாரம் மற்றும் தூய்மை என்பதை அனைவருக்குமான ஒரு அடிப்படை வசதியாக கொண்டு வரவேண்டும் என்பதையும் அது எவ்வாறு, இந்தியா போன்ற மரபான சாதியப் பாகுபாடுகள் உள்ள சமூகத்தில் வேரூன்றிய சவாலாக இருக்கிறது என்பதையும், அதை ஒரு மனித உரிமையாக புரிந்துகொள்வதற்கும் மானுடவியலாளர்களின் ஆய்வுகள் உதவுகின்றன.

கழிவுநீர் என்பது, சமூக வாழ்வு, பண்பாட்டுக்கூறுகள் மற்றும் சூழலியல் சார்ந்த ஒரு சிக்கலாகப் பகுப்பாய்வு செய்யப்படுகிறது, இதனால் நுகர்வுப் பழக்கவழக்கங்களையும், சுற்றுச்சூழலில் நிகழும் மாற்றங்களையும் ஆராய வேண்டிய அவசியமிருக்கிறது. இவ்வாறு சமூகப் பண்பாட்டுச் சூழலில் புரிந்துகொள்வதன் மூலம், சுகாதாரத் திட்டங்கள், தொழில்நுட்ப ரீதியாக மட்டுமல்லாமல், சமூகம் ஏற்றுக் கொள்ளக்கூடியவையாகவும், அது நீடித்தவையாகவும், இருக்கவேண்டியதை , மானுடவியலாளர்கள், வலியுறுத்துகின்றனர்.

## சென்னை பெருநகரின் கழிவுநீர் மேலாண்மை

சென்னை மாகாணம் (Madras Presidency) என்று இந்திய சுதந்திரத்திற்கு முன்பும், பிறகு தமிழ்நாடு என தனி மாநிலமான போதும் சென்னைதான் இவற்றுக்கான தலைநகரம். உலகின் இரண்டாவது பழமையான, இந்தியாவின் மிகத் தொன்மையான 337 ஆண்டுகள் வரலாறு கொண்ட, பெருநகர சென்னை மாநகராட்சியில் (Greater Chennai Corporation), தற்போது 426 சதுர.கி.மீ. பரப்பில் 95 இலட்ச மக்கள் வசிக்கின்றனர்.

பெருநகர சென்னை மாநகராட்சியின் சில அடிப்படைவிவரங்கள்

| குடியிருப்புகள் | மண்டலம் | கோட்டம் | பணியாளர்கள் | சாலைகள் | மழைநீர் வடிகால்கள் | சமுதாயக் கழிப்பிடங்கள் |
|---|---|---|---|---|---|---|
| 14.89 இலட்சம் | 15 | 200 | 18,435 | 5,688 கி.மீ. | 3,041 கி.மீ. | 1, 379 |

ஆதாரம்: https://www.chennaicorporation.gov.in/gcc/

## சென்னை பெருநகரக் கழிவுநீரகற்றல் மேலாண்மை

*சென்னை மாநகராட்சி, 1688 ஆம் ஆண்டு, செப்டம்பர் 29 ஆம் தேதி துவங்கி, 1978 ஆம் ஆண்டு, ஜுலை 31-ஆம் தேதி வரை சென்னை மக்களின் அடிப்படை தேவைகளான குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் அகற்றுதல் பணிகளை பிற நகராண்மைக் கழக சேவைகளுடன் நிர்வகித்தது. சென்னை நகர் மற்றும் அதன் அருகாமை சுற்று பகுதிகளை, 1974 ஆம் ஆண்டு சென்னை பெருநகரப்பகுதி (*Chennai Metropolitan Area*) என தமிழக அரசு அறிவித்தது. இதன் தொடர்ச்சியாக, சென்னை பெருநகர குடிநீர்வழங்கல் மற்றும் கழிவுநீரகற்றல் மேலாண்மையினை செயல்படுத்த, தன்னாட்சி நிறுவனமாக சென்னை பெருநகரகுடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்றல் வாரியம், தமிழ்நாட்டு சட்டஎண். 28/1978 ன்படி, 1978 ஆம் ஆண்டு, ஆகஸ்ட் முதல் நாளில் உருவாக்கப்பட்டது.*[6]

## சென்னை கழிவு நீரகற்றல் வரலாறு

### காலனி ஆட்சிக் கால செயல்பாடுகள்:

*1850காலகட்டத்தில்திறந்தவெளிமலம்கழித்தல் (*OpenDefecation*), சாலை ஒர வடிகால் சாக்கடைகளினால் பயன்பாடு (*Road side drains*) ஆகியவற்றால் நீர்நிலைகள் மாசடைந்து, காலரா, வாந்திபேதியும், பிற நோய்த் தொற்றுகளும் உருவாகி, உயிரிழப்புகள் தொடர்ந்ததால், 1861-62 ஆம் ஆண்டுகளில் புகழ்பெற்ற ஆங்கிலேய செவிலியர் புளோரென்ஸ் நைட்டிங்கேல் (*Florance nightingale*) (இந்தியாவிற்கு ஒருபோதும் வந்திராதபோதிலும்), மெட்ராஸ் சுகாதாரத்தேவைகள் குறித்து, காலனி அரசிடம், தொடர்ந்து அறிக்கைகள் சமர்ப்பித்து, கழிவுநீரகற்றல் மேலாண்மை தேவையினை வலியுறுத்தினார்.*[6]

*அதன் விளைவாக 1863-1865 ஆம் ஆண்டுகளில் பொறியாளர். கேப்டன் ஹெக்டர் டல்லாக் (*Captain Hector Tulloch*) அன்றைய*


---

[6] https://cmwssb.tn.gov.in/

[6] https://sriramv.com/2013/01/08/how-florence-nightingale-got-madras-its-drains/#:~:text=Date:%20January%208%2C%202013Author,no%20sign%20of%20them%20here.

நகரைக் கள ஆய்வு செய்து, முதன் முதலில் சாலை மத்தியில் தனி பாதாள கழிவுநீர் (சாக்கடை) குழாய் பதிக்கும் வலைப்பின்னல் (Separate Sewer underground network on road centre), கட்டமைப்புக்கான 'விரிவான மெட்ராஸ் வடிகால் திட்ட அறிக்கை', தயாரிக்கப்பட்டு, கழிவுநீரகற்றல் பணிகள் தொடங்கப்பட்டன (Tulloch,1865). டல்லாக்கின், பொறியியல் களஆய்வில், மெட்ராஸ் நகர், மேடுபள்ளங்கள் அற்ற, சமதள கடற்கரைப்பகுதியென தெரிய வந்து, அதற்கேற்ப வடிவமைப்பில் , புவியீர்ப்பு பாதாள சாக்கடை குழாய் அமைப்பு (underground gravity sewer system), உந்துநிலையங்கள், கட்டி இணைத்து, மக்கள் வசிக்காத, வடக்கு புற வெளியிடங்களுக்கு கொண்டு செலுத்தி , இறுதியில் காசிமேடு அருகே, கடலில் வெளியேற்றப்பட்டது. மேற்குறித்த திட்ட அறிக்கை பரிசீலிப்பின்போது, மெட்ராஸ் மாகாண சுகாதார கமிஷனர் மருத்துவர் W .R. கார்னிஷ் (W.R. Cornish) பரிந்துரைப்பில், அன்றைய தட்ப வெட்பக்கால சூழலில், மெட்ராஸ் நகரில், ஆண்டுதோறும் பெய்யும் மழைக்கால நாட்கள் குறைவு என்றும், மேலும் குடிநீர் பற்றாக்குறையும் இருப்பதினால் , பஞ்சாப் பகுதியில் பயன்படுத்தும் 'உலர் கழிப்பறை' (Dry Toilet conservancy) முறையினையும் திட்டத்தில் சேர்க்கச் சொல்லி நடைமுறைப்படுத்தப்பட்டது.

இந்தியாவில் முதன்முறையாக 1874 ஆம் ஆண்டு, மாநகர பொறியாளர் ஸ்டாண்டிஷ் லீ ( Standish Lee, 1874), பரிசோதனை முறையில் ஒரு கழிவுநீர்ப்பாசன புல் பண்ணையினை (Sewage Farm), வடசென்னை பகுதியில் முதன் முதலில் துவக்கினார்.




கேப்டன் ஹெக்டர் டல்லக், மெட்ராஸ் நகரின்முதல் வடிகால் திட்ட ஆய்வறிக்கை-1865 ஆண்டு


அதைத்தொடர்ந்து 1880 ஆம் ஆண்டு முதல் நகரத்தின் பாதாள சாக்கடை அமைப்புகளை முறையாக இயக்கி பராமரிக்க இயலாமல் போனதால், நகருக்குள் மீண்டும் சுற்றுசூழல் சார்ந்த சிக்கல்கள் ஏற்பட்டன. இதன் விளைவாக தொற்று நோய்கள் அடிக்கடி பரவி உயிரிழப்புகள் அதிகரித்தன. அப்போதைய கவர்னர், தீர்வுகள் பெறும் நோக்கில், பொறியாளர் பென்னிகுயிக் (Col.John Pennycuick) தலைமையிலான, சுகாதார பொறியாளர், ஜே. ஏ. ஜோன்ஸ் (J.A. Jones) மற்றும் மருத்துவர் கிங் (W. G. King) அடங்கிய சுகாதார குழுவை அமைத்தார். இக்குழு விரிவான ஆய்வுகள் அடிப்படையில், மெட்ராஸில் குடி நீர் வளங்கள் வசதி மற்றும் கழிவுநீரகற்றல் கட்டமைப்புகள் உருவாக்க, ஓர் தனித்த சிறப்புப்பொறியாளரை இங்கிலாந்தில் இருந்து வரவழைத்து பணிகளை செயல்படுத்த பரிந்துரைத்தது.

சுகாதாரக்குழுவின் பரிந்துரையின்படி, மெட்ராஸ் நகரின் குடிநீர் வளங்கல் மற்றும் கழிவுநீர் பணிகளுக்கு, 1907 ஆம் ஆண்டில் பொறியாளர் ஜே. டபுள்யூ. மேட்லி (J.W. Madeley)அவர்கள் பணி அமர்த்தப்பட்டார். அவருடன் உள்நாட்டு பொறியாளர் ஹர்முஷ்ஜி நெளரோஜியும் (Hormusji Nowroji) பணிபுரிய மாநகராட்சி பொறியியல் பணியில் சேர்ந்தார். இந்த இருவரும், சென்னைக்கான மிகவும் தட்டையான சமதள நிலப்பரப்பில் அமைக்கப்பட உள்ள பல்வேறு கழிவுநீர்க் குழாய்களுக்கான, கழிவுநீரின் வேகம்(velocity) மற்றும் வண்டல் சுமந்து செல்லும் திறனைத் (silt carrying capacity) தீர்மானிப்பதற்கான பரிசோதனைகளை நேப்பியர் பூங்காவில் உள்ள கழிவுநீர் பண்ணையில் (தற்போதைய சென்னைக்குடிநீர் வாரிய தலைமை அலுவலகம் வளாகப்பகுதி), செய்து, அடிப்படை பொறியியல் முடிவுகளை நடைமுறைப்படுத்த அரசு ஒப்புதல் பெற்றனர். அதனடிப்படையில், சென்னை நகருக்கென சாலை மத்தியில் தனி பாதாள கழிவுநீர் குழாய் பதிக்கும் வலைப்பின்னல் (Separate Sewer on road centre) கட்டமைப்புக்கான திட்டங்களை (மழை நீர் கால்வாய் தவிர்த்த – excluding storm water drains), திட்டமிட்டு, வடிவமைத்து, 'தண்டையார் பேட்டை கழிவு நீர் திட்ட'

[7] https://tamildigitallibrary.in/Articles/%E0%AE%A8%E0%AF%82%E0%AE%B2%E0%AF%8D-33477-Tondiarpet%20drainage%20and%20other%20works

[7] அறிக்கையினை, 1909 ஆம் ஆண்டில் முன் மாதிரி (Pilot Scheme) திட்டமாக , உருவாக்கிச் செயல்படுத்தினர்.


இதன் தொடர்ச்சியாக, பொறியாளர் J.W.மேட்லி குழுவினர், ஏற்கனவே அரசு ஒப்புதல் வழங்கிய முன்மாதிரி திட்ட செயலாக்க அடிப்படையில், மெட்ராஸ் நகருக்கான, ஒருங்கிணைந்த கழிவுநீரகற்றல், விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கும் பணிகளை, துவக்கி 1913 ஆம் ஆண்டு, அரசு ஒப்புதல் பெற்று மாநகராட்சியினரால் அனைத்து பணிகளும் 1935 ஆண்டுக்குள் முடிக்கப்பட்டன. [8]


CORPORATION OF MADRAS.

TONDIARPET DRAINAGE

AND OTHER WORKS

J. W. MADELEY, M.A., M. Inst. C.E.,
Special Engineer,
Corporation of Madras.
June, 1909.



CORPORATION OF MADRAS

MADRAS CITY
MAIN DRAINAGE, 1913.
VOL. I. REPORT.

(FOR ESTIMATES, SEE VOL. II.)

J. W. MADELEY, M. A.,
M. Inst. C. E., M. Am. Soc. C. E., Etc.,
Special Engineer, Corporation of Madras.

10TH APRIL, 913.




[8] https://tamildigitallibrary.in/Articles/%E0%AE%A8%E0%AF%82%E0%AE%B2%E0%AF%8D-65861-Madras%20City%20main%20drainage,%201913-Vol.%20I%20Report







மேற்குறித்த திட்டத்தில், எளிய விளிம்புநிலை மக்களின் வசிப்பிட சேரிகளிலும், மற்ற பொருளாதாரத்தில் பின்தங்கிய குடும்பங்களின் வசிப்பிடங்களிலும், குழி கழிவறை எனும் உலர் கழிப்பறை (Dry Toilet ) முறைகளும், கையால் மலம் அள்ளி துப்புரவு செய்து, மல கழிவுகிடங்குகளுக்கு (Night Soil Depot) எடுத்துச்செல்லும் முறைகளும் சேர்த்து செயல்படுத்தப்பட்டது.

## கழிவு நீரகற்றல் நிறைகளும் குறைகளும்

காலனி கால சென்னை மாகாணத்தில் மனித கழிவுகளை அகற்றுவது, கைமுறையாக மலம் அப்புறப்படுத்துவதையே பெரிதும் நம்பியிருந்தது, துப்புரவு செய்யும் பணியாளர்கள், விளிம்புநிலை சமூகங்களைச் சேர்ந்தவர்கள். உலர் கழிப்பறைகளில் கையால் மலம் அள்ளி, வாளிகள் மூலம் சேகரித்து துப்புரவுப்படுத்துவது, பொதுகழிப்பிடங்களை துப்புரவுப்படுத்துவது ஆகியவை சமூகத்தில் உள்ள கீழ்ச்சாதியினர் வேலையாக நடைமுறைப்படுத்தப்பட்டது.

சுகாதாரப் பாதுகாப்பினை நோக்கமாகக் கொண்ட காலனி ஆட்சிக்கால சீர்திருத்தங்கள், பொதுகழிப்பிடங்களை நிறுவுதல், கழிவுகளைஅகற்றுவதற்கு மோட்டார்வண்டிகளைப் பயன்படுத்துதல் மற்றும் அகற்றுவதை ஒழுங்குபடுத்துதல் மூலம் கழிவுகளை

அப்புறப்படுத்துவதையே நவீனமயமாக்க முயன்றன, இருப்பினும் இச்செயல்பாடுகளின் செயல்திறன்களில் பிரச்சனைகள் இருந்தன.

**இந்திய விடுதலைக்கு பிந்தைய நிலை**

*1947 ஆம் ஆண்டு முதல் மெட்ராஸ் நகரில் நீர்வள ஆதாரங்கள் மேம்பாடு அடைய, மேலும் மக்கள் தொகை அதிகரிப்பினால், நகரில் கழிவுநீர் மேலாண்மையை மேம்படுத்த, புதிய திட்டங்கள் அவசியமானது. 1957- 1965 ஆம் ஆண்டுகளில், இவற்றுக்கான திட்டங்கள் தொடங்கப்பட்டு, விரிவடைந்து வரும் நகரம் மற்றும் மக்கள் தொகையின் தேவைகளுக்கு ஏற்றவாறு கழிவுநீர் உள்கட்டமைப்பு, ஐந்து மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டு, கழிவுநீர்ச்சேகரிப்பு, சுத்திகரிப்பு மற்றும் அகற்றும் வசதிகள் குறிப்பிடத்தக்க அளவில் மேம்படுத்தப்பட்டது.*

*தொடர்ந்து1978ஆம்ஆண்டு, பெருநகரகழிவுநீர்மேலாண்மைக்கான முதல் பெருந்திட்டம் (*First Master Plan*), எதிர் வரும் முப்பது ஆண்டுகளுக்கான 2008 ஆம் ஆண்டில் உயர்ந்திருக்கக்கூடிய மக்கள் தொகை, தேவையான நீர்வள ஆதாரங்கள் மேம்பாட்டையும் கணக்கில் கொண்டு தயாரிக்கப்பட்டது. புதிதாக சேர்க்கப்பட்ட பகுதிகளுக்குக் கழிவுநீர் கட்டமைப்புகளை விரிவுபடுத்துதல், ஏற்கெனவே உள்ள கட்டமைப்புகளின் திறன் வலுவூட்டல் மற்றும் மேம்படுத்துதல், ஆகியவை பெருந்திட்ட பணிகளில் செயல் படுத்தப்பட்டன .*

*மீண்டும் பெருநகர இரண்டாவது பெருந்திட்டம் (*Second Master Plan*) 1991 ஆம் ஆண்டில் புதுப்பிக்கப்பட்டு, 2021 ஆம் ஆண்டில் உயர்ந்திருக்கக்கூடிய மக்கள் தொகையின் தேவைகளை நிறைவேற்ற கழிவுநீர் சுத்திகரிப்பு மற்றும் அகற்றும் வசதிகள் போன்றவற்றை மேம்படுத்தியது திட்ட பணிகளாக இருந்தன. இப்பணிகள் முன்னுரிமை மற்றும் நிதி ஒதுக்கீட்டு அடிப்படையில் படிப்படியாகச் செயல்படுத்தப்பட்டன.*

சென்னை பெருநகர குடிநீர் மற்றும் கழிவுநீரகற்றல் வாரிய கழிவுநீர்ச் சேவைகளின் வளர்ச்சிமற்றும் தற்போதைய நிலையினை கீழே கொடுக்கப்பட்டுள்ள அட்டவணையில் காணலாம்.

| விவரம் | 1978 ஆண்டு | 2025 ஆண்டு |
|---|---|---|
| கழிவுநீர் சேவை உள்ளடங்கிய பகுதி | 74% | 86% |
| கழிவு நீர் குழாய்களின் நீளம் | 1,223 கி.மீ. | 4,787கி.மீ. |
| பம்பிங் ஸ்டேஷன் எண்ணிக்கை | 58 | 356 |
| நுகர்வோர் கழிவுநீர் இணைப்புகள் | 1,14,000 | 9,32, 800 |
| பணியாளர்கள் எண்ணிக்கை | 4, 853 | 2,750* |
| சுத்திகரிப்பு நிலையங்கள் | 3 | 12 |
| சுத்திகரிக்கும் செயல் திறன், நாளொன்றுக்கு மில்லியன் லிட்டர் (MLD) | 57 MLD | 957.80 MLD |

ஆதாரம்: https://cmwssb.tn.gov.in/
*ஒப்பந்த மனிதவளம் (Outsourcing) தவிர்த்து

## மனிதக் கழிவு அகற்றும் தொழிலாளர்களை பணியமர்த்துவதை தடை செய்தல், பாதுகாப்பு மற்றும் மறுவாழ்வு

இந்தியா விடுதலை பெற்று 78 ஆண்டுகளுக்குப் பிறகும், இன்றும் சில சமூகப் பிரிவுகள், சாதிகள் அவர்கள் சமத்துவம், கண்ணியத்துடனும் வாழ்வதற்கான உரிமையினை உறுதி செய்ய இயலாத சூழலே உள்ளது. இதில் முக்கியமாக 'மனிதக் கழிவுகளை மனிதர்களே அகற்றுவது' (மலம் அள்ளுதல்) எனும் காட்டுமிராண்டித்தன நடைமுறையை முக்கியமாகக் குறிப்பிடலாம். இன்றளவும் சமூகத்தில் நிலவும் இந்த அவலத்தினை ஒழிக்க இந்திய ஒன்றிய, மாநில அரசுகளும் 1950 ஆம் ஆண்டு துவங்கி பல்வேறு நிறுவன, சட்ட நடவடிக்கைகளை மேற்கொண்டபோதிலும் அதை

நடைமுறைப்படுத்துவதில் முழுமையாக வெற்றிபெறவில்லை. இதற்கு முக்கிய காரணம், இந்திய சமுதாயத்தில் நிலவிவரும் சாதியக் கட்டமைப்பும், மனித நேய சிந்தனை இன்மையுமே, எனவே முழுமையாக இச்சமூக அவலம் ஓய்ந்தபாடில்லை.

## அரசின் கொள்கைகள், சட்டங்கள் மற்றும் நடைமுறைச் செயல்பாடுகள்

இந்திய அரசியலமைப்புச்சட்டத்தில், பட்டியலினச்சமூகங்களைப் பாதுகாப்பதற்கானப் பல 'பாகுபாடு மறுப்புச் சட்டங்களும் (Anti - Discrimination Laws)' மற்றும் அதற்கான விதிமுறைகளும் நடைமுறையில் உள்ளன. ஆயினும், இந்திய மக்களிடையே இவற்றைச் நடைமுறைப்படுத்துவதில் தொடர்ந்து சிக்கல்கள் நீடித்து வருகிறது.

மனிதக் கழிவுகளை மனிதர்களே அகற்றும் தொழிலில் நிறுவன மற்றும் சட்டரீதியான நிகழ்வுகள் மற்றும் முன்னெடுப்புகளின் காலவரிசை அட்டவணை

| ஆண்டு | அரசு செயல்பாடுகள் |
|---|---|
| 1949 | இந்திய அரசியலமைப்பு: பிரிவு 17: தீண்டாமை ஒழிக்கப்பட்டுள்ளது மற்றும் அதன் எந்த வடிவத்திலான நடைமுறையும் தடைசெய்யப்பட்டுள்ளது.<br>பிரிவு 21: மனித மாண்புடன் வாழ்வதற்கான உரிமையை உறுதி செய்கிறது.<br>பிரிவு 25 : சுரண்டலுக்கு எதிரான உரிமை பிச்சை எடுத்தல் மற்றும் அது போன்ற பிற கட்டாய உழைப்புகள் தடைசெய்யப்பட்டுள்ளன. மேற்குறித்த இந்த விதிகளை மீறுவது சட்டப்படி தண்டிக்கப்படக்கூடிய குற்றம். |
| 1949 | பம்பாய் மாநில துப்புரவுத் தொழிலாளர்களின் நிலை குறித்த விசாரணைக்குழு அறிக்கை: மனிதக் கழிவுகளைத் தலையில் சுமந்து செல்லும் முறை ஒழிக்கப்பட வேண்டும். |
| 1957 | உள்துறை அமைச்சகத்தின், கையால் மலம் அள்ளுதல் குறித்த அறிக்கை பரிந்துரைகள்:<br>எண் 209: துப்புரவுப் பணியாளர்களுக்குக் குடிப்பதற்கு, கழுவுவதற்கு போதுமான நீர் வழங்கப்பட வேண்டும்.<br>மற்றும் எண் 210: பணிபுரியும் இடத்தில் சோப்பு வழங்க ஏற்பாடு செய்ய வேண்டும். |

| | |
|---|---|
| *1957* | இனவிவகார அமைச்சகத்தின் (Ministry of Racial Affairs ), துப்புரவுப் பணி, குறித்த விசாரணைக் குழு அறிக்கை: மனிதக் கழிவுகளை மனிதர்களே அகற்றும் நடைமுறை, மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தின் இறுதிக்குள் ஒழிக்கப்பட வேண்டும். |
| *1968* | தேசிய தொழிலாளர் ஆணைய அறிக்கை: எண் 5.3, சாதாரண வேலைக்கு, நாளொன்றுக்கு நியாயமான பணிச்சுமை நிர்ணயிக்கப்பட வேண்டும்; மற்றும் எண் 6.7, நகராட்சி அல்லது தனியார் சேவைகளில் குழந்தைகளைத் துப்புரவாளர்களாகவும் கழிவு அகற்றுவோராகவும் பணியமர்த்துவது தடை செய்யப்பட வேண்டும் |
| *1968* | துப்புரவுத் தொழிலாளர்களின் பணி மற்றும் சேவை நிலைமைகளை ஆய்வுகாக, அமைக்கப்பட்ட, தேசிய தொழிலாளர் ஆணையக் குழுவிடம், இத்தகைய நடைமுறையை எவ்வாறு ஒழிப்பது என்பது குறித்த, சர்வதேச தொழிலாளர் அமைப்பின் (International Labour Organization) எண் .111 ன் பரிந்துரைகள் வழங்கி, தீர்வு பெற கோரப்பட்டது |
| *1989* | துப்புரவுத் தொழிலாளர் பிரச்சினை மற்றும், துப்புரவுத் தொழிலை ஒழிக்க நடவடிக்கைகளைப் பரிந்துரைக்க, திட்டக்குழு அறிக்கையில், அத்தொழிலாளர்களின் மறுவாழ்விற்குச் சிறப்புக் கவனம் செலுத்தப்பட்டு, மனிதக் கழிவுகளைக் கைகளால் அகற்றும் நடைமுறை, அடுத்த நான்கு ஆண்டுகளுக்குள் ஒழிக்கப்பட வேண்டும் என்றது. |
| *1993* | மலம் கையால் அள்ளும் துப்புரவுத் தொழிலை ஒழிக்கும் சட்டம் இயற்றப்பட்டும், இந்தியாவின் எந்த மாநிலமும் அச்சட்டத்தை நடைமுறைப்படுத்தவில்லை. |
| *1996* | துப்புரவுத் தொழிலாளர்களை மீட்டெடுத்தல் மற்றும் மறுவாழ்வளிப்பதற்கான தேசியத் திட்டம் நிறுவுதல்: நாட்டில் 7,97,112 துப்புரவுத் தொழிலாளர்கள் கண்டறியப்பட்டனர் .<br>அவர்களில் 23.6 விழுக்காடு பேருக்கு மறுவாழ்வு அளிக்கப்பட்டது; 9.3 விழுக்காடு பேருக்குப் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. |

*ஆதாரம்:* National Law School of India University (NLSIU), Dissertation Post Graduate Diploma in Environmental Law on " Manual Scavenging Act and Municipal Waste Water Workers in India – Policy and Practice" 2012 by the Author.

## மனிதக் கழிவுகளைக் கையால் அகற்றும் முறை ஒழிப்பதில் அரசின் தோல்விகள்

*இந்தியத் தலைமை கணக்குத் தணிக்கையாளர், சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் அமைச்சகத்தின் மனிதக் கழிவுகளை கையால் அகற்றும் பணிகளை ஒழிப்பதற்கான திட்டம் குறித்த தனது 2003 ஆம் ஆண்டு தணிக்கை அறிக்கையில், அரசு துறை நிறுவனங்களின் தோல்விகள் மற்றும் குறைகள் சிலவற்றினைக் கண்டறிந்துள்ளது. சமூக நீதித் துறை, 1992 ஆம் ஆண்டு முதல், நாடு முழுவதும் செயல்படுத்திய, 'துப்புரவுத் தொழிலாளர்கள் விடுதலை மற்றும் மறுவாழ்வுக்கான திட்டம்', ரூபாய் 600 கோடிக்கு மேற்பட்ட முதலீடுகளுடன், பணிகள் துவங்கி, பத்து ஆண்டுகளுக்கு பின்னரும், அதன் நோக்கங்களை அடையத் தவறிவிட்டது.*

*இந்தத் திட்டம் சந்தேகத்திற்கு இடமின்றி நல்ல நோக்கத்துடன் இருந்தாலும், தவறாக வடிவமைக்கப்பட்டது. ஏனெனில், தொழில் சீர்திருத்தத்தை எதிர்க்கும், சாதீய படிநிலை, பாகுபாடு கொண்ட ஒரு சமூகத்தின் சிக்கலான அமைப்புக்கு ஏற்ப அதன் செயல்பாட்டு அளவுருக்களைப் (*Operational parameters *) பயன்படுத்தத் தவறியது. துப்புரவுத்தொழிலாளர்களை வேலைக்கு அமர்த்துவதைத்தடை செய்திருந்த சட்டத்தைப் பயன்படுத்திக் கொள்ள, முடியாததால், ஒரு சீரான உத்தியை வகுப்பதில் அது தோல்வியடைந்தது. அடிப்படைக் கணக்கெடுப்பு இல்லாதது, மாவட்ட வளர்ச்சி அதிகாரிகளின் பங்களிப்பின்மை, உதவித் திட்டங்களின் வணிகமயமாக்கல் மற்றும் கண்காணிப்பு வடிவத்தில் ஏற்பட்ட முறிவுகள் ஆகியவை ஒருவித கவனச்சிதறலுக்கு வழிவகுத்தன.*

*தவிரவும், இதுவரை நிகழ்ந்த முன்னெடுப்புகள், பலகீனமான, சீரற்ற, மோசமான மற்றும் ஒருங்கிணைக்கப்படாதவைகள் என்றும், இவை மலம் அள்ளும் தொழிலை ஒழிக்கும் எதிர்காலத் திட்டங்களின் போக்கை நிர்ணயிக்கும் எனவும் தணிக்கையாளர் கணித்திருந்தார்.*


*இதனைத் தொடர்ந்து, 2010 ஆம் ஆண்டு, தேசிய ஆலோசனைக்குழுவினர் (*National Advisory Council*), மனித கழிவுகளை, மனிதனே அகற்றும் அவலநிலை , குறித்து "நாம்*

ஒடுக்கப்பட்ட இந்தியக்குடிமக்களுக்கு, இவ்வாறான செயல்பாட்டில் ஈடுபடுத்தியதின் மூலம், வரலாற்றுப் பிழையினை (Historical injustice) இழைத்துள்ளோம்" என்பதை ஏற்றுக்கொண்டு, இந்த இழிநிலையினை முற்றிலும் ஒழிக்கும் நோக்கில் சட்டமும் விதிமுறைகளும், உருவாக்கப்படவேண்டும் என பரிந்துரைத்தனர்.

அதன் விளைவாக, 2013 ஆம் ஆண்டில் டிசம்பர் 6 ஆம் நாள் முதல் நடைமுறைக்கு வந்த மனிதக் கழிவுகளை அகற்றும் தொழிலாளர்களைப் பணியமர்த்துவதைத் தடைசெய்தல் மற்றும் அவர்களின் மறுவாழ்வுச் சட்டம், 2013 (Prohibition of Employment as Manual Scavengers and their Rehabilitation (PEMSR) Act, 2013 aka Manual Scavenging Act), கழிவுநீர்க் கால்வாய்கள், மலக்கழிவுத் தொட்டிகள் மற்றும் சுகாதாரமற்ற கழிப்பறைகளைக் மனிதக் கைகளால் சுத்தம் செய்வது போன்ற வேலைகளை செய்வதைத் தடை செய்கிறது. தவிரவும், மனிதக் கழிவுகளை அகற்றும் தொழிலாளர்களைப் பணியமர்த்துவதைத் தடை செய்கிறது, மேலும் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு மறுவாழ்வை உறுதி செய்கிறது.

அதனடிப்படையில் தமிழ்நாடு அரசு, முக்கிய குறிக்கோள்களில் ஒன்றாக, மனித கழிவுகளை, மனிதனே அகற்றும் அவல நிலையினை முற்றிலும் ஒழிப்பதற்கான நடவடிக்கைகளில் இறங்கியது. இதனை செயல்படுத்தும் விதமாக, சென்னை பெருநகரில் உள்ள அனைத்து கழிவுநீரகற்றல் கட்டமைப்புகளின் செயல்பாடு மற்றும் பராமரிப்பு பணிகளை, சென்னை பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும்




भारत का राजपत्र
The Gazette of India
PUBLISHED BY AUTHORITY
MINISTRY OF LAW AND JUSTICE
(Legislative Department)
THE PROHIBITION OF EMPLOYMENT AS MANUAL SCAVENGERS AND THEIR REHABILITATION ACT, 2013
No. 25 of 2013

கழிவுநீரகற்றல் வாரியம் இயந்திரமயமாக்கியுள்ளது. கழிவுநீர் குழாய்களில் உள்ள அடைப்புகளை நீக்குவதற்கு ஜெட்ராடிங் இயந்திரங்களும், பராமரிப்பு நுழை வாயில்களில் உள்ள கசடுகளை அகற்ற, அதிவேக உறிஞ்சும் மற்றும் தூர்வாரும் இயந்திரங்களும், தற்போது செயல்முறைக்கு கொண்டுவரப்பட்டுள்ளது.[9]

### 2025 ஆம் ஆண்டில் வாரிய இயந்திரங்களின் விவர அட்டவணை

| வரிசை எண் | இயந்திரங்களின் விவரம் | எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | தூர் வாரும் இயந்திரங்கள் | 299 |
| 2 | ஜெட் ராடிங் இயந்திரங்கள் (2KL , 6 KL & 9KL) | 181 |
| 3 | ஜெட்டிங் மற்றும் உறிஞ்சும் இயந்திரங்கள் | 45 |
| 4 | அதி வேக உறிஞ்சும் இயந்திரங்கள் | 73 |
| 5 | கழிவு நீர் அகற்றும் ஊர்திகள் | 03 |
| மொத்தம் | | 601 |

### சென்னையின் சுத்திகரிக்கப்பட்ட கழிவுநீர் மறுபயன்பாடு

வட்டப் பொருளாதார கழிவுநீர் சுத்திகரிப்பு (Circular Economy of Sewage Treatment) என்பது, கழிவுகளைக் குறைத்து/சுத்திகரித்து, அவற்றை மறுசுழற்சி மூலம் தொடர்ந்து பயன்படுத்தும் முறையாகும். இது நேர்கோட்டு பொருளாதாரத்திற்கு (Linear Economy) மாற்றாகும். வளங்களை மீட்டெடுத்து மறுசுழற்சி படுத்துவதே ‘வட்டப் பொருளாதார கழிவுநீர் சுத்திகரிப்பு’, இதில் கழிவுநீர் வெளியேற்றப்படுவதில்லை, மாறாக அது நீர், ஆற்றல் மற்றும் ஊட்டச்சத்துக்களாக மறுசுழற்சியில் பெறப்படுகிறது.


[9] https://cms.tn.gov.in/cms_migrated/document/docfiles/maws_e_pn_2025_26.pdf

இவ்வணுகுமுறை மூலம் நவீன தொழிநுட்பங்களின் உதவியோடு கழிவுநீரினை வீணாக்குவதற்குப் பதிலாக பயனுள்ளவையாக உருமாற்றுகின்றன. இதனால் நகரின் சுற்றுச்சூழல் பாதுகாப்பு, நிதிச்செலவு குறைதல் மற்றும் இயற்கை வளங்களைப் பாதுகாத்தல் போன்ற நன்மைகளும் கிடைக்கின்றன. தற்போது உலகில் கழிவுநீர் ஒரு சுமையாகக் கருதப்படுவதில்லை மாறாக அது ஒரு வளமிக்க ஆற்றலாகக் கருதப்படுகிறது.. உலகெங்கிலும் உள்ள அரசுகளும், தொழில்துறைகளும் வட்டப் பொருளாதார நடைமுறையினைச் செயல்படுத்தி பயனடைகின்றன. மேலும் இவை உலகளவில் வளங்குன்றா மேம்பாட்டு இலக்குகள் (Sustainable Development Goals) எட்டுவதற்கும் மற்றும் காலநிலை மாறுபாட்டினால் ஏற்படும் பாதகங்களைத் தணிப்பதற்கு துணைபுரியும்.

தற்போது கழிவுநீரகற்றல் மேலாண்மையில் நிலவுகிற, நவீனத்துவ செயல்முறைகளை பயன்படுத்தி, சென்னை நகரில் பன்னிரண்டு சுத்திகரிப்பு நிலையங்கள், வழியாகத் தினமும் 660 மில்லியன் லிட்டர் (MLD) கழிவுநீர் சுத்திகரிக்கப்பட்டு மறுசுழற்சி முறையில் மீண்டும் பயன்படுத்தப்படுகிறது. சென்னையின், குடிநீர் பற்றாக்குறையைச் சமாளிக்க, நீர் தேவையினை பூர்த்தி செய்து 'நீர் பாதுகாப்பு (Water Security)' நோக்கத்தினை அடைய, இந்தியாவிலே முதன்முறையாக வாரியம், சுத்திகரிக்கப்பட்ட கழிவுநீரின் மறுசுழற்சி (Reuse of Treated sewage) திட்டத்தினை செயல்படுத்தியதன் மூலம், ஒரு வட்டப் பொருளாதார (Circular-Economy) முன் மாதிரியை (Model) உருவாக்கியிருக்கிறது.

தவிர தொழிற்சாலைகளுக்கு தேவையான நீர் வழங்குதல் மற்றும் போரூர் போன்ற உள்ளூர் ஏரிகளில் சுத்திகரித்த நீரின் மறுசுழற்சி மூலம் நீராதாரத்தை வலுப்படுத்தும், மூன்றாம் நிலை சுத்திகரிப்பு, தலைகீழ் சவ்வூடுபரவல், அதி-வடிகட்டல் (Tertiary Treatment Reverse Osmosis and Tertiary Treatment Ultra-Filtration Plants) நிலையங்கள், நன்னீர் சார்ந்திருப்பதைக் குறைப்பது போன்றவை வாரியத்தின் பிற சிறப்பு முன்னெடுப்புகளாகக் கருதப்படுகின்றன. சுத்திகரிக்கப்பட்ட நகரத்தின் கழிவுநீர் சென்னை தொழிற்சாலைகளுக்கு தேவைப்படும் நீரில் 20 விழுக்காட்டினைப் பூர்த்தி செய்கிறது. நேசப்பாக்கத்தில் உள்ள சுத்திகரிப்பு நிலையம் நாளொன்றுக்கு 10 Million liter கழிவுநீரைச்

*சுத்திகரித்து, அதனை போரூர் ஏரியை செறிவூட்டவும் நிலத்தடி நீர் ஆதாரங்களை மேம்படுத்தவும்  பயன்படுகிறது.*




## வருங்காலத்தில்  கழிவுநீர் மேலாண்மையில் உள்ள வாய்ப்புகளும் எதிர் கொள்ள வேண்டிய சிக்கல்களும்

*ஐக்கிய நாடுகள் அமைப்பின் வளம் குன்றா வளர்ச்சி (*Sustainable Development Goals*) இலக்கு 6.3 என்பது நீரின் தரம்  மேம்படுத்தல், கழிவுநீர் சுத்திகரிப்பு மற்றும் பாதுகாப்பான மறுபயன்பாடு ஆகியவற்றை நோக்கமாகக் கொண்டுள்ளது. இது, "2030 ஆம் ஆண்டிற்குள், மாசுபாட்டைக் குறைத்தல், கழிவுகளைக் கொட்டுவதை ஒழித்தல் மற்றும் அபாயகரமான இரசாயன பொருட்களின் வெளியேற்றத்தைக் குறைத்தல், சுத்திகரிக்கப்படாத கழிவுநீரின் விகிதத்தைப் பாதியாகக் குறைத்தல், மேலும் உலகளவில் மறுசுழற்சி மற்றும் பாதுகாப்பான மறுபயன்பாட்டை கணிசமாக அதிகரித்து நீரின் தரத்தை மேம்படுத்த வேண்டும்" என வலியுறுத்துகிறது.*

### வாய்ப்புகள்

*கழிவுநீர், ஒரு  பயன்படுத்தப்படாத வளம் (*Untapped Resource*), எனவே இதன் பயன்பாட்டிக்கான வாய்ப்புகள் கண்டறியப்பட்டு முழுபலனையும் பெற வேண்டும்.*

*1968 ஆம் ஆண்டு, நமீபியா நாட்டின் தலைநகர், விண்ட்  ஹேக் நகரில், உலகிலே முதன்முதலில் "கழிவுநீர் சுத்திகரிப்பில் மீட்டெடுத்த நீரை, மக்களுக்கான தரமான , குடிநீராக பயன்படுத்தப்பட்டது*

(Clayton 2023), அன்று முதல் தற்போதுவரை, விண்ட் ஹேக் நகரின் மக்கள் மீட்டெடுத்த நீரை குடிநீராக பயன்படுத்துகின்றனர்.

ஐக்கிய நாடுகளின் அமைப்பு, 2017 ஆம் ஆண்டில் வெளியிட்ட, உலக நீர் மேம்பாட்டு அறிக்கையில்,[10] 'கழிவுநீர் ஒரு பயன்படுத்தப்படாத வளம்' (Untapped Resource) என வரையறுத்து, கழிவு நீர் சுத்திகரிப்பிலிருந்து உயிரி வாயுக்கள் பெறுதல், மின்சாரம் தயாரித்தல், மலகசடு மேலாண்மையில் உரம் தயாரித்தல், சுத்திகரித்த கழிவுநீரினை தொழிற்சாலை உபயோகங்களுக்கும், மற்றும் நீராதாரங்களை மேம்படுத்தவும் பயன்படுத்தலாம் என அறிவுறுத்தியிருக்கிறது. இக்கருத்திற்கேற்ப சென்னை நகரில் 'கழிவுநீரெனும் பயன்படுத்தப்படாத வளத்தினை' உபயோகித்து மறுபயன்பாட்டு வளமேலாண்மைகள் நிகழ்கின்றன, இவற்றை மேலும் மேம்படுத்த வாய்ப்புகள் உள்ளன.

**எதிர்கொள்ளும் முக்கிய சிக்கல்கள்**

கழிவுநீர் குறித்த அசூயை, மானிட பயன்பாட்டில் ஒரு அருவறுக்கத்தக்க செயலாகும். பொதுவாக, மக்களின் பொதுப்புத்தியில், குடிநீர் , 'நேர்மறை நன்மை (Positive Benefit)' யாகவும், கழிவுநீர் 'எதிர்மறை அச்சுறுத்தல் (Negative Threat )' ஆகவும் பதிந்துள்ளது. இவற்றைப் போக்க, மனித நடத்தையில் மாற்றங்கள் நிகழவேண்டும்.

கழிவுநீர் கட்டமைப்புகளுக்கு தேவையான இடங்களைத் தேர்ந்தெடுக்கும் போது, தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாட்டு வாரியத்தின் (TNPCB) அனுமதியைப் பெற்றிருந்த போதிலும், பொதுமக்களிடம் கலந்தாலோசனை செய்யாததால் எதிர்ப்புகள் ஏற்பட்டு கோடிக்கணக்கான ரூபாய் செலவழிக்கப்பட்ட பிறகும், கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் மற்றும் நீரேற்று நிலையப் பணிகள் இடைநிறுத்தப்பட்ட பல முன்னுதாரணங்கள்

[10] https://www.unwater.org/publications/un-world-water-development-report-2017

உள்ளன. இம்மாதிரியான திட்ட குறைகளுக்கு முக்கிய காரணி, பொதுமக்களுடனான சமூக அளவில் கலந்தாலோசனைக்கு முன்னுரிமை கொடுத்து, அவர்களின் கருத்துக்களை முறையாக பெறாததேயாகும்.

இன்றையசூழலில் நவீன காலத்தில், துர்நாற்றத்தை போக்கும் புதிய தொழில் நுட்பங்கள் (Odour Control Technologies) உள்ளன, அந்த வகை தொழில் நுட்பத்துடன் சேர்ந்த கழிவுநீர் கட்டுமானங்கள் அமைக்கப்படுவதால், துர்நாற்றம் ஏற்படாது, என உறுதி தெரிவித்து திட்டங்களை செயல்படுத்துவது அவசியமானது. மேலும், திட்டத்தில் துர்நாற்றக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளுக்காகப் பொருத்தமான நிதி ஒதுக்கீடுகள் செய்யப்பட்டு பணிகள் முடிக்கப்பெறும் என மக்களிடம் தெளிவுபடுத்துவது அவசியம்.

**சென்னை கழிவுநீரகற்றல் கட்டமைப்பின் எதிர்காலத் தேவைகள்**

சென்னை மக்களை மையமாகக் கொண்டு, அவர்களின் தீவிரப் பங்கேற்பை உறுதிசெய்து, அனைவரையும் உள்ளடக்கிய குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் மேலாண்மைத் திட்டங்களைச் செயல்படுத்துவதுடன், விரிவடைந்த உள்கட்டமைப்பு மற்றும் அதிகரித்து வரும் தேவையின் அடிப்படையில், சுத்திகரிப்பு நிலையங்களின் செயல்பாட்டு நிலையையும் திறனையும் மேம்படுத்துதல்.

காலநிலை மாற்றத்தின் தாக்கங்களைத் தாங்கும் வகையில் உள்கட்டமைப்பை மேம்படுத்துதல்; மேலும், கசிவுகள் மற்றும் வழிந்தோடல்களைக் குறைக்கும் பொருட்டு, சேதமடைந்த, முதிர்வுற்ற மற்றும் பழுதடைந்த கழிவுநீர் குழாய்களையும் உள்கட்டமைப்பையும் சீரமைத்து வலுப்படுத்துதல்.

2030-ஆம் ஆண்டிற்குள், நகரத்தின் போதிய வசதியற்ற மற்றும் பின்தங்கிய பகுதிகளில் புதியதாக கழிவுநீர் சுத்திகரிப்பு வசதிகளை கட்டமைத்து விரிவுபடுத்துதல்.

சென்னையில் மழைக்காலங்களில் அடிக்கடி ஏற்படும் வெள்ளப்பெருக்கின்போது, கழிவுநீர் குழாய்களில் அடைப்புகள் ஏற்படுவதைத் தடுக்கும் வகையில், மழைநீரை அக்குழாய்களிலிருந்து முழுமையாகப் பிரித்தெடுப்பதற்கான ஒரு அமைப்பை உருவாக்குதல்.

கழிவுநீரைத் தொழிற்சாலை மற்றும் குடிப்பதற்கு அல்லாத வீட்டு உபயோகத்திற்கான மறுபயன்பாட்டு நீராக மாற்றுவதற்காக, மீநுண் வடிகட்டுதலுடன் கூடிய மூன்றாம் நிலை சுத்திகரிப்பு கட்டமைப்புகளை மேலும் விரிவுபடுத்துதல். அதன் மூலம் தொழிற்சாலைகளின் தேவைகளை பூர்த்தி செய்யும் கொள்ளளவை அதிகரித்தல்.

அதிநவீன தொழில் நுட்பங்களான, நிகழ்நேர நுண்ணறிவு (Real Time Intelligent ) கழிவுநீர் மேலாண்மை, செயற்கை நுண்ணறிவு (Artificial Intelligence), இணையப் செயல்கள் (Internet of Things) மற்றும் தொடு உணர்வுத் தொழில் நுட்பங்களின்(Sensor based) துணையுடன் இயங்கும் அமைப்புகளைப் பயன்படுத்தி, கழிவுநீரின் ஓட்டம், வேகம், தரம் மற்றும் அளவுகள் ஆகியவற்றை நிகழ்நேரத்தில் உடனடியாகக் கண்காணிப்பதோடு, நீரேற்று நிலையங்களுக்கான முன்கணிப்புப் பராமரிப்பு நடவடிக்கைகளை எளிதாக்குதல்.

மலக்கழிவுத் தொட்டிகளை (கழிவுநீர் தொட்டி - Septic Tank) ஒழித்தல்: விரிவான கழிவுநீர் சுத்திகரிப்பு வசதிகளை உருவாக்குதல், தனியார் கழிவுநீர் லாரிகளைச் சார்ந்திருப்பதைக் குறைத்தல் மற்றும் நிலத்தடி நீர் மாசுபாட்டைத் தடுத்தல் ஆகியவற்றை நோக்கிய நகர்வு.

## இறுதியுரை

கிரேக்க கட்டிடக் பொறியாளர் மற்றும் நீரியியல் வரலாற்று ஆய்வாளர், ஏஞ்சலக்கிஸ் (Angelakis 2018), "கடந்த கால அனுபவங்களிலிருந்து பயில்வதன் மூலம், நாம் நிகழ்காலத்தைப் பற்றி நன்கு அறிந்துகொள்கிறோம்; மேலும், எதிர்காலத்திற்காக சரியாகத் திட்டமிடவும் நம்மால் முடிகிறது என்கிறார்".

கழிவுநீர் அப்புறப்படுத்தல் என்பது பண்டையச் சமூகம் தொட்டு இருந்து வரும் ஒரு சமூகச் செயல்பாடு, அதற்கான போதிய

தொல்லியல் அகழ்வாய்வு மற்றும் இலக்கியச் சான்றுகள் உள்ளன. சென்னை பெருநகரில் சுமார் 1,000 முதல் 1,500 மில்லியன் லிட்டர் (MLD) கழிவுநீர் நாளொன்றுக்கு உருவாகிறது, ஆனால் தற்போதைய கழிவுநீர் சுத்திகரிப்பு உள்கட்டமைப்பின் போதிய திறன், துறையின் உறுதியான கண்காணிப்பின்மையால் நீர்நிலைகளும், நிலத்தடி நீரும் மாசடைகின்றன, நச்சாகின்றன.

சென்னையில் 1688 ஆம் ஆண்டு துவங்கிய மக்களின் அடிப்படை தேவைகளான குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் அகற்றுதல் பணி, மூன்று நூற்றாண்டுகளைக் கடந்த நிலையிலும் கழிவுநீர் மேலாண்மை தற்போது ஒரு "குதிரைக்கு முன் வண்டியைக் கட்டுவது" (Putting the Horse before the cart) போன்று தலை கீழ் நிலையில் சிக்கிக்கொண்டுள்ளது, முறையான திட்டமிடலின்றி, உள்கட்டமைப்பு வசதிகள் ஒருங்கிணைப்பின்றி, வசிப்பிட வீடுகள் மற்றும் குடியிருப்புப் பகுதிகள் கட்டுப்பாடின்றிப் பெருகியிருக்கும் ஒரு முரண்பாடான நிலை உருவாகி உள்ளன. இதற்குத் தீர்வு காண அரசுத் துறைகள் குறிப்பாக பெருநகராட்சி, குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்றல் வாரியம், பெருநகர மேம்பாட்டு குழுமம், நெடுஞ் சாலைத் துறை, பொதுப்பணித்துறை, வருவாய் நிர்வாகம், மற்றும் மாவட்ட நிர்வாகம் ஆகியவற்றிக்கிடையேயான ஒருங்கிணைப்பு மற்றும் கூட்டுத் திட்டமிடல் மிகவும் அவசியம்.

சென்னைப் பெருநகர மக்களின் மனநிலையில் கழிவுநீர் என்பது அசூயை, அருவருப்பு, அசுத்தம் எனப் பார்க்கப்படுகிறது. ஆனால் கழிவுநீர் என்பது சமூகவாழ்வோடு, அனைவரின் தினசரிவாழ்வோடும் இணைந்த தவிர்க்கவியலா ஒரு செயல்பாடு என்பதையும், அதை வெளியேற்றும் செயல்முறையில் அது சுத்திகரிக்கப்பட்டு மீண்டும் நிலத்திற்கும், நீருக்கும் திரும்புகிறது என்பதையும் பொதுமக்களிடம் புரிய வைக்க அரசும், சார்ந்த துறைகளும் தொடர் முயற்சிகள் எடுக்கவேண்டும்.

கழிவுநீரகற்றல் மேலாண்மையில் மக்கள் பங்கேற்பு வெறும் சடங்காக இருப்பதற்கு மக்களிடையே போதிய விழிப்புணர்வு இன்மை, நியாயமான தீர்வு கிடைக்காததற்கான அதிருப்தி, நம்பிக்கையின்மை போன்றவை காரணங்களாகும். அதோடு

அதிகாரிகளின் ஒத்துழைப்பின்மை, புறக்கணிக்கும் மனப்பான்மை, வெளிப்படைத்தன்மை இல்லாதது போன்றவை கூடுதலான காரணங்களாகும். நகரின் கழிவுநீரகற்றல் திட்டமிடல் மற்றும் மேலாண்மையிலும், அதேபோல விரிவுபடுத்தப்பட்ட பகுதிகளில், ஒருங்கிணைந்த கழிவுநீர் அகற்றுதல் மற்றும் வடிகால் திட்டங்கள், பொதுமக்களின் தீவிரப் பங்கேற்புடன் உடனடியாக, முன்னுரிமை அடிப்படையில் வகுக்கப்பட்டுச் செயல்படுத்த வேண்டும். இதை செயல்படுத்த திறமையும், அனுபவமும் கொண்ட சமூக ஆய்வாளர்களை ஈடுபடுத்துவது அவசியம்.

கழிவுநீரகற்றல் மேலாண்மையில் இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணிகள், நீண்ட காலமாகப் புறக்கணிக்கப்பட்டு, போதுமான நிதி ஒதுக்கீடுகள் செய்யப்படாமல் இருக்கிறது, அரசு அதற்கான முன்னுரிமையும் அளிக்க வேண்டும். நுகர்வோர் கட்டணங்களை பயன்படுத்தும் முறைகளுக்கு (usage patterns) தக்க வசூலிக்கும் நவீன வழிமுறைகள் உருவாக்க வேண்டும். அதிலிருந்து கிடைக்கும் நிதியை கழிவுநீர் சுத்திகரிப்புநிலைய செயல்பாட்டுத் திறனை மேம்படுத்தவும், சேதமடைந்த முதிர்வுற்ற குழாய்களைச் சீரமைக்க பயன்படுத்தலாம்.

மழைநீர் கால்வாய்களில் சட்டவிரோதமாக கழிவுநீரினை வெளியேற்றுகிற இணைப்புகளை மாநகராட்சி மற்றும் கழிவுநீரகற்றல் வாரியமும் ஒருங்கிணைந்து கண்காணித்து, இணைப்புகள் துண்டிக்கவேண்டும். இவ்விரு துறைகளின் கவனக்குறைவினால் இவ்வாறான நிலைத் தொடருகிறது.

சுத்திகரிக்கப்பட்ட கழிவுநீரைத் தொழிற்சாலைகளுக்கு விற்பனை செய்தல் மற்றும் கழிவுநீர் போக்குவரத்து வாகனங்களை ஒழுங்குபடுத்துதல் (ஒழுங்குபடுத்தப்பட்ட வண்டல் அகற்றுதல்) போன்ற முயற்சிகளில் தனியார் துறை ஈடுபாட்டை ஊக்குவிக்கவேண்டும்.

நீண்டகால அவலமான, மனிதக் கழிவுகளை, மனிதனே அகற்றும் அவல நிலையினை முற்றிலும் ஒழிப்பதற்கு, அனைத்து கழிவுநீரகற்றல் கட்டமைப்புகளின் செயல்பாடு மற்றும் பராமரிப்பு

பணிகளை வாரியம் இயந்திரமயமாக்கியுள்ளது. கழிவுநீர் குழாய்களில் உள்ள அடைப்புகளை நீக்குவதற்கும், பராமரிப்பு நுழை வாயில்களில் உள்ள கசடுகளை அகற்றவும், அதிவேக இயந்திரங்கள் தற்போது செயல்முறைக்கு கொண்டுவரப்பட்டுள்ளது.

இதே போல கழிவுநீரகற்றல் மேலாண்மையில் உலகின் வளர்ந்த நாடுகளில் பயன்பாட்டிலிருக்கும் நவீன அறிவியியல் தொழில் நுட்பங்களை தேவையின் அடிப்படையில் உடனடியாக அரசும் துறை சார்ந்த நிறுவனங்களும் கண்டறிந்து இங்கே அவற்றை அறிமுகப்படுத்துவது குறைபாடில்லாத மேலாண்மைக்கு அவசியமாகும். கழிவுநீர் மேலாண்மையைத் திறம்படச் செய்ய தக்க தொழில்நுட்ப வல்லுநர்கள் மற்றும் பணியாளர்கள் பற்றாக்குறை உள்ளது, இந்த நிலையைப் போக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

2008-ஆம் ஆண்டு ஒன்றிய அரசின் தேசிய நகர்ப்புற சுகாதாரக் கொள்கையில் குழந்தைகளே உண்மையான ‘மாற்றத்தின் முகவர்கள்’ என அவர்களை சென்றடையும் நோக்கில், பள்ளி சுகாதாரக் திட்டக் கையேடு தயாரித்து செயல் படுத்தினர். தொடர்ந்து வந்த அரசுகள், இத்திட்டத்தினை நடைமுறைப்படுத்துவதில் தீவிரம் காட்டவில்லை. பிறகு 2020 ஆம் ஆண்டில், தேசிய கல்வித்திட்டத்தில் இது புதிய வடிவில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. நாட்டின் அனைத்து பள்ளிகளுக்கும் இதனை கட்டாயமாக்கி பயிற்றுவிப்பது அவசியம். இதனால் வருங்காலத்தில் மக்களிடையே சுகாதாரம், கழிவுநீர் குறித்த விழிப்புணர்வு, நடத்தை மாறுதலுக்கு வழிவகுக்கும்.

*நன்றி:* இந்த கட்டுரை எழுதுகையில் மானிடவியலாளர் பெ. தமிழ் ஒளியுடன் நடந்த உரையாடல்கள் கட்டுரையை செம்மைப்படுத்துவதற்கு மிகவும் உதவியது. அதோடு இந்த நேரத்தில் + நாற்பது ஆண்டுகள் என்னுடன் துறையில் பயணித்த சக ஊழியர்களின் கூட்டுமுயற்சி, ஒத்துழைப்பு, தோழமைத்துவத்தினால், கற்றதும் அதை களத்தில் செயல்பாடாக மாற்றியதும் ஏராளம், அந்த அனுபவமே இங்கு கட்டுரையாகியிருக்கிறது, அவர்களையும் நன்றியோடு நினைவு கூர்கிறேன்.

## References

Angelakis AN, Asano T, Bahri A, Jimenez BE and Tchobanoglous G 2018 Water Reuse: From Ancient to Modern Times and the Future. Front. Environ. Sci. 6:26. doi: 10.3389/fenvs.2018.00026 file:///C:/Users/ADMIN/Downloads/Water_Reuse_From_Ancient_to_Modern_Times_and_the_F.pdf accessed on 10 April 2026

Clayton, F 2023 Why Namibia's 1960s sewage purifying plant is a beacon of hope for the US water crisis: Direct potable reuse (DPR) technology has been an unqualified success. Now cities around the world want to copy the model. Nature Africa, doi: https://doi.org/10.1038/d44148-023-00349-z

Douglas, M 1984 Purity and Danger: An analysis of concepts of Pollution and Taboo, Routledge & Kegan Paul Ltd, New York

Lee, S 1874 Madras (India). Municipal commission. Sewerage of Madras: a Report Submitted ... Madras https://catalog.hathitrust.org/Record/008424583/Cite accessed on 22 April 2024

Stephanie L. W, Vicenç Acuña, Rob McDonald, Carme Font, 2021 Sewage pollution, declining ecosystem health, and cross-sector collaboration, Biological Conservation, Volume 255, 109010, ISSN 0006-3207, https://www.sciencedirect.com/science/article/pii/S0006320721000628 accessed on 10 April 2026